பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 66 தை 18ஆம் நாள் வெள்ளிக்கிழமை 01 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## 7 கிலோ கஞ்சா கிளிநொச்சியில் நேற்று மீட்பு

கிளிநொச்சி, பெப். 1
கிளிநொச்சி - புதுக்காட்டுப் பகுதியில் 7 கிலோகிராம் கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டது. அவற்றைக் கடத்தினர் என்ற சந்தேகத்தில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுத்துறை ஆழியவளைப் பகுதியில் இருந்து >> 04

### இலங்கை அரசுக்கு எதிராக

# சுதந்திர தினமன்று பிரிட்டனில் பேரணி

லண்டன், பெப்ரவரி 1
இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி மிகப் பெரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ் சொலிடாரிட்டி அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பில் தமிழ் சொலிடாரிட்டி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: >> 04

## இலங்கையின் சுதந்திர தினமன்று கிளிநொச்சியில் போராட்டம்

வவுனியா.பெப்.1
இலங்கையின் சுதந்திரமான எதிர்வரும் 4ஆம் திகதி கிளிநொச்சியில் அறவழிப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழருக்கு எப்போது சுதந்திரம் எனப் பன்னாடுகளிடம் நீதி கேட்டு இந்த அறவழிப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று >> 04


## தேர்தலுக்குத் தயாராகுமாறு கோத்தாவுக்கு கூறவில்லை

### அவர் பொய் சொல்கிறார் என்கிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, பெப். 1
அரச தலைவர் தேர்தலுக்குத் தயாராகுமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தன்னிடம் கூறியிருப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையில், அப்படியான எந்த அறிவித்தலையும் தான் வெளியிடவில்லை என்று மகிந்த ராஜபக்ச மறுத்துள்ளார்.
அதேவேளை, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் தயாராகிவிட்டார் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர், லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்திருந்த நிலையில், அந்தச் செய்தியும் பொய்யானது எனவும் மகிந்த குறிப்பிட்டுள்ளார். >> 04

## நூலகத்தையும் மைதானத்தையும் விடுவிக்குமாறு திங்கள் போராட்டம்

### அனைவரையும் அழைக்கிறார் தவிசாளர்




கிளிநொச்சி, பெப். 1
கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுசன நூலகம், விளையாட்டு மைதானம் என்பனவற்றை மீட்பதற்காகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று அந்தச் சபையின் தவிசாளர் >> 04

## அரசதலைவருக்கான தேர்தல் டிசெம்பர் 7இல் நடக்க வாய்ப்பு!

### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 1
அரசதலைவர் தேர்தல் வரும் டிசெம்பர் 7ஆம்திகதி அல்லது அதற்கு முந்திய ஒரு சனிக்கிழமையில் நடத்தப்படும் வாய்ப்பு உள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
மைத்திரிபால சிறிசேன, முற்கூட்டியே அரசதலைவர் தேர்தலுக்கான >> 04

## பலாலி வானூர்தித் தள அபிவிருத்திக்கு அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 1
பலாலி வானூர்தித்தள அபிவிருத்திப் பணிகள் ஆயிரத்து 950 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளன. இலங்கை வான் படையினர் இந்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் முதல் கட்ட அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்து பலாலியிலிருந்து தமிழ >> 04

## அரச தலைவர் வேட்பாளரை மைத்திரியே தீர்மானிப்பார்

வதந்திகளை நம்ப வேண்டாம் என்கிறார் அவர் >> 04

## நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரம் தமிழரிடமே இருந்தது

### போராலேயே பின்னடைவு ஏற்பட்டது என்றார் கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராட்சி



யாழ்ப்பாணம், பெப். 1
40 ஆண்டுகளுக்கு முன்னராக அதிகாரத்தில் இருந்தவர்கள் தமிழ் மக்களே. 30 வருடகாலமாக இடம்பெற்ற போரே அனைத்தையும் சீர்குலைத்து பின்னடைவை ஏற்படுத்தியது என்று தெரிவித்தார் >> 04

### புத்தர் சிலைகள் உடைப்பு விவகாரம்

## ஆயுதக் குழுவொன்று உருவாக எத்தனிப்பு!

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை! >> 04

## சிங்கள மயமாதலை தடுக்காவிட்டால் அரசுக்கான ஆதரவை திரும்பப்பெறுக

### வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளை சாடுகிறார் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா

யாழ்ப்பாணம், பெப். 1
வடமாகாணத்தில் அண்மைக் காலமாக பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் மிகமிக துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் அரசுக்கான தமது ஆதரவை வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் வடமாகாண முன்னாள் எதிர்கட்சித் தலைவர் தவராசா.
ஊடகங்களுக்கு அவரால் >> 04

### கோப்பாய் பொலிஸ் பிரிவுப் பகுதிகளில்

## பொதுமக்களின் விவரங்களை சேகரிக்கின்றனர் பொலிஸார்!

யாழ்ப்பாணம், பெப். 1
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களில் உள்ளவர்களின் விவரங்களை >> 04

DFCC வங்கி தரும் அதிகூடிய வட்டி 12.5% 6 மாத நிலையான வைப்பிற்கு
ஆ.ச.வ. 12.89%
DFCC நிலையான வைப்பு
சிரேஷ்ட பிரஜைகளுக்கு 13% வட்டி. ஆ.ச.வ. 13.42%
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது இனப்படுகொலை அதை ஏற்று நீதியை விரைந்து வழங்குதல் வேண்டும்

## யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 1

**முள்ளிவாய்க்காலில் நடந்தது இனப்படுகொலை என்பதனை ஏற்றுக்கொண்டு அதற்கான நீதியை வழங்குவதன் மூலமாகவே இன நல்லிணக்கம் நோக்கி நகர முடியும் இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இலங்கையின் சுதந்திரதினம் தொடர்பாக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு குறித்து அவர்களால் நேற்றையதினம் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நாற்பது வருடங்கள் கடந்துபோன இன்றைய நிலையிலும் அந்தச் சட்டம் இன்னமும் நீக்கப்படாமல் நடைமுறையில் இருக்கின்றது.

இந்த விடயம் காலங்காலமாக தமிழரை அடக்கி ஒடுக்கி அடிமையாக்கப்பட்ட இனமாக வைத்திருக்க விரும்புவதன் வெளிப்பாடே ஆகும். இலங்கை சுதந்திரம் அடைந்த நாள்தொட்டு இலங்கையில் நடந்த கலவரங்கள் தமிழர்களை இனவழிப்பு செய்யும் கலவரங்களாகவே நடந்துள்ளன. இந்த இனவழிப்பின் உச்சமே முள்ளிவாய்க்கால் போர். இலங்கையின் சிறுபான்மை இனங்களில் முதன்மையாக இருந்த நாம் இன்று மூன்றாம் நிலையை நோக்கிப் பின்தள்ளப்படுமளவுக்கு எமது உறவுகள் அழிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் ஆட்சிப்பீடம் ஏறுபவர்கள் எவராக இருந்தாலும் எவ்வாறான சட்டத்திருத்தங்கள் நடந்தாலும் அது ஒற்றையாட்சி கட்டமைப்பினையும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தையும் பேணிப் பாதுகாக்கும் வகையிலேதான் அமையும் என்பதனை வரலாறு தெளிவாக எமக்குக் கற்றுத்தந்துள்ளது. ஆதலால் வரலாற்றில் இருந்து நாம் பாடங் கற்றுக்கொள்ள வேண்டும். ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் ரீதியாக வென்றெடுக்கப்பட வேண்டிய விடயங்களைக் கூட தூரநோக்கின்றி செயற்பட்ட தமிழ் அரசியல் தலைமைகளால் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டமை தமிழ் இனத்தின் துர்ப்பாக்கிய நிலையே ஆகும்' - என்றுள்ளது. (ம-8)

# மரநடுகைத் திட்ட தொடக்க நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 1

'ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொர் மரக்கன்று' என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆயிரம் சவுக்கு மரங்களை நடுகை செய்யும் ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அராலித் துறைமுக கடற்கரையில் சனசமூக நிலையத் தலைவர் ச.யசிகரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேசசெயலாளர் திருமதி பிறேமினி பொன்னம்பலம், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# காணி தினத்தை முன்னிட்டு இன்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், பெப். 1

பன்னாட்டுக் காணி தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, மாகாணக் காணித் திணைக்களத்துடன் இணைந்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் 17ஆம் இலக்க அறையில் இன்று அரச காணிகள் தொடர்பான நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# 1,000 ரூபா கிடைக்கும் வரை மலையக மக்களுக்கு ஆதரவு

## ஜே.வி.பி. அறிவிப்பு

கொழும்பு, பெப். 1

கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் முதன்மைத் தொழிற்சங்கங்கள் மலையக மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்டன. மக்கள் கோருகின்ற ஆயிரம் ரூபா தொகை கிடைக்கும் வரைக்கும் மக்கள் விடுதலை முன்னணி யின் (ஜே.வி.பி.) ஆதரவு மலையக மக்களுக்கு என்றும் உள்ளது என்று தெரிவித்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ.




மலையக மக்களின் நாளாந்த கொடுப்பனவு 700 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டமையை எதிர்த்து அந்த மக்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன என்று வினவிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆறுமுகம் தொண்டமான் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோர் கூட்டாக இணைந்து காட்டிக் கொடுத்துள்ளனர். முதலாளிமார் சம்மேளனம் 700 ரூபாவாக நாளாந்தக் கொடுப்பனவை வழங்க நிர்ணயித்த பொழுது அதற்கு இணக்கம் தெரிவித்தமை பாதிக்கப்பட்டுத் தீர்வு கிடைக்கும் என்று போராடிய மக்களின் போராட்டக் கொள்கையையும், தியாகங்களையும் காட்டிக் கொடுத்தமையாகவே கருதப்படும். மலையக மக்களின் பிரதிநிதிகள் என்று இனி இவர்கள் குறிப்பிட்டுக் கொள்வது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியே முதல் முறையாக ஒரு முழுவதுமான விவாதத்தை நாடாளுமன்றில் ஆரம்பித்தது. இவர்களது பிரச்சினைகள் அனைத்துக்கும் சம்பள அதிகரிப்பின் ஊடாகவே தீர்வு பெற்றுக் கொள்ள முடியும் என்று வாதிட்டோம். ஆகவே இவ்விடயம் தொடர்பில் தற்போது விமர்சனங்க ளை முன்னெடுக்கும் உரிமை மக்கள் விடுதலை முன்னணியினருக்கு காணப்படுகின்றது.

நியாயமான சம்பளம் வழங்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு நியாயமற்ற முறையிலே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தொழிற்சங்கத்தினர் மலையக மக்களின் பிரதிநிதிகள் என்று குறிப்பிடுவதை காட்டிலும், முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் என்று குறிப்பிடுவதே மிகப் பொருத்தமானதாக காணப்படும். ஏனெனில் இவர்களுக்கு சாதகமாகவே தொழிற்சங்கத்தினர் செயற்பட்டுள்ளனர்.

இந்த காட்டிக் கொடுப்புக்கு ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் துணைபோயுள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழ் மக்களின் ஆதரவுடனே கூட்டு அரசு உருவாக்கப்பட்டமையினையும், மீண்டும் தலைமை அமைச்சராக ரணில் விக்ரம சிங்க நியமிக்கப்பட்டமையையும் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வுக்கு மலையக மக்களின் வாக்குகளும், வடக்கு தமிழ் பிரதிநிதிகளின் ஆதரவு வரவு செலவு திட்டத்தை வெற்றிக் கொள்ளவே தேவைப்படுகின்றது. நாட்டு மக்கள் தொடர்பில் எந்த அக்கறையும் இல்லை - என்றார். (ம-31)

# மன்னார் மாவட்டத்துக்கு தனியான குற்றப் பரிசோதனை ஆய்வு கூடம்

மன்னார், பெப். 1

மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றப் பரிசோதனை ஆய்வு கூடம் மன்னார் உயிலங்குளத்தில் நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெணான்டோ இந்த ஆய்வு கூடத்தைத் திறந்து வைத்தார்.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களின் ஆய்வுகள் தொடர்ச்சியாக வவுனியாவில் உள்ள பொலிஸ் குற்றப் பரிசோதனை ஆய்வு கூடத்தில் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள 9 பொலிஸ் நிலைய பிரிவுகளிலும் இடம்பெறும் குற்றச் செயல்களின் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ள மன்னார் உயிலங்குளத்தில் குறித்த பொலிஸ் குற்ற பரிசோதனை ஆய்வு கூடம் சுவீடன் நாட்டின் நிதி உதவியுடன் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் முயற்சியால் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-56)



# மண்டபத் திறப்பும் சிலை திரைநீக்கமும்

யாழ்ப்பாணம், பெப். 1

பொன். தெய்வேந்திரம் நினைவு மண்டபத் திறப்பு விழாவும் சிலை திரைநீக்கமும் உரும்பிராய் சைவ வித்தியா விருத்திச் சங்க கருணை இல்லத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தலைவர் வி.ரி.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருமதி வசந்தராணி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் ஆகியோர் கலந்கொள்ளவுள்ளனர். (ஐ)

# நாடாளுமன்றக் குழப்பம் தொடர்பான அறிக்கையில் பக்கச்சார்பான நிலை!

## கண்டுபிடித்தார் செகான் சேமசிங்க

கொழும்பு, பெப். 1

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பான அறிக்கை பக்கசார்பாக அமைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செகான் சேமசிங்க சாடினார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்தமை தொடர்பான அறிக்கையில் 54 ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். ஆனால், ஐக்கிய தேசிய கட்சியில் நால்வரும், மக்கள் விடுதலை முன்னணியில் ஒருவரும் மாத்திரமே குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இதிலிருந்து அந்த அறிக்கை பக்கச் சார்பானது என்பது தெளிவாகியுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தண்டிக்கப்படின், சபாநாயகர் கரு ஜயசூரியவும் தண்டிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றில் இவ்வாறு குழப்பம் ஏற்படும் போது நிலமையை சமரசப்படுத்துவதற்கு சபாநாயகர் சபையை ஒத்தி வைத்திருக்க வேண்டும். ஆனால், அந்த குழப்ப நிலை நீடிக்க அவர் உடந்தையாக செயற்பட்டார் - என்றார். (ம)

# அடிக்கல் நடும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், பெப். 1

தெல்லிப்பழை கிராமிய வலுப்படுத்தலுக்கான அமைப்புக்களின் இணைய நிறுவனத்துக்கு புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு மல்லாகம் நீதிமன்ற வீதியில் இடம்பெறவுள்ளது.

**இந்த நிகழ்வில் முதன்மை அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனா**திராசா, ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வலிவடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழை பிரதேச செயலர் ஆ.சிவசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-8.50)

### ஹூலுக்கு அச்சுறுத்தல் விடுத்த வழக்கு

# தேர்தல் திணைக்களப் பணியாளர்கள் நீதிமன்றுக்கு இன்று செல்வார்கள்

யாழ்ப்பாணம், பெப். 1

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ண ஜீவன் எச். ஹூலுக்கு, கடந்த உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் அச்சுறுத்தல் விடுத்தார் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன்போது, வடக்கு மாகாணத்தின் 5 மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், தேர்தல்கள் திணைக்களத்தின் கொழும்பு அலுவலர்கள் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல்கள் திணைக்களப் பணியாளர்கள் ஆகியோர் நீதிமன்றத்துக்குச் செல்லவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட வி. மணிவண்ணன் தன்னை அச்சுறுத்தும் வகையில் உரையாற்றினார் என்று தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்று எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன் போது பொலிஸ் சட்டப்பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் சேனாரட்ணவும் நீதிமன்றில் முன்னிலையாகவுள்ளார். (ஒ,5,105)

## இறைச்சிக் கடைகளை ஏலத்தில் விடத் தீர்மானம்

சாவகச்சேரி, பெப். 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல உள்ளூராட்சி சபைகளில் இறைச்சிக் கடைகள் இந்த வருடத்துக்கான குத்தகைக்கு விடப்படாததால் ஏலத்தில் விடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்குக் கடந்த வருட கேள்வித் தொகையே ஏலத்தின் ஆரம்பத் தொகையாக இருக்க வேண்டுமென்று உள்ளூராட்சித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து உள்ளூராட்சி சபைகள் இந்தமுறை கேள்வி அறிவித்தல் மூலமாகக் குத்ததைக்கு விடப்படாத மாடு, ஆடு, கோழி ஆகிய இறைச்சிக் கடைகளை இந்த வருடத்துக்குள் ஏலத்தில் விடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

சாவகச்சேரி நகரசபையினர் இந்த வருடத்துக்கு மாட்டிறைச்சிக் கடைகள், ஆட்டிறைச்சிக் கடைகள் மற்றும் கோழி இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை எதிர்வரும் எட்டாம் திகதி நகரசபை முன்றலில் ஏலத்தில் விடவுள்ளன என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல உள்ளூராட்சி சபைகள் இறைச்சிக் கடைகளை ஏலத்தில் விடவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## சாரதிகள் இருவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, பெப்.1

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டுடன் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகள் தனித்தனியாக விசாரிக்கப்பட்டு ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபாவும், மற்றையவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டன.

இதேவேளை மதுபோதையில் ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 14 ஆயிரம் ரூபாவும், மதுபோததையில் வாகனம் செலுத்தியவருக்கு 7 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஜ-9)

### 28 ஆண்டுகளாக

# கடற்படை ஆக்கிரமிப்பு இழப்பீடுகள் இல்லை

### மண்டைதீவு மக்கள் ஆதங்கம்

*யாழ்ப்பாணம், பெப். 1*

*மண்டைதீவு கிழக்கில் விவசாயக் காணியை 28ஆண்டுகளாக கடற்படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர். காணியை விடுவிக்க மறுக்கும் கடற்படையினர், காணியை ஆக்கிரமித்து வைத்திருப்பதற்குரிய இழப்பீடுகள் எவையும் வழங்கவில்லை என்று பொதுமக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.*

மண்டைதீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் முதலாம் வட்டாரத்தில் அமைந்திருக்கும் செம்மண் நிறைந்த மேட்டு விவசாயக் காணியை 28 ஆண்டுகளாக கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

மிளகாய், வெங்காயம், தக்காளி, வெண்டி, கத்திரி, புகையிலை ஆகிய உணவுப் பயிர்களின் செய்கைக்கு ஏற்ற இந்தக் காணி போர்க்காலச் சூழ்நிலையிலிருந்து இன்றுவரை விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

வெள்ளம், வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டால் உடனடியாக உதவிகள் வழங்கும் அரச அதிகாரிகள், 28 ஆண்டுகளாக கடற்படையினரின் ஆக்கிரமிப்பிலிருக்கும் காணிக்கு எந்த இழப்பீட்டையும் பெற்றுத்தரவில்லை.

18 ஏக்கர் ஒரு றூட் 10 பேர்ச்சஸ் மேட்டு விவசாயக் காணியை மீட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ,5)

## புல்லைப் பதப்படுத்தி பயன்படுத்த பண்ணையாளர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.1

மாடுகளுக்கான புல்லை அனைத்துக் காலத்திலும் தடையில்லாது வழங்கும் நோக்குடன் புல்லைப் பதப்படுத்தும் முறை தொடர்பாகப் பண்ணையாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது என்று மாவட்டக் கால்நடை உற்பத்திச் சுகாதாரப் பராமரிப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டதாவது

பால் உற்பத்திக்காக பண்ணையாளர்கள் புல் வளர்க்கின்றனர். குறைந்த எண்ணிக்கையிலான மாடுகளை வைத்திருப்பவர்கள் புல் மற்றும் புண்ணாக்கு போன்றவற்றைத் தீவனமாக வழங்கலாம். ஆனால் பண்ணையாளர்களுக்கு இந்த தீவனம் அதிகளவில் தேவைப்படுகிறது. பால் அதிகம் சுரக்க கூடியதும், இலகுவில் வளர்க்க கூடியதுமான "சி.ஒ 3" வகை புல்லை உற்பத்தி செய்வதற்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஆனால் அனைத்துக் காலத்திலும் புல் கிடைக்காது. அதைப் போன்று நோய்த் தாக்கம் ஏற்பட்டால் புல் அழியும் நிலமையும் உள்ளது. புல் உற்பத்தி குறைந்தால் பால் உற்பத்தியும் குறையும். இவற்றைக் கருத்தில் கொண்டு புல்லைப் பதப்படுத்தி வைத்திருக்கும் "சைலோஜ்" முறை தற்போது பண்ணையாளர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றது.

புல் அதிகம் கிடைக்கும்போது, சீனிக் கரைசலுடன் சேர்த்துப் புல்லைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் இந்த இலகுவான முறை மூலம் 6 மாதங்கள் வரைப் புல்லைச் சேமிக்க முடியும். இது சிறந்த போசாக்குத் தன்மையுடன் இருக்கும். புல் தட்டுப்பாடான காலத்தில் இவற்றைப் பயன்படுத்த முடியும்.

இது தொடர்பான பயிற்சிகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. நடப்பு வருடத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 பேருக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுப் புல் வெட்டும் உபகரணமும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)



## படைப் புழுவை ஒழிக்க 3 குழுக்கள் உருவாக்கம்

### மாவட்ட விவசாயப் பிரிவு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாண மாவட்டத்தில் படைப் புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கும் மூன்று மட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட செயலக விவசாயப் பிரிவு தெரிவித்தது.

படைப் புழுத் தாக்கத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு மாவட்ட செயலக விவசாயப் பிரிவின் ஏற்பாட்டில் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. அந்தச் செயலமர்விலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

**குழுக்கள்**

படை புழுவின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் குறைவாக இருந்தாலும் அதன் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்காக மூன்று மட்டங்களில் மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட மட்ட பீடைக் கட்டுப்பாட்டு குழு, கமநல சேவை நிலைய மட்டப் பீடைக் கட்டுப்பாட்டு குழு, வெளிக்கள மட்டப் பீடைப் கட்டுப்பாட்டு குழு ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

வெளிக்கள மட்ட குழுவில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர், விவசாய போதனாசிரியர், கிராம அலுவலர், தொண்டர் சேவை அடிப்படையில் பங்குபற்றும் அலுவலர்கள் உள்ளடங்குவர். இவர்கள் கிராம மட்டத்தில் பீடையை இனங்கண்டு, அது தொடர்பான அறிவுறுத்தலை மக்களுக்கு வழங்கி தாக்கம் தொடர்பாக அறிக்கையைக் கமநல சேவை மட்ட குழுவுக்கு ஒப்படைப்பர்.

அந்த குழு பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டு தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களை அழிப்பதா இல்லையா போன்ற தீர்மானங்களை எடுக்கும். மாவட்ட மட்ட குழு இந்தக் குழுக்களை நிர்வகித்து அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து பீடை கட்டுப்படுத்தல் தொடர்பான முன்னேற்ற அடைவை மாகாண முன்னேற்ற அடைவு கூட்டத்தில் சமர்ப்பிக்கும்.

**எதிர் கால திட்டம்**

படைப் புழு தற்போதுதான் எமது நாட்டுக்குள் புகுந்துள்ளது. படைப் புழுத் தாக்கத்தில் இருந்து பாதுகாத்து கொள்வதற்கான இயற்கையான திட்டம் மற்றும் இராசயன பாவனை தொடர்பாக விவசாயிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

எமது மாவட்டத்தில் உள்ள நெல் போன்ற முக்கிய பயிர்களைத் தாக்கினால் விவசாயம் பெருமளவில் பாதிக்கும். இராசயன ரீதியாக இல்லாமல் வேறு முறைகளை கையாளுதல் தொடர்பில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இந்த ஆராய்ச்சி தற்போது நடைபெறுகின்றது.

மரவள்ளி, துளசி, சணல் போன்ற தாவரங்களை பக்க பயிராக சுழற்சி முறையில் பயிரிடுவதன் மூலம் படைப் புழு தாக்கத்தை கட்டுப்படுத்தலாம் என்ற நோக்கில் ஆராய்ச்சி இடம்பெறுகின்றன. அதே போன்று என்.பி.வி என்ற வைரஸ் மூலம் இந்த படைப் புழுக்களை அழிக்கலாம் என்ற நோக்கில் அதை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை எதிர் காலத்தில் படைப் புழுக்களை அளிப்பதற்கான திட்டங்களாக அமையும்.

**இழப்பீடுகள்**

விவசாய பயிர்கள் அழிவடைந்தால் அதற்கான இழப்பீடுகள் மற்றும் காப்புறுதிகள் வழங்கப்படும். ஆனால் பீடைகளால் பாதிப்படையும்போது அதற்கான இழப்பீடுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லை. ஆனால் சோளப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 200 ரூபாவிலான காப்புறுதி திட்டம் ஒன்று உள்ளது. பயிர் அழிவடையும் பொது ஒரு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா இழப்பீட்டு தொகையாக வழங்கப்படும். படைப் புழுவால் பாதிக்கப்பட்ட சோள செய்கை விவசாயிகளுக்கும் இந்த இழப்பீட்டு முறையை பயன்படுத்தி அதற்கான தொகையை வழங்குவது தொடர்பில் ஏதும் ஏற்பாடுகளை செய்யலாம் என்று நோக்கில் இது தொடர்பில் விவசாய அமைச்சுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், கால்நடை திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-7)

## சுதந்திரதினமன்று...
இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்று இம்முறை தனது 71ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ளது. ஆனால் தமிழர்கள் இன்னும் சுதந்திரம் இல்லாதவர்களாகவே உள்ளனர். தமிழனத்தை அடிமைப் படுத்துவதையே கொழும்பு அரசு காலாகாலமாகச் செய்து வந்துள்ளது. இது வரலாற்று ரீதியிலான உண்மை. இன்றும்கூட தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் இலங்கையில்உச்சக்கட்ட அளவில்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகையதொரு பின்னணியில் இலங்கையில் சுதந்திர தினத்தன்று இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதானது தவிர்க்க முடியாததாக அமைகிறது.
அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், நில அபகரிப்பை நிறுத்த வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரங்களை வெளிப்படுத்த வேண்டும், மலையக மக்களின் அடிப்படை உதியத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும், மன்னார் புதைகுழி விவகாரத்துக்கு நீதி வேண்டும், தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமை அங்கிகரிக்கப்பட வேண்டும், புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இம்முறை ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. பிரிட்டனில் உள்ள அனைத்து தமிழர்களும் இந்தப் போராட்டத்துக்கு அணி திரள வேண்டும் - என்றுள்ளது. (ம)

## நூலகத்தையும்...
தெரிவித்துள்ளார். சபைக்குச் சொந்தமான பொது நூலகம் மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பன தொடர்ச்சியாக இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அதைக் கண்டித்து எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஏ9 வீதியில் அமைந்துள்ள பொது நூலகக் காணியின் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. கரைச்சி பிரதேச சபையின் கொள்கை நடைமுறைப்படுத்தல் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. பொது நூலகத்தை நேசிக்கின்ற புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்கள் அனைவரையும் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (த-6)

## அரச தலைவர்...
கொழும்பு, பெப். 1
இந்த வருடமும் அடுத்த வருடமும் தேர்தல் வருடங்கள்தான். மாகாண சபைத் தேர்தலே முதலில் நடக்கும். இந்த வருடம் விரைவில் அந்தத் தேர்தல் நடத்தப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக நானே உள்ளேன். இந்தக் கூட்டணியின் அரச தலைவர் வேட்பாளரை நானே தீர்மானிப்பேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பின்னர் அரச தலைவர் தேர்தல் நடக்கும் அல்லது அரச தலைவர் தேர்தல் நடைபெற்ற பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும். இந்த இரண்டு தேர்தல்களுக்கும் முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடக்கும். இதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. இந்த மூன்று தேர்தல்களும் நீதியாக நடைபெற அனைத்துத் தரப்புகளும் ஒத்துழைக்க வேண்டும்.
அரச தலைவர் தேர்தலே முதலில் நடைபெறவுள்ளது எனவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பங்காளிக் கட்சியாகக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் எனவும் சிலர் விசமத்தனமான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வதந்திகளை எவரும் நம்ப வேண்டாம்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக நானே உள்ளேன். இந்நிலையில், எனது அனுமதி இல்லாமல் கட்சியில் உள்ள பலர் பொய்ப்பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் நான் நடவடிக்கை எடுக்கவுள்ளேன். எமது கூட்டணியின் அரச தலைவர் வேட்பாளரை நானே தீர்மானிப்பேன் - என்றார்.
"எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் தாங்கள் போட்டியிட மாட்டீர்களா?" என்ற கேள்விக்கு. அதுதானே சொன்னேன் எமது கூட்டணியின் அரச தலைவர் வேட்பாளரை நானே தீர்மானிப்பேன் என்று. இந்தக் கருத்துக்குள் நான் மீண்டும் போட்டியிடுவேனா? இல்லையா? என்ற கேள்விக்கான பதிலும் அடங்கியுள்ளது. அதாவது நான் போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்தும் நான்தான் முடிவெடுக்க வேண்டும்' - என்றார். (ம-ஒ.5.22)

## ஆயுதக்...
கொழும்பு, பெப். 1
கண்டி மற்றும் மாவனெல்லை ஆகிய முக்கிய நகரங்களை அண்மித்த பகுதிகளில் ஒரே இரவில் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் அடித்துச் சேதமாக்கப்பட்ட சம்பவங்களுடன் ஆரம்பமான புத்தர் சிலை உடைப்பு விவகார விசாரணைகள், இலங்கையில் அடிப்படைவாத சிந்தனையை மையப்படுத்தி ஆயுதக் குழுவொன்று உருவாக எத்தனிக்கின்றமை வெளிப்படுத்துகின்றது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிக்கை விடுத்துள்ளது.
குறிப்பாக புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தில் நேரடியாக தொடர்புபட்டனர் என்று கருதப்பட்டு தேடப்பட்டு வரும் சாதிக் அப்துல்லா, சாகித் அப்துல்லா ஆகிய சகோதரர்களுக்கு மேலதிகமாக பலராலும் அறியப்படும் மௌலவி ஒருவர் உள்ளிட்ட மேலும் பலர் அந்த விசாரணை வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.
இதுவரை புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தை மையப்படுத்தி இடம்பெற்ற விசாரணைகளில் 15 பேர் (பிரபல மௌலவி ஒருவர் உட்பட) கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (ம-71)

## இலங்கை...
தெரிவிக்கப்பட்டது. உரிமைக்கான போராட்ட ஒருங்கிணைப்புச் செயலகம் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பாக அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இறுதிப் போருக்கு பின்னரான ஈழத்தமிழர்களை அழிக்கும்வகையில்இலங்கை அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகள் நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளன. அது நில ஆக்கிரமிப்பிலிருந்து, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முதல் நீண்டநாள் சிறைகளில் வாடும் எமது உறவுகளின் விடுதலை வரை தொடர்ந்து செல்கின்றது. போர் முடிந்து பத்து வருடங்கள் கழிந்த நிலையிலும் தீர்வில்லாமல் இந்தப் பிரச்சினைகள் நீண்டுகொண்டே செல்கின்றன. இவற்றுக்கு நீதி வேண்டி, தமிழருக்கு எப்போது சுதந்திரம் என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் அனைவரும் எமது கோரிக்கையை பன்னாடுகளிடம் எடுத்துரைக்க இலங்கையின் சுதந்திரதினமான எதிர்வரும் நான்காம் திகதி திங்கள்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமிஆலய முன்றலில் அணிதிரண்டு நீதிக்காக குரல்கொடுக்க ஒன்றிணைய வேண்டும் - என்றுள்ளது. (எ-110)

## 7 கிலோ...
கஞ்சா கடத்தப்படுகிறது என்று சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே இந்த கஞ்சாப் பொதி மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அதனைக் கடத்தினர் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டு பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸாரால் சந்தேக நபர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (ம-6)

## தேர்தலுக்குத்...
அரச தலைவர் வேட்பாளர் விவகாரம் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் பொய்யுரைத்து வருகின்றார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.
மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ அல்லது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியோ தனித்து நின்று முடிவெடுக்க முடியாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் ஒரே கூட்டணியைச் சேர்ந்தவை. அதேவேளை, இந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சியாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி இல்லாவிடினும் அதில் உள்ளவர்கள் வேறு ஆள்கள் அல்லர். இந்தக் கூட்டணியைச் சேர்ந்தவர்களே சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் உள்ளார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத்துத் தான் அரச தலைவர் வேட்பாளர்ரைத் தீர்மானிப்போம்.
இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நாம் பேச்சு நடத்துவோம். அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் அவசரப்பட்டு முடிவு எதையும் எடுக்கமாட்டோம். வெற்றியை இலக்காகக்கொண்டு அரச தலைவர் வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவார் - என்றார். (ஒ.5.22)

## அரசதலைவருக்கான...
அழைப்பை விடுக்காமல், தமது முழுப் பதவிக்காலமும் பதவியில் இருக்க முடிவு செய்தால், அரசதலைவர் தேர்தல் வரும் நவம்பர் 9ஆம் திகதிக்கும் டிசெம்பர் 9ஆம்திகதிக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை ஒக்ரோபர் 22 ஆம்திகதி இறுதி செய்வதற்குத் தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. அன்றைய நாளில் தேர்தலுக்கான அறிவிப்பைத் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டால், குறைந்தபட்சம் அடுத்த நான்கு வாரங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த)

## பலாலி...
கத்துக்கான வானூர்திச் சேவைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. சிவில் வானூர்திப் போக்குவரத்துத் திணைக்களம் அதற்கான பணிகளை முன்னெடுத்திருந்தது. ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சியை அடுத்து இந்தப் பணிகள் கிடப்பில் போடப்பட்டன.
ரணில் விக்கிரமசிங்க கடந்த டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி தலைமை அமைச்சராக மீண்டும் பதவியேற்றதைத் தொடர்ந்து பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்திப் பணிகள் மீள ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டன.
அந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்ற அமைச்சால் முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஓ,5)

## சிங்கள...
அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார் அவர். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.
வவுனியா வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கற்சல் சமணங்குளத்தையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் சப்புமல்கஸ்கந்த என பெயர் மாற்றி சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் ஒரு புறத்திலும், நெடுங்கேணி பிரதேசத்துக்கு உட்பட்ட ஊற்றுக்குளம் என்ற தமிழ்க் கிராமத்தில் காடுகள் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் மறுபுறத்திலும் அண்மைக்காலமாக தீவிரமாக நடைபெறுகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.
அத்துடன் ஊற்றுக்குளத்தில் ஒரு பௌத்த துறவி இரு பொலிஸாருடன் தங்கியுள்ளார் என்றும் அறியவருகின்றது. இதேவேளை எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல தொல்பொருள் திணைக்களம் சமணங்குளம் விநாயகர் ஆலயத்தினை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தொல்பொருள் பிரதேசமாக அறிவிப்புச் செய்வதற்கு முயன்று வருகிறது. நாயாறு நீராவியடி ஏற்றத்தில் பல்லாண்டுகாலமாக இருந்த பிள்ளையார் சிலைக்கு அண்மையில் புத்தர் சிலை ஒன்றை தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் அண்மையில் நிறுவியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.
தொல்பொருள் சான்றுகள் இருப்பதாக கருதும் இடங்களை பாதுகாத்து மேலும் பாதிப்படையாத வகையில் பராமரிப்பதுவே தொல்பொருள் திணைக்கள சட்டமூலத்தின் கீழ் திணைக்களத்துக்கான கடமையாகும். அவ்வாறான இடங்களில் புதிய சிலைகளை அமைப்பதற்கு தொல்பொருள் திணைக்களத்துக்கு சட்டத்தில் அதிகாரம் இல்லை. இருந்தும் தொல்பொருள் திணைக்களம் அவ்வாறாக செயற்படுபவர்களின் பின்னால் நின்று செயற்பட்டு வருகின்றது.
வனங்களைப் பாதுகாப்பதாக பல தமிழ் பேசும் மக்களை அவர்களது பூர்வீக இடங்களில் குடியேறவிடாது தடுத்துவரும் வனவிலங்குத் துறை, பிக்குமார் காடழிப்பில் ஈடுபடும்போது மட்டும் மௌனமாக இருப்பது ஏன்?
இவ்வாறான அநீதியான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு அரசமைப்பில் மாற்றம் தேவையில்லை. சாதாரண ஒரு அமைச்சர் நினைத்தால் இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். இதைக்கூட செய்விக்கமுடியாமல் நாம் இந்த நாட்டின் ஜனநாயகத்தையும் பாதுகாத்து இந்த அரசையும் தொடர்ந்து பாதுகாப்பதில் என்ன பயன்? அரசமைப்பு வரும் என்று கூறிக்கொண்டு எமது பிரதேசங்கள் பறிபோவதை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்காமல் இவற்றை தடுப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் உடன் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்வாறான விடயங்களைத் தடுப்பதற்கு அரசு முன்வராவிட்டால் அதற்கு தொடர்ந்து ஆதரவு தருவதனை தமிழர் பிரதிநிதிகள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ம)

## பொதுமக்களின்...
பொலிசார் சேகரித்து வருகின்றனர்.
குறித்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீடுகள், நிறுவனங்களுக்கு நேற்று வியாழக்கிழமை காலைசிவில்உடைகளில்சென்றவர்கள்தம்மை பொலிசார் என அடையாளப்படுத்தி, குடும்ப விவரங்களை கோரும் படிவங்கள்ள உரிமையார்களிடம் கையளித்து அதனை நிரப்பித் தருமாறு உத்தரவிட்டுச் சென்றுள்ளனர்.
சில வீடுகளின் உரிமையாளர்கள் எதற்காக விபரங்களைக் கோருகின்றீர்கள் என அவர்களிடம் கேட்டபோது, எமக்கு எதுவும் தெரியாது எனவும் கொழும்பில் இருந்து இந்தப் படிவம் வந்தது, அவர்களின் உத்தரவின் பேரில்தான் நாம் விவரங்களைக் கோருகின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர் என்று மக்கள் குறிப்பிட்டனர். (ம-37)

## நாற்பது...
யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராட்சி.
கடந்த வருட உயர்தரப் பரீட்சையில் அதிசிறந்த பெறுபேற்றைப் பெற்ற 30 மாணவர்கள் இராணுவத்தால் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர். பலாலி பாதுகாப்புத் தலைமையகத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தர்சன ஹெட்டியாராட்சி மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் சமாதானத்தையும், அபிவிருத்தியையும் முன்னெடுக்க இராணுவம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. 30 வருடங்களாக எமது நாட்டில் கொடிய போர் இடம்பெற்றது. அந்தப் போரில் வடக்கு கிழக்கு மக்கள் பாதிக்கப்பட்டமை அனைவரும் அறிந்த விடயம். போரால் வடக்கு - கிழக்குப் பகுதிகளின் கல்வி அடைவுகள் அடிமட்டத்துக்குச் சென்றதை நாம் அறிவோம். 40 வருடங்களுக்கு முன்னர், உயர் அதிகாரத்தில் இருந்தவர்கள் தமிழ் மக்களே. என்பதனை மாணவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதில் மிக சிரத்தையுடன் செயற்பட வேண்டும் - என்றார்.
யாழ்ப்பாணத்தல் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில், மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு, பாடசாலை உபகரணங்கள் மற்றும், பல்கலைக்கழகத்திற்குச் செல்லவுள்ள மாணவர்களுக்கு கல்விக்கான ஊக்குவிப்புத் தொகையாக 5 ஆயிரம் ரூபா என்பன நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், வாழ்வகத்தைச் சேர்ந்த விழிப்புலனற்ற இரு மாணவர்களுக்கு உயர் கல்விக்காக எதிர்வரும் 3 வருடங்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா தொகையும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம-26)

போதைப்பொருள் விற்பனைகள் தொடர்பில் தகவல் வழங்கியதற்காக தாக்கப்பட்டமை

# மனித உரிமைகள் ஆணைக்குழு மாணவனுக்காக குரல் கொடுப்பு

*தொடர்ந்து கண்காணிப்போம் என்றும் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 1

**தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தின் போது போதைப்பொருள் விற்பனை தொடர்பில் தகவல் வழங்கி பின்னர் மர்மக் குழுவால் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் மாணவன் விடயத்தில் நேரடி அக்கறை செலுத்தியுள்ளது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.**

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் குறித்த மாணவனை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் ரி.கனகராஜ்நேரில்சென்று நேற்றுப் பார்வையிட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விடயங்களையும் அவர் கேட்டறிந்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் ரி.கனகராஜ் தெரிவித்ததாவது: மாணவன் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் இது வரையிலான நடவடிக்கை தொடர்பில் பொலிஸாரிடம் அறிக்கையொன்று கோரவுள்ளோம். இந்த விடயத்தில் பொலிஸார் அசிரத்தையுடனேயே செயற்பட்டனர் என்று தெரியவருகிறது. இது தொடர்பான நகர்வுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும் - என்றார். (ம-214)





## கரித்தாஸ் உதவிக் கரத்தின் 20 ஆண்டுகள் நிறைவு நிகழ்வு

மன்னார், பெப்.1

மன்னார், கரித்தாஸ் வாழ்வுதயத்தின் ஒரு பிரிவாகிய உதவிக்கரம் பிரிவின் 20 ஆண்டுகள் நிறைவு நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

20 வருடங்களாக உதவிக்கரம் அமைப்பினால் பயன் அடைந்த பயனாளர்களை ஒன்று திரட்டி பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நேற்று ஊர்வலம் ஒன்றும் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து சக்கர நாற்காலி மதிப்பிடம் பெருத்துதல் பிரிவின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ, மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை விக்டர் சோசை அடிகளார், மன்னார் பிரதேச செயலர் முன்னை நாள் உதவிகர அமைப்பின் இயக்குநர்கள், உழியர்கள் மற்றும் பயனாளர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் தெரிவு செய்யப்பட்ட புதிய பயனாளர்களுக்கான சக்கர நாற்காலி மற்றும் மாற்று நிலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ-56)

## கிளிநொச்சி விவசாயிகளிடமிருந்து இன்றிலிருந்து நெல் கொள்வனவு!

*நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப். 1

விவசாயிகளிடமிருந்து இன்று தொடக்கம் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட நெல்சந்தைப்படுத்தும் சபையினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடைகள் ஆரம்பித்துள்ளன. தனியார் தற்போது நெல் கொள்முதல் செய்துவருகின்றனர். அதனால் இன்று தொடக்கம் நெல் சந்தைப்படுத்தும் சபையினர் நெல் கொள்வனவை ஆரம்பிக்கவுள்ளனர்.

ஒரு விவசாயிடமிருந்து 2ஆயிரம் கிலோக்கிராம் நெல் கொள்வனவு செய்யப்படும். நாடு 38 ரூபாவுக்கும் சம்பா 41 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யப்படவுள்ளன. அதற்கான படிவங்களை களஞ்சியசாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்று நெல் சந்தைப்படுத்தும் சபையினர் மேலும் தெரிவித்தனர். (த-6)

## எம்.ஜி.ராமச்சந்திரனின் 102ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.1


தமிழகத்தின் முன்னாள் தலைவர்,மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 102 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகளை முன்னிட்டு, பண்டத்தரிப்புப் பிரதேச எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழக விளையாட்டுக் கழகத் தலைவர் நா.முருகானந்தம் தலைமையில் வடமாகாண ஆண்களுக்கான ஈருருளி ஓட்டப் போட்டி இடம்பெற்றது.



பண்டத்தரிப்பு சந்தியில் ஆரம்பமான போட்டியின் ஆரம்பிப்பாளராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் கலந்து சிறப்பித்தார்.

முதலாமிடத்தை பா.வின்ஸ்ராசாவும், 2ஆவது இடத்தை பா.பிரணவதாசும்,3 ஆவது இடத்தை ரி.செந்தூரனும்பெற்றுக்கொண்டனர். வட்டுக்கோட்டை பிரதேச எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத்தால் சுழிபுரம் இளைஞர் கழகத்தலைவர் வை.மாறன் தலைமையில் சுழிபுரம் கல்விளான் பகுதியில் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண சபை முன்னாள்உறுப்பினர் எஸ்.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக வட பிராந்திய எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத் தலைவர் வ.இ.செல்வக்குமார் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் 11 பேருக்குக் கற்றல் உபகரணங்களும் வ்ழங்கப்பட்டன. (க)



மன்னார் மூர் வீதியில்

## பீடி சுற்றும் 479 கிலோ இலைகள் கூலர் வாகனத்திலிருந்து மீட்பு!

*வாகன் உரிமையாளர் தலைமறைவு*

மன்னார், பெப். 1

மன்னாரில் சந்தேகத்துக்கிடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கூலர் வாகனத்திலிருந்து பீடி சுற்றும் ஒரு தொகுதி இலைகள் மீட்கப்பட்டுள்ளன என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மூர்வீதி பள்ளிவாசல் ஒன்றின் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்திலிருந்தே நேற்று அவற்றை மீட்டதாகத் தெரிவித்தனர்.

குறித்த வாகனம் அந்த இடத்தில் நீண்ட நேரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதி மக்கள் மன்னார் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கினர்.

வாகனத்தைப் பார்வையிட்டனர். எனினும் வாகனத்தின் உரிமையாளர் நீண்ட நேரமாகியும் அந்த இடத்துக்கு வரவில்லை. பொலிஸார் வாகனத்தை மன்னார் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

அங்குகூலர்வாகனக்கதவைப்பொலிஸார்திறந்துபார்த்தபோதே ரெஜிபோம் பெட்டிகளில் 17 பொதிகளைக் கொண்ட பீடி சுற்றும் இலைகள் இருந்தமை கண்டறியப்பட்டன என்றும் அவற்றை நிறுத்தபோது 479 கிலோக் கிராம் நிறையுடையவையாகக் காணப்பட்டன என்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பீடி சுற்றும் இலைகளைச் சட்ட விரோதமாகக் கொண்டு செல்வதற்காகப் பதுக்கி வைத்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

குறித்த வாகனத்தை எவரும் உரிமை கோரவில்லை. விசாரணை இடம்பெறுகிறது என்று மன்னார் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-56)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்ப்பாணம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை திறந்தவெளி அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் இராமசாமி சிறிதரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுவாமிநாதப்பிள்ளை தேவமனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ)



## அரச காணியில் தறிக்கப்பட்ட 32 குற்றிகளுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப். 1

அரச காணியில் தறிக்கப்பட்ட 32 மரக்குற்றிகளை மீட்டுள்ளதாகவும் அவற்றைக் வெட்டிக்கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி அரச காணியில் அனுமதிப்பத்திரமின்றி பல்வேறு வகையான காட்டு மரங்களைத்தறித்துவிற்பனைக்காக எடுத்துச்செல்ல இருந்த நிலையிலேயே 32 மரக்குற்றிகளும் மீட்கப்பட்டன.

பாலை, வேம்பு, நாவல் போன்ற குற்றிகளே மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அவை ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று சதுரங்க தெரிவித்தார். (த-6)


## 'மகா வித்தியன்' நிகழ்வு சிறப்புறுவதற்கு உதவுக!


*தனியார் கல்வி நிலயங்களை கோருகிறார் வவு. நகர பிதா*

வவுனியா, பெப். 1

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தின் 'மகா வித்தியன்' நிகழ்வு சிறப்புறுவதற்கு தனியார் கல்வி நிலையங்களை மூடி ஒத்துழைக்குமாறு வவுனியா நகரபிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியாவில் மிகவும் தொன்மையானதும், பழமையானதும், வரலாற்று சிறப்பு மிக்கதுமான வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுகிழமை முதலாவது 'மகாவித்தியன்' நிகழ்வை நடத்தவுள்ளது. இதனால் தனியார் கல்வி நிறுவனங்கள் தமது கல்வி நடவடிக்கைகளை நிறுத்தி மாணவர்களை குறித்த நிகழ்வில் பங்குபற்ற நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா நகரசபையின் தவிசாளர் இ.கௌதமன் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-110)





உறவினர்கள் சுடர்களை ஏற்றி மலர் மாலைகளை அணிவிக்கின்றனர்.

# பொன்னாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப்.1

**பொ**ன்னாலையில் கடற்றொழிலுக்குச் சென்றபோது படையினரால் படுகொலை செய்யப்பட்ட 11 தொழிலாளர்களின் 22 ஆவது நினைவேந்தல் நிகழ்வு பொன்னாலை சிறி கண்ணன் சனசமூக நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு நினைவேந்தினர்.

படுகொலையில் தனது தந்தை மற்றும் இரு சகோதரர்களை இழந்த நா.தேவராசா பிரதான சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து திருவுருவப் படங்களுக்கு அவர்களது உறவினர்கள் சுடர்களை ஏற்றி மலர் மாலைகளை அணிவித்தனர். தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தினர்.

1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி கடற்றொழிலுக்குச்சென்ற தொழிலாளர்கள் பொன்னாலை கொத்தத்துறை படை முகாமுக்கு முன்பாக அனுமதி பெறுவதற்காகக் காத்திருந்தபோது அந்தப் பகுதியில் இடம்பெற்ற கிளேமோர் தாக்குதல் ஒன்றைத் தொடர்ந்து படையினரின் தாக்குதலில் 9 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

1985 ஆம் ஆண்டு கடற்றொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள் மீது படையினர் நடத்திய தாக்குதலில் 2 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். (எ)

# வாய்ப்புகளை மாணவர்கள் சரியாக பயன்படுத்த வேண்டும்



மட்டக்களப்பு, பெப்.1

மாணவர்கள் தமக்கு கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று எருவில் கண்ணகி மகாவித்தியாலயத்தின் அதிபர் சா.பரமானந்தம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு எருவில் கண்ணகி மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அழியா செல்வமாகிய கல்விச் செல்வத்தினை ஒவ்வொரு மாணவரும் உரிய காலத்தில் கற்கவேண்டும் கல்விக்கு வறுமை என்பது எப்போதும் தடையாக அமைந்துவிடக்கூடாது என்பதனை கவனத்தில் கொண்டே இந்த உதவி உங்களுக்கு முதற்கட்டமாக செய்யப்படுகின்றது.

பாடசாலை பருவம் என்பது எவராலும் எளிதில் மறந்துவிட முடியாததொன்று அந்த பருவத்தினை பயனுள்ளதாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் அந்தப் பருவத்தில் ஒவ்வொரு மாணவரும் ஒழுக்கமுள்ள சமூகத்தின் நல்ல குடிமகனாக வருவதற்கான அடித்தளத்தை இடவேண்டும்." என்றார். (ஐ)

# நாய்கள் காப்பகத் திட்டம் ஆளுநரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

நாய்களுக்கான காப்பகம் அமைப்பது தொடர்பான திட்டம் வடக்கு மாகாண ஆளுநரிடம், கலாநிதி ஆறுதிருமுருகனால் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தெரு நாய்களைப் பிடித்து அவற்றைக் காப்பகத்தில் வைத்துப் பராமரிப்பது என்ற திட்டம் கலாநிதி ஆறுதிருமுருகனால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் காப்பகத்துக்கான இடம் தேடப்பட்டு வந்த நிலையில், தற்போது இயக்கச்சியில் இடம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இடம் கிளிநொச்சி மாவட்டத்துக்குள் உள்ளடங்குவதால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தெரு நாய்களையும் பொறுப்பேற்றுப் பராமரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை கலாநிதி ஆறு திருமுருகன் முன்னெடுத்திருந்தாலும், அதற்கான ஒப்புதல் மற்றும் ஏனைய நிர்வாக ஒழுங்குகளுக்காக அந்தத் திட்டம் தொடர்பாக விவரங்கள் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது

இந்தக் காப்பகத் திட்டம் அடுத்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-105)

# மெய்வன்மைப் போட்டியின்போது இனந்தெரியாதோர் புகுந்து அடிதடி

யாழ்ப்பாணம், பெப். 1

திருநெல்வேலியிலுள்ள பாடசாலையில் மெய்வன்மைப்போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென உள்நுழைந்த 15பேர் கொண்ட கும்பல் பழைய மாணவர்கள் மீது அடிதடி நடத்தியது.

இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. முச்சக்கர வண்டியிலும், உந்துருளிகளிலும் சுமார் 15பேர் கொண்ட கும்பல் பாடசாலையை வந்தடைந்தது. கைகளில் பொல்லுகள் வைத்திருந்தனர்.

பாடசாலை வளாகத்துக்குள் உரத்த குரலில் கத்தியவாறும், சபைக்கு ஒவ்வாத வார்த்தைகளைப் பேசியவாறும் திடீரெனப் புகுந்தனர். மாணவர்கள், ஆசிரியர்கள், விருந்தி னர்கள் உள்ளிட்ட அனைவரும் நிலை தடுமாறினர். மெய்வன்மைப் போட்டியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பழைய மாணவர்கள் மீது, அந்தக் கும்பல் சரமாரியாக தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

சுமார் 20 நிமிடங்கள் பாடசாலை வளாகத்தினுள் நின்று குழப்பம் விளைவித்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் 16 வயது முதல் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டபோதும், பொலிஸார் நீண்ட நேரத்தின் பின்னரே அந்த இடத்துக்கு வருகை தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,105)



# முன்னாள் போராளிக்கு நிதி உதவி கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

நாரந்தனை, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா நேற்று வழங்கப்பட்டுள்ளது. இரு பிள்ளைகளின் தந்தையான இவர் இரு கண் பார்வையும் இழந்த நிலையில், வாழ்வாதாரத்துக்கான ஈருருளிகள் திருத்தும் பணியை மேற்கொண்டு வருகின்றார். அவர் தனது கடையை அமைப்பதற்கு வசதியாக மக்கள் நலன் காப்பகம் நிதியுதவியை வழங்கியுள்ளது.

நாரந்தனைக் கிராம அலுவலர் முன்னிலையில் இந்த நிதி அவரிடம் கையளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-222)

# நடமாடும் வாகன உரிமையாளருக்கு எதிராக வழக்கு

சாவகச்சேரி, பெப்.1

நடமாடும் வாகனத்தில் தனிநபர் சுகாதாரம் பேணாத வகையில் உணவுப்பொருள்களைவிற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் வாகனஉரிமையாளருக்குஎதிராக வரணிப்பிரதேசபொதுச்சுகாதாரப் பரிசோதகரால்சாவகச்சேரிநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. அண்மைக் காலமாக பாடசாலைகளில் மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அப்பகுதிகளில் நடமாடும் ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் உணவுப் பொருள்கள்விற்பனைஇடம்பெற்று வருகின்றன.

வரணி வடக்கு பாடசாலையொன்றில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ஐஸ்கிறீம் வகைகள் விற்பனைக்கு கொண்டுவந்தநடமாடும்வாகனத்தில் விற்பனையில் ஈடுபட்ட நபர் தொப்பி மேலங்கி மருத்துவச் சான்றிதழ்போன்றவைஇன்றிஅதிஉச்ச தனிநபர்சுகாதாரம்பேணாதநிலையில் உணவுப் பொருள்களை விற்பனை செய்ததை அங்கு பரிசோதனைமேற்கொண்டபொதுசுகாதாரப்பரிசோதகரால்கண்டுபிடிக்கப்பட்டது. பருத்தித்துறையைச் சேர்ந்த நடமாடும் ஐஸ்கிறீம் வாக்ன உரிமையாளருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்குஎடுக்கப்பட்டபோது வாகன உரிமையாளர் நீதி மன்றுக்கு வருகை தராததால் நெல்லியடிப் பொலிஸார் மூலம் அழைப்பாணை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-9)

# மெய்வன்மை போட்டிகள்

கிளிநொச்சி, பெப்.1

கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ்.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி சு.தர்மரட்ணம், கணிதப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சுஜிகரன், குமரபுரம் கிராம அலுவலர் திருமதி.நீ.பகீரதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-222)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்ப்பாணம் சென்பக்றிஸ் கல்லூரியின்இல்லமெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நாளை பிற்ப கல்1.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடக்கு மகாண கல்வித் திணைக்கள் உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் இராஜகோபால் ராஜசீலன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம் அச்வேலி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில்முதன்மைவிருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-11)

# படைப்புழுவை ஒழிப்பதற்கு வவுனியாவில் செயலமர்வு

வவுனியா, பெப்.1

படைப் புழுவைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்புச் செயலமர்வு ஒன்று நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்டச்செயலர் ஐ.எம்.கனீபா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற செயலமர்வில் வளவாளராக கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி கலந்துகொண்டார்.

படைப் புழு எவ்வகையான பயிர்களை தாக்குகிறது. வடக்கு மாகாணத்தில் படைப் புழுவின் தாக்கம் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்கள், படைப்புழுவின் வாழ்க்கை வட்டம், இரசாயன மற்றும் இயற்கை முறையிலான கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய விளக்கங்கள் வளவாளரால் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி தெரிவித்ததாவது:

விவசாயத்தில் படைப் புழு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவல்லது. அதனால் கிராம அலுவலர்கள் தலைமையில் குழுக்களை அமைத்து துரித கதியில் படைப்புழுத் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் - என்றார். (எ-110)

# மாணவர் போதைக்கு அடிமையாவது கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரிப்பு

## *உளநல மருத்துவர் ஜெயராஜா எச்சரிக்கை*

**கிளிநொச்சி, பெப்.1**

**கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாவது அதிகரித்து வருகின்றது. இந்த விடயத்தில் மாணவர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.**

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் ஜெயராஜா தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டப் குடிமக்கள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற போதைப் பொருள் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர் புறப் பாடசாலைகள் சிலவற்றுக்கு அண்மைய நாள்களாகச் சென்று போதைப் பொருள் பாவனை தொடர்பாக விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட் டன.

அதன்போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை உள்ளமை தொடர்பான தகவல்களைத் திரட்ட முடிந்துள்ளது. மாணவர்களின் மத்தியில் போதைப் பொருள் அறிமுகப்படுத்தப்படுகின்றது. அவற்றைப் பெற்றுக் கொள்ளப் பெற்றோர்களிடம் பணம் பெற முடியாத நிலையில் மாணவர்கள் விற்பனையாளர்களாக மாற்றப்படுகின்றனர். விற்பனை செய்யும் மாணவர்களுக்குப் போதைப் பொருள் இலவசமாகக் கிடைக்கின்றது.

சில மாணவர்கள் வகுப்பறையிலேயே போதைப் பாவனையில் ஈடுபடுகின்றமை ஆய்வின் மூலம் கண்டறியப்படுகின்றது. குறிப்பாக நாக்குக்குக் கீழ் புகையிலையை வைத்துக் கொண்டு கற்கும் நிலமை காணப்படுகின்றது. போதையை ஏற்படுத்தும் ஒரு வகையான பாக்கு மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிலர் அவற்றைப் பயன்படுத்தலாமா? இல்லையா? என்ற அரை மனதுடன் உள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பாகப் பொலிஸாரோ, திணைக்களங்களோ, அதிகாரிகளோ நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுவதிலும் பார்க்க, பெற்றோர், சமூகம் எனப் பலரும் விழிப்புடன் செயற்பட்டால் வெற்றிகாண முடியும். மாணவர்கள் விடயத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் அக்கறை செலுத்த வேண்டும். ·வியாபார நோக்குடனே மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பரப்பப்படுகின்றது.

அது தொடர்பாக மாணவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். போதைப் பொருள் பாவனையாலோ, ஏனைய சந்தர்ப்பங்கிளிலோ மாணவர்கள் குற்றவாளி கள்ாக இனங்காணப்பட்டால் பல்கலைக் கழக அனுமதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். மாணவர்கள் இவ்வாறான பழக்கங்களில் இருந்துவிடுதலைபெறவேண்டும். - என்றார். (எ-6)



# காட்டிலுள்ள சகல மூங்கில்களும் புல்லாங்குழல்களாக மாறவேண்டும்

## *திலகராஜ் எம்.பி கிளிநொச்சியில் தெரிவிப்பு*

இந்தக்காட்டிலுள்ள எல்லா மூங்கில்களும் புல்லாங்குழல்களாக மாறவேண்டும். 1983 ஆம் ஆண்டு இந்தக் காட்டில் இருந்த மூங்கில்களில் ஒன்று இன்று உங்கள் முன் புல்லாங்குழலாக நிற்கிறது என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இடம் பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவன் நான். ஆறு பாடசாலைகளின் பழைய மாணவனும்கூட. எனது மாதாந்தச் சம்பளத்தின் ஒரு பகுதியைக் கல்விக்கான உதவியாகச் செலுத்தி வருகிறேன். பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்குமாக இந்த நிதி செலவு செய்யப்படுகிறது. அரசியல் ரீதியாக நான் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்பதனால் நாடாளுமன்ற உறுப்பினராக நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள முடியாது. வேறு வழிகளிலேயே உதவிகளை மேற்கொள்ளமுடியும். குறிப்பாக தலைமை அமைச்சர் அலுவலகத்தின் ஊடாகவோ அல்லது அமைச்சுக்களின் ஊடாக இந்தப் பாடசாலைக்கான உதவிகளைப் பெற நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-214)

*முல்லைத்தீவு கள்ளப்பாடு கரையிலிருந்து*

# தொழிலுக்குச் சென்ற இரு மீனவர் இதுவரை கரை திரும்பவில்லை!

யாழ்ப்பாணம், பெப். 1

முல்லைத்தீவுக் கடலில் மீன் பிடிப்பதற்குச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவில்லை என்று அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற் கரையிலிருந்து நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் தொழிலுக்குப் பலர் சென்றனர். அவர்களில் ஒரு படகில் சென்ற இருவர் இதுவரை கரை திரும்பவில்லை. ஏனையவர்கள் காலை 8 மணியளவில் கரை திரும்பியுள்ளனர். அருமைநாயகம் அன்ரன் (வயது 22), இராசமாணிக்கம் பிரதீபன் (வயது 26) 2 பிள்ளையின் தந்தை ஆகியோரே காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடலுக்கு சென்றவர்களில் ஏனையவர்கள் கரைக்குத் திரும்பியுள்ளனர். இருவரைக் காணவில்லை. கடலில் நள்ளிரவு வேளை காற்றும் மழையும் கூடிய கால நிலை நிலவியதாக ஏனைய மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மாவட்ட நீரியல் வளத் திணைகள் அதிகாரிக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர் கடற் படைக்குத் தகவல் வழங்கியுள்ளார் என்று முல்லைத்தீவு மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் பே.பேரின்பநாதன் தெரிவித்தார். (து-7)

# கரைச்சி பிரதேச சபைக்கு ரூ.129 மில். ஒதுக்கீடு

கிளிநொச்சி, பெப்.1

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் 129 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச சபை கரைச்சி மற்றும் கண்டாவளைப் பிரதேசங்களை உள்ளடக்கியது. கண்டாவளைக்கு 39.5 மில்லியன் ரூபாவும், கரைச்சிப் பிரதேசத்துக்கு 89.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவற்றை விட பொருளதார அமைச்சின் மூலம் மோட்டர் கிரைண்டர் கொள்வனவு செய்ய 25 பில்லியன் ரூபாவும், மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் 8ஆம் வாய்க்கால் நான்காம் குறுக்கு வீதிச் சீரமைப்புக்காக 7 மில்லியன் ரூபா நிதியும் கடந்த மாதம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-6)

# மன்னாரில் சிறப்புத் தேவையுடைய சகலரும் உடன் பதிவுசெய்யுங்கள்!

## *மாவட்டச் செயலகத்தினர் அறிவுறுத்துகின்றனர்*

மன்னார், பெப். 1

மன்னாரில் உள்ள மாற்றுத்திறனாளிகள் அனைவரும் உடனடியாகப் பதிவுசெய்து கொள்ளுங்கள் என்று மன்னார் மாவட்டச்செயலகத்தின் சமூகசேவைகள் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். உதவிகள் சகலருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தப் பதிவு இடம்பெறுகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சகல மாற்றுத்திறனாளிகளின் விவரங்கள் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இதுவரை பதிவு செய்யாதவர்கள் எதிர்வரும்15ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டடச் செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவில் பதிவு செய்துகொள்ளுமாறு அந்தப் பிரிவினர் கூறியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மாற்றாற்றல் உடையோரின் தகவல்கள் உரியமுறையில் இல்லை. மாவட்டத்தின் மேலதிக செயலர் தலைமையில் தேனி மாற்று வலுவுள்ளோர் அமைப்பை உருவாக்கி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாககிடைக்கும்அனைத்து விதமான உதவிகளையும் தேனி அமைப் பினூடாக வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட் டுள்ளது. அவர்களில் 350 பிள்ளைகளுக்குப் புத்தகப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.

புலம்பெயர்ந்த அமைப்பு ஒன்று நூறு சக்கரநாற்காலிகள் வழங்க முன்வந்துள் ளது. எம்மிடம் பதிவில் உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தேவையுடையோர் அதிகமாக உள்ளனர். வீடுகளில் இருக்கும் பலருக்கு உரிய முறையில் தகவல்கள் சென்றடையவில்லை. இந்தத் தகவல்கள் அவர்களுக்குச் சென்றடைய வேண்டும். தற்பொழுது கட்டம் கட்டமாக மாணவர்களுக்குப் பிறகு முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு, கால் இல்லாதவர்களுக்கு கால்கள் பொருத்தும் செயற்பாடுகளும் தேனி மாற்றுவலுவுள்ளோர் அமைப்பினூடாக செய்யப்படவுள்ளன.

இனிக் கிடைக்கப்பெறும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் சகல உதவிகளும் மாவட்டச் செயலர், மாவட்ட மேலதிக செயலர் தலைமையில் தேனி அமைப்பினுடாக வழங்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது எடுக்கப்படும் மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான பதிவுத் தரவுகளே இறுதிக்காலம் வரை இருக்கும். அதனால் தவறாது பதிவு செய்து கொள்ளுங்கள் என்று மாவட்ட செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவினர் கேட்டுள்ளனர். (து-213)

# வீதியை சீரமைத்து தருமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு, பெப்.1

நீண்டகாலமாக மீள்சீரமைப்பு இன்றி அழிவடைந்துள்ள பிரான்பற்றில் உள்ள மூன்று வீதிகளை இந்த ஆண்டில் ஏதாவது ஒரு கருத்திட்டத்தில் உள்வாங்கி சீரமைக்க தவிசாளர் முன்வர வேண்டும். இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் உறுப்பினருமான சி.மகேந்திரன் தெரிவித்தார்.

முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய மூன்று பிரான்பற்று வீதிகள் எனும் தலைப்பில் தவிசாளர் அ.ஜெயநேசனுக்கு எழுதிய கடிதத்திலேயே உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பிரான்பற்றில் சில வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும் பல வீதிகள் அபிவிருத்தி இன்றி உள்ளன.


இதில் பிரான்பற்று மறைந்த தலைவர் அமிர்தலிங்கம் ஞாபகார்த்த வீதி 640 மீற்றர் நீளம்,பிரான்பற்று கூட்டுறவாளர் கந்தசாமி ஞாபகார்த்த வீதி- 700 மீற்றர் நீளம்,பண்டத்தரிப்பு சமூகத் தலைவர் ஏ.வி.துரையப்பா ஞாபகார்த்த வீதி- 500 மீற்றர் நீளம் என்பனவே அழிவடைந்த நிலையில் உள்ளன. எனவே கடந்த 3 தசாப்தங்களுக்கு மேலாக அபிவிருத்தி இன்றி உள்ள மேற்படி மூன்று வீதிகளையும் இந்த ஆண்டில் அபிவிருத்தி செய்து மக்களின் இடையூறு அற்ற போக்குவரத்துக்கு வழியேற்படுத்தி தருமாறு கோரியே கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது. (ஜ-50)


கோப்புப்படம்

# பொதுக்கூட்டம்

பருத்தித்துறை,பெப். 1

பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆ.சிறி தலைமையில் நடைபெறும். (ஜ)


அமையவுள்ள நகர மண்டபத்தின் மாதிரித் தோற்றம்

# யாழ்ப்பாணம் நகர மண்டபத்துக்கு பெருநகர அமைச்சு நிதி ஒதுக்கீடு

*யாழ்ப்பாணம், பெப். 1*

**யாழ்ப்பாணம் நகர மண்டபம் அமைப்பதற்கு 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபா நிதி, பெருநகர மற்றும் மேல்மாகாண அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவையின் அனுமதி கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு மாநகர சபையான யாழ்ப்பாணம் மாநகர சபை 1949ஆம் ஆண்டு மாநகரசபையாக அறிவிக்கப்பட்டது.

1939ஆம் ஆண்டு பிரிட்டன் ஆட்சிக் காலத்தில் நகர மண்டபம் அமைக்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்தின் அடையாளமாக திகழ்ந்தது.

1985ஆம் ஆண்டு போர் காரணமாக அழிக்கப்பட்டது. நகர மண்டபம் அழிக்கப்பட்ட காலத்திலிருந்து யாழ்ப்பாணம் மாநகர சபை நல்லூர் கோவில் ஆதனத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

போரின் பின்னரும் நகர மண்டபம் மறுசீரமைப்புச் செய்யப்படவில்லை. நகர மண்டபத்தை கட்டியெழுப்புவது யாழ்ப்பாண மக்களின் நீண்டகாலக் கனவாகும். நகர மண்டபத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபா. 2019ஆம் ஆண்டிலிருந்து 2023ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

2019ஆம் ஆண்டு ஆரம்ப கட்டட வேலைக்காக 200 மில்லியன் ரூபாவும், கட்டட அமைப்பு வேலைக்காக 500 மில்லியன் ரூபாவுமாக 700 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். 2020ஆம் ஆண்டு கட்டட அமைப்பு வேலைக்காக 650 மில்லியன் ரூபாவும், 2021ஆம் ஆண்டு கட்டட அமைப்பு வேலைக்காக 500 மில்லியன் ரூபாவும், 2022ஆம் ஆண்டு கட்டட அமைப்பு வேலைக்காக 300 மில்லியன் ரூபாவும், 2023ஆம் ஆண்டு கட்டட அமைப்பு வேலைக்காக 200 மில்லியன் ரூபாவுமாக 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

நகர அபிவிருத்தி அதிகார சபையானது பொறியியல் வடிவமைப்பு, கணிய அளவைப் பட்டியல் தயாரித்தல், திட்ட முகாமைத்துவம், கட்டட அமைப்பு மேற்பார்வை, நகர மண்டப அமைப்புக்கான ஆலோசனை மேற்பார்வை என்பவற்றை மேற்கொள்ளும் என்பதோடு, நகர மண்டபத்தின் அமைப்புக்கான ஆலோசனைக் கட்டணமாக 6 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங் கப்பட வேண்டும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஓ.5,105)







# இந்து குருமார் ஒன்றியச் செயற்பாட்டுக்கு தனியான இடம் வழங்குமாறு கோரிக்கை

## அமைச்சர் மனோவிடம் நல்லை ஆதீனம் விடுத்தது

யாழ்ப்பாணம், பெப்.1

**இந்துமத குருமார் ஒன்றியத்தின் செயற்பாட்டுக்கும் வளர்ச்சிக்குமாக ஓர் தனியான இடம் இல்லை. எனவே அதனைப் போக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நல்லை ஆதீன குரு முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக பரமச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.**

இந்து கலாச்சார அமைச்சர் மனோ கணேசன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துமத குருமார் ஒன்றிய அலுவலகத்துக்கு பயணம் மேற்கொண்டார். இதன்போதே அவரிடம் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

இந்துமதக் குருமார் ஒன்றியத்திற்காக அமைத்த இந்த கட்டடத்தை இந்து கலாசார அமைச்சு பொறுப்பெடுத்துள்ளது. இக் கட்டடத்தினை இந்து மதகுருமார் ஒன்றியத்திற்கே பெற்றுத்தர வேண்டும். அதே நேரம் தெற்கிலே எவ்வாறு பௌத்த மத குருமாருக்கு உரிமைகள் வழங்கப்படுகின்றனவோ அதே உரிமை இந்து மத குருமாருக்கும் வழங்க வேண்டும் என்றார். இதற்கு இந்து கலாச்சார அமைச்சர் மனோ கணேசன் பதிலளிக்கையில்,

நாவலர் மண்டபத்தினை இந்து கலாசார அமைச்சிடம் ஒப்படைக்குமாறு மாநகர சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த மண்டபம் கிடைத்தவுடன் அங்கே இந்து கலாச்சார அமைச்சு மாற்றப்பட்டு இக் கட்டடம் இந்து மதகுருமார் ஒன்றியத்திற்கு வழங்க ஆவண செய்யப்படும்.

சிங்களம் தமிழ் என்பவை மொழி அடையாளம் உலகின் எல்லாப் பௌத்தர்களும் சிங்களவர்கள் அல்ல. அதே நேரம் வடக்கு கிழக்கில் பௌத்த அடையாளம் இருந்ததால் அவற்றினை அடாத்தாகப் பிடிக்கும் கலாச்சாரம் நிலவுகின்றது. இதனை தடுப்பதற்கு ஓர் இலகுவான வழி உண்டு. அதாவது அந்த பௌத்த சின்னங்களை தமிழர்களே பாதுகாக்க வேண்டுமே அன்றி சிங்களவர்கள்தான் வந்து பாதுகாக்கவேண்டிய அவசியம் கிடையாது.

இவ்வாறு பௌத்த சின்னங்களை பாதுகாத்தல் என்னும் பெயரில் நிலத்தினை ஆக்கிரமிப்பது ஓர் அடாத்தான செயல். என்றார். (ஜ-105)

# தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 93 வேலைத்திட்டங்களுக்கு 86.2 மில்லி. ரூபா ஒதுக்கீடு

தென்மராட்சி. பெப்.1

**கிராம சக்தி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 93 வேலைத்திட்டங்களை மேற்கொள்ள 86.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதென மாவட்டச் செயலகத்தினால் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 56 வீதிகள்,சாவகச்சேரி நகரசபை பகுதியில் 6 வீதிகள் ,தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 10 ஆலயங்கள், தென்மராட்சி கல்வி வலயத்தில் 21 பாடசாலைகள் ஆகியன சீரமைக்கப்படவுள்ளன. (ஜ-9)

# இந்திய மீனவர்களது படகுகளை மட்டுமே விடுக்குமாறு உத்தரவு

## உபகரணங்களைத் தடுத்து வைக்குமாறு பணிப்பு

**மன்னார், பெப்.1**

**மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காகப் பறிமுதல் செய்யப்பட்ட இந்திய இழுவைப் படகுகள் விடுவிக்கப்படுகின்றபோதும், மீன்பிடி உபகரணங்களை விடுவிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

சட்டமா திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, மன்னார் நீதிமன்று இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்களின் 35 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டபோதும், படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

படகுகள் கிளிநொச்சி கிராஞ்சியிலும், மீன்பிடி உபகரணங்கள், திசைகாட்டிகள், அன்ரனா, எதிரொலிக்கருவி என்பன மன்னார் கடற்றொழில் திணைக்களத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

இந்திய அரசுடன் நடத்தப்பட்ட பேச்சை அடுத்து படகுகளை விடுக்குமாறு சட்டமாக திணைக்களம் மன்னார் கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. அதற்கமைய 2016ஆம் ஆண்டு15 படகுகள் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இரண்டாம் கட்டமாக கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட்ட 10 படகுகளில் 7 படகுகள் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. 3 படகுகள் பழுதடைந்திருந்தமையால் கொண்டு செல்லப்படவில்லை. அவை விரைவில் கொண்டு செல்லப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் படகுகளை மட்டுமே விடுவிக்க வேண்டும் என்றும், மீன்பிடி உபகரணங்களை விடுவிக்க வேண்டாம் என்று சட்டமா திணைக்களம் கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது என்று தெரியவருகின்றது. அதையடுத்து கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் நகர்த்தல் படிவங்களை மன்னார் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

அதையடுத்துப் படகுகள் தவிர்ந்த ஏனைய மீன்பிடி உபகரணங்களை விடுவிப்பதற்கு நீதிமன்று தடை விதித்ததுடன், அவற்றை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-60)



# வீதியோரம் கொட்டப்படும் குப்பையால் பெரும் சிரமம்

## உமையாள்புரம் மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, பெப்.1

கிளிநொச்சி, உமையாள்புரத்தில் வீதியோரங்களில் குப்பைகள் கொட்டப்படுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையால் உமையாள் பு ரத்தில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. அங்குள்ள பிரதேசம் ஒன்று அடையாளம் காணப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டு அதற்குள் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

ஆனால் அந்தப் பகுதிக்குள் குப்பைகளைக் கொட்டாது, வீதியோரத்தில் குப்பைகள் கொட்டப்படுகின்றன என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

குப்பைகளை கால்நடைகளும், நாய்களும் இழுத்துச் செல்கின்கின்றன. காற்றாலும் குப்பைகள் பரவுகின்றன. சில சந்தர்ப்பங்களில் துர்நாற்றம் வீசுகின்றது. அதனால் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்டபோது அவர் தெசிவித்ததாவது

மக்கள் கூறுவது உண்மையே. இனங்காணப்பட்ட பகுதிக்குள் குப்பைகள் கொட்டப்படாது, வீதியோரத்தில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. அவற்றைக் கொண்டுவந்து கொட்டுவது யார் என்று தெரியவில்லை. இராணுவத்தினர், நிறுவனங்கள் போன்றவர்களும் அங்கு குப்பைகள் கொட்டுகின்றனர். அங்கு காவலாளி இல்லை. அதற்கான ஆளணி எம்மிடம் இல்லை. குப்பைகளைக் கொட்டுவது யார் என்று கண்டறியப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (எ-6)

# பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு, பெப்.1

முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள சில பாடசாலைகளின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் இந்த நிதியை ஒதுக்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் மகா வித்தியாலயத்துக்குப் பத்து இலட்சம் ரூபாவும், மல்லாவி மத்திய கல்லூரிக்குப் பத்து இலட்சம் ரூபாவும், விசுவமடு மகா வித்தியாலயத்துக்குப் பத்து இலட்சம் ரூபாவும், தண்டுவான் வித்தியாலயத்துக்குப் பத்து இலட்சம் ரூபாவும், கைவேலி வித்தியாலயத்துக்குப் பத்து இலட்சம் ரூபாவும், மல்லாவி மயில்வாகனம் வித்தியாலயத்துக்குப் பத்து இலட்சம் ரூபாவும், வவுனியா சேனைப்புலவு பாடசாலைக்கு ஐந்து இலட்சம் ரூபாவும், நெத்தலியாறு தமிழ் வித்தியாலயத்துக்குப் பத்து இலட்சம் ரூபாவும், பாரதி வித்தியாலயத்துக்குப் பத்து இலட்சம் ரூபாவும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்குப் பத்து இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி3)

# பழைய மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு

வவுனியா, பெப்.1

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர்கள் ஏற்பாட்டில் மகா வித்தியன்கள் தினம் நாளை மறுதினம் 3ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்று திரட்டும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், அன்று நடைபவனி, மென்பந்துக் கிரிகெட்போட்டிகள், விளையாட்டு நிகழ்வுகள், சிறுவர்களுக்கான நிகழ்வுகள் என்பன பாடசாலை வளாகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-110)

# முஸ்லிம் மகா வித்திக்கு மூன்று மாடியில் கட்டடம்

## அமைச்சர் ரிசாட் அடிக்கல் நட்டார்



வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கைத்தொழில், வாணிப மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதீயூதின் அடிக்கல் நட்டார்.

வித்தியாலய அதிபர் ரம்சீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்னன், நகரசபை உறுப்பினர்களான எம்.லரி, பாரி மற்றும் பலரும் கலந்து கொண்டிருந்தனர். அருகில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை என்ற திட்டத்தின் கீழ் மூன்று கோடி ரூபா செலவில் இந்த மூன்றுமாடிக் கட்டடம் அமையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)

# வவுனியாவில் மூவர் கைது

வவுனியா, பெப்.1

போதைப் பொருள்களை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 பேர் வவுனியாவின் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டுச் சிகரெட்டுக்களை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும், கஞ்சா, குடு போதைப் பொருள்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்த ப் பட்டு, விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டது. (எ-110)



# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,பெப்.1

வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்தில் வறுமை நிலையில் கலவி கற்கும் மாணவர்கள் 8 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வன்னி மண் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் ஜேர்மனியில் வசிக்கும் தம்பிராயா குடும்பத்தினரின் நிதி அனுசரணையுடன் கற்றல் உபகரணங்கள் நேற்றையதினம் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ-110)

# வவுனியா மதுவரி திணைக்களத்தால் கடந்த ஆண்டு 545 வழக்குகள் தாக்கல்

வவுனியா, பெப்.1

வவுனியா மாவட்டத்தில் சட்டவிரோதமான கள் மற்றும் சாராய விற்பனை, கசிப்பு உற்பத்தி விற்பனை, கஞ்சா கடத்தல் என்பவை தொடர்பாக கடந்த ஆண்டு 545 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி அசோக திலகரட்ண தெரிவித்தார்.

வரி செலுத்தாமல் , பீடிகள் விற்பனை செய்யபட்டமைக்காக 3 வழக்குகளும், சட்ட விரோதமாகக் கள் விற்பனை செய்தமைக்காக 270 வழக்குகளும், அனுமதிப்பத்திரம் இன்றி கள் வைத்திருந்தமைக்காக 15 வழக்குகளும், அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்தமைக்காக 35 வழக்குகளும், கஞ்சா வைத்திருந்தமைக்காக 5 வழக்குகளும், சட்டவிரோத வடிசாரயத்தை உடைமையில் வைத்திருந்தமைக்காக 3 வழக்குகளும், அனுமதியின்றி வெளிநாட்டு மதுபானங்கள் வைத்திருந்தமைக்காக மூன்று வழக்குகளும், அனுமதியின்றி பீடி உற்பத்தி செய்தமைக்காக 6 வழக்குகளும், 21 வயதுக்கு கீழ்பட்டவர்களுக்குப் புகைத்தல் பொருள்களை விற்பனை செய்தமைக்காக 154 வழக்குகளும், பொதுஇடத்தில் புகைத்தமைக்காக 54 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றுக்குத் தண்டப் பணமாக சுமார் 56 லட்சம் ரூபா அறவிடப்பட்டது. - என்றார். (எ-110)

# படைப்புழு தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம்

கிளிநொச்சி, பெப்.1

தற்போது அச்சுறுத்தலாக மாறியுள்ள படைப்புழு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் கிளிநொச்சியில் நேற்று ஊர்வலம் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் இருந்து டிப்போச் சந்தி வரை ஊர்வலம் நடத்தப்பட்டது. விவசாயத் திணைக்களத்தினர், கமநல சேவைகள் திணைக்களத்தினர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள், விவசாயிகள் எனப் பலர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

படைப்புழு சோளம், இறுங்கு, கரும்பு, நெல், மரக்கறிகள்,பழங்கள், அவரைப் பயிர்கள், உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பயிர்களை அழிக்க கூடிய பீடையாகும். இந்தப் பீடை தற்போது இலங்கையில் வேகமாகப் பரவுகின்றது. வடக்கு மாகாணத்திலும் அதன் தாக்கம் உணரப்பட்டுள்ளது. (எ-214)





## இலாபத்தை மறைத்து வயிற்றிலடிக்கின்றனர்!

முடியாவிட்டால் அரசிடம் வழங்குங்கள் கம்பனிகளைச் சாடுகிறார் கிரியெல்ல

கொழும்பு, பெப். 1
தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புக் கோரிக்கை நியாயமானது. அவர்களுக்கு ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். தோட்ட கம்பனிகளுக்குப் போதியளவு இலாபம் இருந்தும் அவர்கள் இலாபத்தை மறைத்து தோட்டத் தொழிலாளர் வயிற்றில் அடிக்கின்றனர் என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
தோட்ட நிறுவனங்களால் தோட்டங்களைக் கையாள முடியவில்லை என்றால் ஏன் இன்னமும் அவற்றை அரசிடம் ஒப்படைக்காதுள்ளீர்கள் என்றும் அவர் கேள்வி எழுப்புகின்றார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
தோட்டத்தொழிலாளர் சம்பள உயர்வு விடயத்தில் அவர்களின் கோரிக்கை நியாயமானதே. அதனை நாம் ஒருபோதும் மறுக்கவில்லை. அவர்கள் கேட்பதைப் போலவே ஆயிரம் ரூபாவை அடிப்படைச் சம்பளமாக பெற்றுக்கொடுக்க வேண்டும். அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். தேயிலை தோட்டங்களால் தோட்ட நிறுவனங்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்ற கருத்துக்கள் முற்றிலும் பொய். அவர்களுக்கு இலாபம் வருகின்றது. அரசிலுள்ள தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தைக் காரணியாகக் கொண்டு சில முரண்பாடுகளை ஏற்படுத்துவது உகந்ததாக அமையாது. தலைமைஅமைச்சருடன் பேச்சு நடத்தி இந்த விடயங்களுக்குச் சுமுக தீர்வை எட்ட முடியும். அதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவற்றைக் கையாள வேண்டும் - என்றார். (த-31)

கையூட்டுப் பெற்றார் என்ற குற்றச்சாட்டில்

# கொக்கட்டிச்சோலை பொலிஸ் பொறுப்பதிகாரி திடீர் கைது

இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவினர் மடக்கினர்

மட்டக்களப்பு, பெப். 1
**கையூட்டுப் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பிலிருந்து வந்திருந்த இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவினர் பொலிஸ் பொறுப்பதிகாரியைக் கடந்த புதன்கிழமை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.**




சட்டவிரோதமாக மண் ஏற்றிச் சென்ற லொறியை விடுவிப்பதற்கு 25 ஆயிரம் ரூபாவை கையூட்டுப் பெற்றார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
கொக்கட்டிச்சோலையில் கடந்த திங்கட்கிழமை சட்டவிரோதமாக லொறியில் ஆற்று மண் ஏற்றிக் கொண்டிருந்த போது பொலிஸார் சுற்றிவளைத்தனர். ஆற்று மணல் ஏற்றியவர்கள் ஆற்று மணல் ஏற்றப்பட்ட வாகனங்களைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். லொறி பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.
பின்னர் லொறி உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து லொறியை மீட்பதற்கு முயற்சித்தார். மீட்பதாயின் 25 ஆயிரம் ரூபா தருமாறு கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோரியுள்ளார்.
லொறி உரிமையாளர் இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவுக்குத் தகவல் வழங்கினார். இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவினரின் வழிகாட்டலில் புதன்கிழமை மாலை லொறி உரிமையாளர் 25 ஆயிரம் ரூபாவுடன் பொலிஸ் நிலையத்துக்குச்சென்று பணத்தை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வழங்கியபோது இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவினரால் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டார். இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவினர் மேலதிக விசாரணை நடத்துகின்றனர். (த-46)



### பயணித்த மலேசியக் கப்பலில் நோயுற்ற படை அதிகாரி மீட்பு

இலங்கைக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த மலேசிய போர்க்கப்பல் ஒன்றில், நோயுற்றிருந்த கடற்படை அதிகாரி ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார்.
இலங்கையிலுள்ள கடல் மீட்பு ஒருங்கிணைப்புச் செயலகத்துக்கு, மலேசிய தூதரகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து, இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நோயுற்றிருந்த நிலையில் அவசர சிகிச்சை தேவைப்பட்ட கடற்படை அதிகாரியை மீட்டுவந்தது. அவர் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

சொத்துவிடயங்களை வெளியிடாத வழக்கில்

## முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் விடுதலை

கொழும்பு, பெப். 1
ஐந்து வருடங்களில் சொத்து விவரங்களை வெளியிடாமை தொடர்பில் இலஞ்ச ஊழல்விசாரணைஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கிலிருந்து முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுவிக்கப்பட்டுள்ளார்.
குறித்த வழக்கு விசாரணைகள் கொழும்பு தலைமை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமைவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.
2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சொத்து விவரங்களை வெளியிடாமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
வழக்குக்கான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்படாமையால் பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படாததால் விடுதலை செய்யப்படுகிறார் என்று மன்று தீர்ப்பளித்தது. (த-71)

மர்காண சபைகளுக்கான

## விகிதாசாரமுறைத் தேர்தலை நடத்த சட்டவரைவை உடன் சமர்ப்பிக்கவும்

ஐ.தே.கவின் ஜயம்பதி விக்கிரமரத்ன வலியுறுத்து

கொழும்பு, பெப். 1
மாகாணசபைகள் ஒன்பதுக்குமான தேர்தல்களை விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடத்த அனைத்துக் கட்சிகளும் விருப்பம் வெளியிட்டுள்ளன. அவ்வாறு எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால், விகிதாசார முறைத் தேர்தலை நடத்துவதற்கான சட்ட வரைவை உடனடியாக நாடாளுமன்றில் நிறைவேற்ற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்தார்.
மாகாண சபைத் தேர்தலுக்கான அரசின் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து வினவிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
மீண்டும் பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது பெண் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது குறித்துச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
புதிய முறையிலேயே மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கூறி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியே, முடிவடைந்துள்ள ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கு தடையாக இருந்தது. தற்போது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டிணைந்து செயற்படுவதால் பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்குத் தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியும் பழைய முறையில் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் உள்ளது. ஏனைய அனைத்துக் கட்சிகளும் விகிதாசார பிரதிநிதித்துவத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. தற்போது புதிய கலப்புத் தேர்தல் முறை நடைமுறையில் உள்ளதால் அதனை நீக்கி மீண்டும் விகிதாசார பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையிலான சட்ட வரைவொன்றை நாடாளுமன்றில் நிறைவேற்ற வேண்டும். இதற்கு எல்லை வரம்பு அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கான தேவையும் ஏற்படாது -என்றார். (த-61)

## தண்ணீர், சுகாதார வசதிகளை மேம்படுத்தக் கலந்துரையாடல்

உலக வங்கிப் பணிப்பாளருடன் அமைச்சர் ஹக்கீம் கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 1
உலக வங்கியின் நிதியுதவியுடன் ஏழு மாவட்டங்களை இணைத்து தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில், உலக வங்கியின் பணிப்பாளர் மற்றும் பயிற்சி முகாமையாளர் டி.சி. தகுயா கமட்ட ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
நாட்டில் நிலவும் தண்ணீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. குடிதண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நீர் மூலங்களை இனம்கண்டு புதிய நீர்த் தேக்கங்களை உருவாக்க நீர் வழங்கல், நீர்ப்பாசன மற்றும் மகாவலி ஆகிய அமைச்சுக்களை உள்ளடக்கிய செயற்றிறன் படையொன்றை உருவாக்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறித்த அமைச்சுகளின் பணிப்பாளர்களின் தலைமையில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.
நீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் சமூக நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுக்கொள்ள புதிய நீர்த் தேக்கங்களை அமைப்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. சந்திப்பின்பின்னர்- நீர் வழங்கல்அமைச்சுடன்இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு உலக வங்கி தனது இணக்கத்தை வெளியிட்டுள்ளது. என்று தெரிவிக்கப்பட்டது. (த-31)

## நினைவேந்தல் நிகழ்வு

திருகோணமலை, பெப்.1
மூத்த எழுத்தாளர் இராஜ. தர்மராஜாவின் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை ரி.டி.டி.எ. மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் எழுத்தாளர்களான கந்தவனம் கோணேஸ்வரன், திருமலை நவம், கலாநிதி க .சரவணபவன் .யதீந்திரா ஆகியோர் நினைவுரையாற்றுவர். (ஜ-40)

## இலங்கைக்கானஆஸ்திரேலிய தூதுவராக டேவிட் ஹொலி !

கொழும்பு, பெப். 1
இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் புதிய தூதுவராக டேவிட் ஹொலி நியமிக்கப்பட்டுள்ளார். ஆஸ்ரேலிய அயலுறவு அமைச்சர் மாரிஸ் பைன் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் ஆஸ்திரேலிய அயலுறவு மற்றும்வணிக திணைக்களத்தின். மூத்த அதிகாரியாவார். இதற்கு முன்னர் இவர் சென்னை, புதுடெல்லி, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும் ஆஸ்ரேலிய தூதரக அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்.
2016ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் ஆஸ்திரேலியத் தூதுவராகப் பணியாற்றிய பிரைஸ் ஹட்சிசன் தனது பதவிக் காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையில் புதிய தூதுவராக டேவிட் ஹொலி நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## கொழும்பு துறைமுக செயற்றிறனை அதிகரிக்க இரண்டு பைலட் படகுகள்

*உருவாக்க ஒப்பந்தம் கைச்சாத்து*



கொழும்பு, பெப். 1
3.12 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் கொழும்பு டொக்யாட் நிறுவனத்தின் மூலமாக பைலட் படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.
கொழும்பு துறைமுகத்தின் செயற்றிறனை மேலும் அதிகரிக்கும் பொருட்டு இரு பைலட் படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.
அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது என்று துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.
அமைச்சரவை அனுமதியின் கீழ் வழங்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு இடம்பெறும்.
10 மாதங்களுக்குள் பைலட் படகுகளைத் தயாரித்து கொழும்பு துறைமுகத்திடம் கையளிக்க வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.
அதனடிப்படையில் எதிர்வரும் டிசெம்பர் முதலாம்திகதி தொட்க்கம் புதிய படகுகளைக் கொழும்புத் துறைமுகத்தின் பயன்பாட்டில் உள்வாங்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.
தற்போது கொழும்பு துறைமுகத்திடம் 4 பைலட் படகுகள் உள்ளன. இறுதியாக 2007ஆம் ஆண்டில் அனைத்துப் படகுகளும் திருத்தியமைக்கப்பட்டன.
புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ள பைலட் படகுகள் தற்போதுள்ள படகுகளை காட்டிலும் மிக விரைவாக பயணிக்கலாம். அதில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்று அமைச்சர் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.
கடந்த வருடங்களில் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகைதந்த கப்பல்களின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. அதற்கு ஏற்றாற்போல் துறைமுகத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது அவசியம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

# தோட்டத் தொழிலாளருக்கு கூட்டுத் துரோகம் இழைப்பு

*'ஒருமி' அமைப்பு கடும்விசனம்*

**கொழும்பு, பெப். 1**
**பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் மூலமாக மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர் சமூகம் திட்டமிட்ட வகையில் கூட்டுத் துரோகத்துக்கும் ஏமாற்றத்துக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. இதனை வன்மையாகக் கண்டிப்பதாக 'ஒருமி' மலையக சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கூட்டு ஒப்பந்தம் எனும் அடிமைச் சாசனம் மூலமாக வறுமைக்குள் தொழிலாளர் சமூகத்தைத் தள்ளி, அவர்களைத் தங்கிவாழும் வாழ்வு நிலைக்குள் வைப்பதுதான் தொழிற்சங்கத்தின் கடமையும் பொறுப்புமா?
பொருளாதார ரீதியில் பாதுகாப்பான சூழ்நிலையில் கூட்டு சமூகமாக வாழக்கூடாது எனும் மனநிலையிலேயே இந்த ஒப்பந்தம்செய்து கொள்ளப்பட்டுள்ளதாக எண்ணத் தோன்றுகிறது.
"தான் ஜனநாயகத்தின் காவலன் என்றும் அலரிமாளிகை ஜனநாயகத்தின் அடையாளம்" என்றெல்லாம் தலைமைஅமைச்சர் ரணில் குறிப்பிட்டிருந்தார். அவரின் தலைமையில் ஜனநாயகத்தின் அடையாளமான இடத்தில் தாமே கொடுத்த சம்பள வாக்குறுதியை மீறி உழைக்கும் மக்கள் சமூகத்தின் வாழ்வைப் பறித்தழிக்கும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டமை எந்த வகையில் ஜனநாயகம். வறுமை கொதிந்தெழுந்து பேசும் நாளில் ஜனநாயக விரோதிகளின் முகம் கிழிக்கப்படும்.
இதனைக் கண்டிக்கும் முகமாகவும் ஒடுக்கப்படும் மலையக மக்களை சுதந்திர வாழ்விலிருந்து நீக்கம் செய்யப்படுகின்றமையை எதிர்த்தும் மலையகம் எங்கும் கறுப்புக்கொடியேற்றி 71ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு சுதந்திர தினமாக அடையாளப்படுத்துமாறு மலையக உணர்வுள்ள அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (த-31)

## கையூட்டு பெற்றாரென பாடசாலை அதிபர் கைது

கொழும்பு, பெப். 1
மாணவர் ஒருவரைப் பாடசாலையில் சேர்க்க 5 ஆயிரம் ரூபா கையூட்டைப் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் அதிபர் கைதானார்.
ஹொரவப்பொத்தானை பாடசாலை ஒன்றின் பணிபுரியும் அதிபரே இலஞ்ச ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஹொரவப்பொத்தானை, மொரவெவப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வழங்கியதகவலைஅடுத்து அவர் இலஞ்ச ஒழிப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## உதயணன் விருது வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.1
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இரா. உதயணன் இலக்கிய விருது -2018 இற்கான விருதுகளை வழங்கவுள்ளனர்.
இதில் உயர் இலக்கிய விருது- அருணா செல்லத்துரை, சிறந்த ஊடகவியலாளர் விருது- பொ.மாணிக்கவாசகம், இனநல்லுறவு இலக்கிய விருது- உபாலி லீலரத்ன, படைப்பிலக்கிய விருதுகளாக நாவல்- 'யாவரும் கேளீர்' சிவஆரூரன், சிறுகதை - 'அமேசன் காட்டில் அழகன் பூசாரி'- கலைக்கோட்டன் அ.இருதயநாதன், சிறுவர் இலக்கியம்- 'சிறுவர் கதைகள்'- முத்து இராதாக்கிருஷ்ணன், காவியம்- 'விளைச்சல்' (சிறப்பு விருது) செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன், அயலகப்படைப்பு- 'முத்தன் பள்ளம்' அண்டனூர் சுரா, இலங்கையில் தமிழர் இறைமை (கட்டுரை)- கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம், தமிழ் வளர்ச்சி இலக்கியம்- 'நூல் தேட்டம்' என். செல்வராஜா,வாழ்நாள் சாதனையாளர் விருது- செ.குணரத்தினம் (இலக்கியத்துறை), செ.அந்தனி ஜீவா- (இலக்கியத்துறை), சு.துரைசிங்கம் (இலக்கியத்துறை), கலைஞர் கலைச்செல்வன் (நாடகத்துறை) ஆகியோர் பெற வுள்ளனர்.
விருது வழங்கும் நிகழ்வு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று நிறுவக இணைப்பாளர் தம்பு சிவா அறிவித்துள்ளார். (ஐ)



## அனைத்துலக உறவுகளுக்காக . மகிந்த ராஜபக்ச நிலையம்!

*அமைப்பதில் மகிந்த தீவிரமாகவுள்ளார்*

கொழும்பு, பெப். 1
அனைத்துலக உறவுகளுக்கான மகிந்த ராஜபக்ச நிலையம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகளில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தீவிரமாகக் களமிறங்கியுள்ளார். அதற்கான ஆவணங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் கையெழுத்திட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
அனைத்துலக உறவுகள், இராஜதந்திரம் மற்றும் அயலுறவுக் கொள்கைக்கான உலகத்துக்குள் நுழைவதற்கான முதல் படியாக இந்த நிறுவகம் இருக்கும் என்றும் மகிந்த ராஜபக்ச தனது கீச்சகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். கையெழுத்திடும் நிகழ்வில் மகிந்தவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவும் பங்கேற்றுள்ளார். எனினும் இது எங்கு, எந்த அடிப்படையில் அமைக்கப்படவுள்ளது என்பன பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## நிர்வாக கட்டமைப்புக்குள் படை அதிகாரி வேண்டாம்!

*சுங்கத் திணைக்களத்தினர் போராட்டம்*

கொழும்பு, பெப். 1
இலங்கைக் கடற்படையின் முன்னாள் அதிகாரியை சுங்கப் பணிப்பாளராக நியமிக்க அரசு எடுத்துள்ள முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.
கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் பணியாற்றும் சுங்க அதிகாரிகளைத் தவிர, ஏனைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் அனைவரும் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த, முன்னாள் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் பி.எம்.எஸ் சாள்ஸ்சுக்குப் பதிலாக, ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சாமல் பெர்னான்டோவை நியமிக்க கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
புதிய பணிப்பாளரின் கீழ் பணியாற்ற முடியாது என்று அறிவித்துள்ள அவர்கள், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை போராட்டத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.
சிவில் அரச திணைக்களங்கள், நிறுவனங்களின் தலைவர்களாக படை அதிகாரிகளை நியமிப்பதற்குத் தடை விதிக்கும் வகையில், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே பிறப்பித்திருந்த உத்தரவையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நியமனத்தில், 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் தலையீடுகள் உள்ளன.
இந்தப் பதவிக்கு நிர்வாக சேவை அல்லது சுங்க சேவையின் சிறப்புப் பதவி நிலை அதிகாரியே நியமிக்கப்பட வேண்டும் என்றும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால், கொழும்பு உள்ளிட்ட துறைமுகங்களின் பணிகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

# அம்பாறையின் எல்லைப் பிரச்சினைக்கு பேச்சு மூலமாகத் தீர்வு காணவேண்டும்

*கல்முனை மாநகர சபையில் தீர்மானம்*

அம்பாறை,பெப்.1
அம்பாறை மாவட்டத்தின் வடக்கு எல்லையும், கல்முனை மாநகர சபைக்கு உட்பட்டதுமான பகுதி எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்று கல்முன்ன மாநகரசபையின் மாதாந்த அமர்வில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
சுமுக பேச்சு மூலமாகத் தீர்வு காணமுயற்சிக்கவேண்டும். இணக்கப்பாடு எட்டப்படாவிடில் நீதிமன்றம் மூலமாக மாநகரசபை நிரந்தரத் தீர்வை எட்டவேண்டுமென்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
கல்முனை மாநகரசபையின் இந்த வருடத்துக்கான முதலாவது அமர்வு மாநகர முதல்வர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் மாநகரசபை சபா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
குறித்த எல்லைக்குப் பிரச்சினை தொடர்பான தீர்மானத்தைதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சோமசுந்தரம் குபேரன் முன்மொழிந்தார். கூட்டமைப்பு உறுப்பினரும், றொலோ அமைப்பின் உபதலைவருமான ஹென்றி மகேந்திரன் வழிமொழிந்தார். சபையில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.
அதன்பின்னர் கூட்டமைப்பு உறுப்பினர் குபேரன் சபையில் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:
எல்லைப் பிரச்சினை நீண்டகாலமாகத் தீர்வு காணப்படாது இருப்பது கவலை தரும் விடயம்.
காட்ரோட் எனப்படும் தாமரை மடுச் சந்தி என்பதே நமது எல்லை. இந்த எல்லை பல்வேறுகால கட்டங்களில் உள்ளூராட்சி சபை மாற்றங்களின்போதெல்லாம் அரசிதழ் அறிவித்தல்களிலும் உறுதிப்படுத்தப்பட்டே வந்துள்ளது.
ஆனாலும் எல்லை கபளீகரம் செய்யப்பட்டு, இந்த எல்லையிலிருந்து சுமார் 400 மீற்றர் வரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. வரு மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேசசபை, நமது சபைக்குரிய இந்தப் பகுதியில் கட்டட அனுமதிகள் வழங்கியும் வரிகள் அறவிட்டும் அத்துமீறல்கள் இடம்பெற்று வருகின்றன.
இதனை இனியும் அனுமதிக்க முடியாது. நமது முதல்வர் உறுப்பினர்கள்,பொதுஅமைப்புக்கள்இணைந்து எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் - என்றார்.
கூட்டமைப்பு உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் தீர்மானத்தை வழிமொழிந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:
காட்ரோட் எனப்படும் தாமரைமடுச் சந்தி எமது சபையின் வடக்கு எல்லை வரையறுக்கப்பட்டுப் பல்வேறு அரசிதழ் அறிவித்தல்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தப் பிரச்சினை நீடிக்கக்கூடாது. பேச்சு மூலமாகத் தீர்வுகாண முடியாவிட்டால் சட்டரீதியாக நீதிமன்றம் மூலமாகத் தீர்வைப் பொறுவோம் - என்றார்.
முதல்வர் றகீப் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:
எதிர்வரும் 14 ஆம் திகதி உயர் மட்ட அதிகாரிகள், ஆலய தர்மகர்த்தாக்கள், முக்கியஸ்தர்கள் கொண்ட சமரசக் கூட்டமொன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (த-30)

# இயற்கையைக் காக்கும் அபிவிருத்தியே முழு உலகினதும் இன்றைய எதிர்பார்ப்பு

## அரசதலைவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 1

**மனிதனின் இறப்புக்கும் உடல், உள நோய்களுக்கும் பெரிதும் காரணமாக அமையும் தொழிநுட்ப கொங்கிரீட் கட்டடங்களையே இன்று அபிவிருத்தியாக பார்க்கப்பட்டபோதும், இயற்கையின் பேண்தகு இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய புதிய அபிவிருத்தி செயன்முறையே முழு உலகினதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

கொழும்பு கோட்டையிலுள்ள அரசதலைவர் மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுற்றாடல் வழிகாட்டி அரசதலைவர் பதக்கம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றாடலைப் பாதுகாப்பது குறித்து உலகெங்கிலும் அனைவரும் முக்கியமான பேச்சுகள் நடத்துகின்றனர்.

சுற்றாடல்துறை அமைச்சர் என்ற வகையில் நாட்டுக்கு முன்வைத்துள்ள "நீலப் பசுமை யுகம்" எதிர்கால இலங்கையைக் கட்டியெழுப்பும் விரிவான செயற்றிட்டத்தில் சுற்றாடல் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. ஐந்து வருட திட்டம் ஒன்றின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்தநிகழ்ச்சித்திட்டம், நான்கு மில்லியன் பாடசாலை மாணவர்களை சுற்றாடலை நேசிக்கும் பிள்ளைகளாக மாற்றுவதை இலக்காகக் கொண்டவை. அரசதலைவர் பதக்கம் வழங்கப்பட்ட சுற்றாடல் வழிகாட்டி ஒருவருக்கு பல்கலைக்கழக நுழைவின்போது பாடவிதானத்துடன் இணைந்த வெளிக்களச் செயற்பாட்டுக்காக 4 புள்ளிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு 40 பாடசாலைகளைச் சேர்ந்த 93 சுற்றாடல் வழிகாட்டிகளுக்கு அரசதலைவர் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

சுற்றாடல் பற்றிய அறிவை புத்தகங்களுடன் மட்டுப்படுத்தாது அவற்றை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் இந்த வருடம் முதல் அனைத்து பாடசாலைகளிலும் செயற்றிறனாக நடைமுறைப்படுத்தப்படுவதன் அவசியத்தையும் அரசதலைவர் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினார் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)



# சபைகளின் அதிகாரம் ஆளுநர்களிடம் தொடர்ந்தும் இருப்பதை ஏற்கமுடியாது

## தேர்தலை நடத்த யோகேஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

செங்கலடி, பெப். 1

பல மாகாண சபைகள் கலைக்கப்பட்டு சபைகளின் அதிகாரம் ஆளுநர்களின் கைகளில் வழங்கப்பட்டுள்ளதை, தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. முதலிலே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெற்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அதனை முழுமையாகப் பயன்படுத்தும் அதிகாரத்தை மத்திய அரசு மாகாணங்களுக்கு வழங்கவில்லை. புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு அதிலே மாகாணங்களுக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், காலம்காலமாக இழந்த உரிமையைப் பெற்றுத்தருவோம் என்று நம்பியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கிறார்கள். ஒரு சில கசப்பான விடயங்களுக்காக தமிழ் மக்களில் ஒரு சிலர் அமைச்சுப் பதவிகளைப் பெற்று அபிவிருத்தி செய்யுங்கள் என்று கூறினாலும் பெரும்பாலான மக்கள் எமது அபிலாசைகளை நிறைவேற்றும் வரை எந்தப் பதவிகளையும் பெறக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். அமைச்சுப் பதவிகளைப் பெற்று அபிவிருத்தி தான் தேவை என்றால் தேசியக் கட்சிகளில் போட்டியிட்ட தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு மக்கள் வாக்களித்திருக்கலாம். கடந்த காலத்தில் முதலமைச்சராக, பிரதியமைச்சராக இருந்து தேசிய கட்சிகளில் போட்டியிட்டவர்களை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மக்கள் நிராகரித்த வரலாறு உள்ளது - என்றார். (த)

# மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்த ஐ.தே.க. விரும்பவில்லை!

## ஜோன் செனவிரத்ன குற்றச்சாட்டு



கொழும்பு, பெப்.1

மாகாண் சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்கவே ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகின்றது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன.

எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் முறையற்ற செயற்பாடுகளின் காரணமாகவே தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

தேர்தலை எந்த முறையில் நடத்த வேண்டும் என்ற விடயத்தை முன்னிலைப்படுத்தி கடந்த வருடம் முழுவதும் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பிலான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து சபாநாயகர் குறித்த எல்லை நிர்ணய அறிக்கையை மீளாய்வு செய்ய தலைமை அமைச்சர் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவை நியமித்தார். எல்லை நிர்ணய மீளாய்வு குழுவின் முதன்மையான நோக்கம் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த இரண்டு மாத காலத்துக்குள் அரச தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காகவே. ஆனால் நடைமுறையில் எதிர்பார்த்த எவையும் இடம் பெறவில்லை. மாகாண சபைத் தேர்தலை விரைவுப்படுத்துவதற்கு பதிலாக எல்லை நிர்ணய மீளாய்வு குழு தேர்தலை காலதாமதப்படுத்தும் நடவடிக்கைகளையே முன்னெடுத்தது. இத்துறையில் எல்லை நிர்ணய மீளாய்வு அறிக்கையினை தலைமை அமைச்சர் அரச தலைவரிடம் சமர்ப்பிக்கவில்லை.

இன்று 9 மாகாணங்களில் 6 மாகாண சபைகளின் பதவிகாலம் முழுமையாக முடிவடைந்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் மேலும் இரண்டு மாகாண சபைகளின் பதவிகாலம் முடிவடையும். பதவிக்காலம் முடிவடைந்துள்ள மாகாணங்களின் நிர்வாகம் ஆளுநரின் கண்காணிப்பில் கொண்டு வரப்படும். இந்த நிலைமையானது முற்றிலும் ஜனநாயகத்துக்கு எதிரானது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் அரச தலைவரின் பிரதிநிதியால் செயற்படுத்தப்படுவது கடினமான செயற்பாடாகும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது. மாகாண சபை தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு அரச தலைவர் முன்னெடுக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கன. ஆனால் இவ்விடயத்துக்கு ஐக்கிய தேசிய கட்சியே தடையாக உள்ளது. தேர்தலை பிற்போடுவதற்கு தொடர்ந்து ஏதாவது ஒரு காரணத்தை முன்வைத்து வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்துகிறது - என்றார். (ம-31)

# போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையோரே போதை ஒழிப்புத் திட்டங்களை அவமதிக்கின்றனர்!

*அரசதலைவர் கடுமையாகச் சாடுகிறார்*

*மாணவன் தாக்கப்பட்டமை பற்றி வாய்திறக்கவேயில்லை*

கொழும்பு, பெப். 1

போதைப்பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்களே போதைப்பொருள் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை அவமதிக்கின்றனர் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இளைஞர்களை போதைப்பொருளிலிருந்து விடுவிப்பதற்கு பல்கலைக்கழகங்களின் பங்களிப்புடன் சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அரசதலைவர் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

எத்தகைய தோற்றத்தில் இருந்தபோதும் அவர்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பணத்துக்கு அடிமையானவர்கள்.

மாத்தறைசனத்ஜயசூரியவிளையாட்டரங்கில் நடைபெற்ற "போதையிலிருந்து விடுதலை பெற்ற நாடு" போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மாத்தறை மாவட்ட மாநாட்டில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக இதுவரை முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பலப்படுத்துவதைப்போன்று பாடசாலை பிள்ளைகள் மற்றும் அரச அதிகாரிகளை இலக்காகக்கொண்ட சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சில மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

இளைஞர்களைப் போதைப்பொருள்களிலிருந்து விடுவிப்பதற்கு பல்கலைக்கழகங்களின் பங்களிப்புடன் சிறப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் றுகுணு பல்கலைக்கழகத்தின் போதைப்பொருள் ஒழிப்பு ஆராய்ச்சிப் பிரிவின் நடவடிக்கைகளுக்காக அரசதலைவர் நிதி அன்பளிப்புச் செய்துள்ளார். பேராசிரியர் சமன் சந்தன எதிரிவீர இதற்கான காசோலையை அரசதலைவரிடம் பெற்றுக்கொண்டார்.

மாத்தறை மாவட்டச் செயலர் பிரதீப் ரத்னாயக்க, அரச அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இந்தநிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர் என்றுள்ளது.

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்களுக்கு போதைத்தடுப்பு பற்றிய விழிப்பூட்டல் நிகழ்வில், போதைப் பொருள் கடத்துவோர், அவற்றுடன் தொடர்புடையோர் தொடர்பில் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். அதன்படி ஒரு சம்பவத்தை மாணவன் ஒருவர் அந்த விழிப்பூட்டல் நிகழ்வில் எடுத்துக்கூறியிருந்தான். அதன் பின்னர் மாணவன் அச்சுறுத்தப்பட்டிருந்தான். அது பற்றி பொலிஸாருக்கு அறிவித்தும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலையில் மாணவன் தாக்கப்பட்டு படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறான். (த)

# தொழிலற்ற இளையோருக்காக தொழில் நிலையம் திறப்பு

கொக்கட்டிச்சோலை, பெப்.1

மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொழிலற்ற இளையோருக்குத் தொழில்வாய்ப்பை ஏற்படுத்தும் தொழில் நிலையமொன்று நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

பிரதேச செயலர் திருமதி தெட்சணகௌரி தினேஷ் அதைத் திறந்து வைத்தார். ப்ரண்டினா நிறுவனத்தின் அனுசரனையுடன் தொழில் இல்லம் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிலையத்தில் உள்ள மனிதவள அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி அலுவலர்களை அணுகி பதிவுசெய்து தொழிலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. குறித்த தொழில் நிலையத்தின் ஊடாக தொழில் தேடுபவர்கள், தொழில் வழங்குநர் இருசாராரும் இணைக்கப்படவுள்ளனர். தொழில் வாய்ப்பு, தொழில் வழிகாட்டல் போன்றனவும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் பலர் கலந்து கொண்டிருந்தனர். (த)

# தேசிய அரசு அமைக்கும் பேச்சு வெற்றிகரமாக இடம்பெறுகிறது

## இறுதித் தீர்மானமே எட்டப்படவில்லை என்கிறது ஐ.தே.க

**கொழும்பு, பெப். 1**
**ஐக்கிய தேசியக் கட்சியாக இல்லாது பொதுக் கூட்டணியாகப் பயணிக்கத் தயாராக உள்ளோம். அதற்கான பேச்சு சகல கட்சிகளின் தலைவர்களுடனும் இடம்பெற்று வருகிறது. பேச்சு வெற்றிகரமாக அமைந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.**

ஆட்சியை வீழ்த்தாத வகையில் தேசிய அரசை அமைக்க சகலருக்கும் அழைப்பு விடுப்பதாகவும் ஐக்கியதேசிய கட்சி கூறுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் கூட்டணி அரசு அமைப்பது குறித்து ஆராய்வதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் இவற்றை உறுதிப்படுத்தினர். இது குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான்விஜயவர்தன தெரிவித்ததாவது:

தேர்தல் குறித்து சகலரும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். ஐக்கிய தேசிய கட்சி சகல தேர்தல்களையும் எதிர்கொள்ளத் தயாராகவேஉள்ளது. மாகாணசபைத் தேர்தல், அரச தலைவர் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகிய மூன்று தேர்தல்களையும் சந்திக்கத் தயாராக உள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியாக அல்லாது புதிய கூட்டணியாக செயற்படவும் தயாராக உள்ளோம். சகல கட்சித் தலைவர்களுடனும் பேச்சு நடத்தியுள்ளோம். பொதுக் கூட்டணிஅமைத்துச் செயற்படுவதில் அனைவரும் இணக்கம் கண்டுள்ளனர். இறுதித் தீர்மானமே எட்டப்படவில்லை - என்றார்.

அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்ததாவது:

தேசிய அரசை அமைக்கும் பேச்சு பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளன. அமைந்த தேசிய அரசு தனதுகடமையைச் செய்து முடிக்க முன்னரே கலைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் இன்றுவரை நெருக்கடிகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. எனினும் ஆட்சியை வீழ்த்தாத, மக்கள் பணியைச் செய்து முடிக்கக் கூடிய தேசிய அரசு ஒன்றை அமைக்க முடியும் என்றால் அதற்குத் தயாராகவே உள்ளோம் - என்றார். (த-61)



# சட்டம் தொடர்பான பயிற்சிகளை ஜேர்மன் அரசு வழங்குவது சிறப்பு

## நீதி அமைச்சர் தலதா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 1
நீதியரசர்களுக்கும் நீதித்துறை அதிகார சபைக்கும் சட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கு ஜேர்மன் அரசு வழங்கும் உதவிகள் பாராட்டத்தக்கவை. ஜேர்மன் அரசு தொடர்ந்தும் எங்களுக்கு உதவும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சில் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோன் ரூட் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று நீதி அமைச்சு தெரிவித்தது.

"நாட்டின் நீதித்துறையின் சுயாதீனம் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை. இலங்கை நீதித்துறைக்கு ஜேர்மன்அரசு மேற்கொள்ளும் பயிற்சி நடவடிக்கைகள் அறிவுறுத்தல்கள் மற்றும் நீதித்துறையின் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜேர்மன் அரசு தொடர்ந்து ஒத்துழைப்புகளை வழங்கும்" என்று இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கிடையில் நீதித்துறை தொடர்பான ஒத்துழைப்புகளை மேலும் அதிகரித்துக் கொள்வது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-61)



# காட்டு யானைகளின் வரவேற்புடன் ஆரம்பித்தது விளையாட்டுப் போட்டி

கொக்கட்டிச்சோலை, பெப். 1
மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட நாற்பதுவட்டை விபுலானந்த வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப்போட்டி பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் விளையாட்டு மைதானத்தில் காட்டு யானைகள் ஏராளம் நின்றுகொண்டிருந்தன. அங்கு காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. பாடசாலையின் சுற்றுவேலிகளை உடைக்கின்றமை, பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றமை, மனிதர்களைத் தாக்குகின்றமை போன்ற செயற்பாடுகளிலும் காட்டுயானைகள் ஈடுபடுகின்றன. அண்மையில் பாடசாலை முன்பாக வீடொன்றில் நின்றுகொண்டிருந்த பிள்ளையைப் பாடசாலை நேரத்தில் காட்டு யானை தாக்கிய சம்பவமும் இடம்பெற்றிருந்தது.

காட்டு யானைகளின் தொல்லைகளையும் எதிர்கொண்டு இங்குள்ள மாணவர்கள் கற்றலைத் தொடரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

இந்த நிலையில் போட்டிகள் ஆரம்பிக்க முன்னரும் யானைகள் அங்கு நிலைகொண்டிருந்தன. அதனால் இடையூறுகளை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. சிரமப்பட்டு அவற்றைக் கலைத்த பின்னரே போட்டிகளை ஆரம்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வித்தியாலயத்தின் அதிபர் செ.பரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். (த)

# கூட்டமைப்பின் பொங்கல் விழா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொங்கல் விழா நாளை வாகரையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-46)

# மதில் வீழ்ந்ததால் பெண் இறந்தார்

கொழும்பு, பெப். 1
வர்த்தக நிலைய மதில் உடைந்து வீழ்ந்ததில் பாதையில் பயணித்த பெண்ணொருவர் அதில் அகப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரகஸ்மங்ஹந்திய பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இது இடம்பெற்றது. அதெ இடத்தைச் சேர்ந்த ரோஹினி (வயது 49) என்பவரே உயிரிழந்தார்.

பொருள்கள் வாங்கச் சென்றபோது வர்த்தக நிலையத்தின் மதில் வெடித்து பெண் மீது வீழ்ந்துள்ளது. படுகாயமடைந்த அவர்

ஊரகஸ்மங்ஹந்திய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-71)

## ஐ.நா அமைதிப்படையிலுள்ளதால்

# இலங்கைப் படையின் பங்களிப்பு நாட்டுக்குப் பெரும் மதிப்புத்தான்!

## சபாநாயகர் கருஜயசூரிய தெரிவிக்கிறார்

கொழும்பு, பெப். 1
உலக அமைதிக்கான இலங்கைப்பாதுகாப்பு துறையினரின் பங்களிப்பு நாட்டுக்கு மதிப்பு எனத் தெரிவித்த சபாநாயகர் கருஜயசூரிய, ஐ.நா அமைதி காக்கும் படையில் இலங்கை தொடர்ந்தும் ஆக்க பூர்வமாகச் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படைக்கு இலங்கையின் இராணுவம், மருத்துவர்கள், தாதியர்களை இணைத்துக்கொள்வதில் காட்டப்படும் நடைமுறை தாமத நிலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கடந்த புதன்கிழமை கலந்துரையாடப்பட்டது. நாடாளுமன்றில் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹெனா சிங்கர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம மற்றும் பாதுகாப்பு அயலுறவு அமைச்சுக்களின் மேலதிக செயலர்கள் இராணுவ அதிகாரிகள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

அண்மையில் மாலியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இறந்த இலங்கை இராணுவத்தினர் இருவர் பற்றி இந்த கலந்துரையாடலில் கவனத்தில் கொள்ளப்பட்டது. உலக அமைதிக்காக இலங்கை நாட்டுக்கு பெரும் மதிப்பு என்று சபாநாயகர் தெரிவித்தார்.

இலங்கை பாதுகாப்பு துறை சார் அதிகாரிகள் ஐ.நா அமைதி காக்கும் படையில் தொடர்ந்தும் செயற்படுவார்கள். அதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இலங்கை விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (த-31)

# மட்டக்களப்பு வாகன விபத்தில் கல்லூரி விரிவுரையாளர் சாவு

செங்கலடி.பெப். 1
மட்டக்களப்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இது இடம்பெற்றது.

மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கந்தக்குட்டி கோமலேஸ்வரன் (வயது 50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்றிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து முச்சக்கர வண்டியொன்றை முந்திச்சென்றபோது எதிரே வந்த உந்துருளியை மோதி விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்துச் சாரதி ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடற்பாகங்கள் சிதறியுள்ளன. மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெற்றது. பொலிஸ்விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)



சீனாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள முதன்மை நகரமான சோங்கிங்கிங்கில் புதிதாகத் திறக்கப்பட்ட புத்தக நிலையம் ஒன்று புத்தகங்களைப் பார்வையிடுவதற்கு ஏற்ப சிறப்புற வடிவமைக்கப்பட்டுள்ளது.

# நிர்மலாதேவி விவகாரத்தில் மிகப் பெரிய அரசியல் பின்னணி

திருவில்லிபுத்தூர்.பெப்.1

அருப்புக்கோட்டை தேவாங்கர் கலைக்கல்லூரியின் கணிதத் துறைப் பேராசிரியையான நிர்மலாதேவி அதே கல்லூரியில் கல்வி கற்ற மாணவிகள் சிலரை முறைகேட்டுக்கு உட்படுத்த முயன்ற குற்றச்சாட்டில் கைதாகியிருந்தார்.

குறித்த மாணவிகளைத் தகாத நடத்தைக்கு உட்படுத்தும் நோக்கில் நிர்மலாதேவி பேசியதான ஒலிநாடா சமூக வலைதளங்களில் பரவியிருந்தது. உயர் அதிகாரிகளைப் பாலியல் திருப்திப் படுத்துவதற்கு மாணவிகளை வசப்படுத்த முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு விசாரணைக்காக நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட நிர்மலாதேவி செய்தியாளர்களிடம் 'எனது வாக்குமூலம் மிரட்டிப் பெறப்பட்டது. பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்திப் பிணை கிடைக்க விடாமல் செய்கின்றனர்' என்று கூறிச் சென்றார். இது பற்றி நிர்மலாதேவி சார்பாக வாதிடும் சட்டத்தரணி தெரிவிக்கும்போது,

'கடந்த 10 மாதங்களாக நிர்மலாதேவி சிறையில் உள்ளார். ஒரு வாரத்துக்கு முன்பு சிறையில் அவரைச் சந்தித்தேன். இந்த வழக்கு பாலியல் வழக்காகப் பார்க்கப்பட்டது. ஆனால் வழக்கில் பாலியல் மட்டும் அல்ல. மிகப்பெரிய அரசியல் பின்னணி உள்ளது'-என்றார்.






# மஞ்சள் அங்கிகளை எதிர்த்து சிவப்புக்கழுத்தணிப்போராட்டம்

பாரிஸ்.பெப்.1

பெற்றோல் மற்றும் டீசல் விலை உயர்வை எதிர்த்துப் பிரான்ஸ் மக்கள் மஞ்சள் அங்கிகளை அணிந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் போராட்டத்துக்குப் பணிந்த பிரான்ஸ் அரசு விலை உயர்வை உடன் நிறுத்தியது. ஆனால், அரசு முன்னெடுக்கும் இது போன்ற செயல்களுக்கு மக்களின் ஆதரவு அறியப்பட்டு அதன் பின்னரே செயற்படுத்தப்பட வேண்டும்.

அத்தகைதொரு ஜனநாயக நடவடிக்கையைச் சட்டமாக்குமாறு கோரி மஞ்சள் அங்கிப் போராட்டம் தொடர்ந்து வந்தது. இந்த நிலையில் மஞ்சள் அங்கிக் காரர்களை எதிர்த்தும், அந்த நாட்டு அதிபருக்கு ஆதரவளித்தும் புதிய குழுவினர் சிவப்பு நிறத்தில் கழுத்தில் துணிகளைக் கட்டியவர்களாகத் தம்மை அடையாளப்படுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மஞ்சள் அங்கிப் போராட்டக்காரர்களின் போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத பிரான்ஸ் அரசின் அரசியல் சதியாக இது கருதப்படுகிறது. இதன் காரணமாக மஞ்சள் அங்கிப் போராட்டத்தை நீத்துப்போகச் செய்யலாம் என்பது அரசின் நோக்கமாக இருக்கிறது என்று அரசியலவதானிகள் தெரிவிக்கின்றனர்.



# வட துருவத் அமெரிக்காவ



சிக்காக்கோ.பெப்.1

**பூமியின் வடதுருவப் பகுதியான 'ஆர்ட்டிக்' பனிப்பாறைகள் நிறைந்தது. அங்கு ஏற்பட்ட தாழமுக்கத்தால் அமெரிக்காவில் வரலாறு காணாத கடும் பனிப்பொழிவும் கடும் குளிரும் நிலவி வருகிறது. இது மிகவும் அபாயகரமான வெப்ப நிலைக்குறைவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடும் குளிரால் அமெரிக்காவின் மின்னசோட்டா நகரில் ஒருவர் வீட்டருகே சாவடைந்தார். அமெரிக்காவின் சிக்காக்கோ பகுயில் இந்தக் கடும் பனிப்பொழிவு, பயங்கரமான குளிரால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை மைனஸ் 50 டிகிரியாக வீழ்ச்சி கண்டுள்ளது. சிக்காக்கோ வில் 1985ஆம்

ஆண்டு

பநிலை கு

வெப்பநி

அது தற்பே

வெஸ்ட் ப

டிகிரி செல்

மிட்வெஸ்



# பிறேசிலில் அணை சகதிக்குள் புதைந்து

பிறேசிலியா.பெப்.1

பிறேசிலில் தென்கிழக்குப் பகுதியில் பர்மாடின்ஹோ நகரிலுள்ள அணைக்கட்டு ஒன்று கடந்த வியாழக்கிழமை உடைந்தது.

இந்தச் சம்பவத்தில் சாவடைந்தவர்களின் தொகை அதிகரித்துள்ளது.

300க்கும் மேற்பட்டவர்களை நீர் அடித்துச் சென்றது. அவர்கள் சகதிக்குள் புதைக்கப்பட்டிருக்கலாம் ஆகவே சாவுத் தொகை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்பட்டிருந்த நிலையில் சாவு எண்ணிக்கை 99ஆக உயர்ந்துள்ளது.

குறித்த அணைக்கட்டுக்கு அருகே தனியாருக்குச் சொந்தமான இரும்புத்தாது சுரங்கம் ஒன்று உள்ளது. இந்த அணை உடைந்ததால் அதிகம் பாதிக்கப்பட்டது



# வத்தில் தாழமுக்கம்
# காவில் பயங்கரப் பனி



ஆண்டு மைனஸ் 33 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை குறைந்ததுதான் குறைந்தபட்ச வெப்பநிலையாக இருந்தது.

அது தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. மிட்வெஸ்ட் பகுதியில் வெப்பநிலை மைனஸ் 18 டிகிரி செல்சியஸுக்குக் குறைந்துள்ளது. மிட்வெஸ்ட் பகுதியில் உள்ள நகரங்களில் வெப்பமாக்கல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் மூடப்பட்டன, வானூர்திச் சேவைகள் நிறுத்தப்பட்டன.

வடக்கு மற்றும் மத்திய ஜோர்ஜியாவில் பனிப்பொழிவும் குளிர் காற்றும் நீடிக்கும் என்று வானிலைஅறிக்கைகள்தெரிவிக்கின்றன. சிக்காக்கோநதி, மிச்சிக்கன்ஏரிஎன்பன உறைந்து போயுள்ளன.



அமெரிக்காவின் விஸ்கான்சின் பகுதியில் 2 அடிவரை பனிபடர்ந்து இருக்கிறது.

'போலார் வோர்டெக்ஸ்' என்று சுட்டப்படும் இந்தப் பனிக் காற்றசைவு பொதுவாக வடதுருவத்தில்தான் சுற்றிக் கொண்டிருக்கும்.

ஆனால் இந்த முறை தென்புறமாக நகர்ந்து அமெரிக்காவைத் தாக்கியுள்ளதுஎன்று அமெரிக்காவின்காலநிலை அவதானிப்பு ஆய்வாளர்கள் கூறினார்.

அமெரிக்காவில் பனிக்காற்று வீசுவது போல் ஆஸ்திரேலியாவில் வெப்பக் காற்று வீசியது குறிப்பிடத்தக்கது.

# என்னைக் கொல்லுமாறு ட்ரம்ப் உத்தரவு
## வெனிசுவேலா அதிபர் பரபரப்பு குற்றச்சாட்டு

கரகஸ்.பெப்.1

தன்னைக் கொலை செய்யும்படி கொலம்பியாஅரசுமற்றும்கொலம்பியாவைச் சேர்ந்த கொலைகாரக் குழுக்களுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப்உத்தரவிட்டுள்ளதாகவெனிசுவேலாவின் அதிபர் நிகோலஸ் மதுரோ குற்றம் சாட்டியுள்ளார்.



வெனிசுவேலாவில் நிலவும் அரசியல் குழப்பத்துக்கு அமெரிக்கா தான்காரணம்எனக்குற்றம்சாட்டி வரும் அந்த நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ அமெரிக்கா உடனான அனைத்துஉறவுகளையும் முறித்துக்கொள்வதாக அண்மையில் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து நிக்கோலஸ் மதுரோவுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் வகையில் அந்த நாட்டின் அரச எண்ணெய் நிறுவனம் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இந்த நிலையில், தன்னைக் கொலைசெய்வதற்குட்ரம்ப்உத்தரவிட்டுள்ளதாக நிக்கோலஸ் மதுரோ குற்றம் சாட்டியுள்ளார்.

ரஷ்யாவைச்சேர்ந்த செய்திநிறுவனம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார். அந்தச் செவ்வியில் அவர் தெரிவித்ததாவது:

என்னைக் கொலை செய்யும்படி கொலம்பியாஅரசுமற்றும்கொலம்பியாவைச் சேர்ந்த கொலைகாரக் கும்பல்களுக்கு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு நாள் எனக்கு ஏதாவது நடக்கலாம்.

எனக்குஎன்னநடந்தாலும்அதற்கு ட்ரம்ப்மற்றும்கொலம்பியாஅதிபர் இவான்டியூக்தான்பொறுப்பாவார்கள் என்றார்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெனிசுவேலாவின் தலைநகர் கரகசில் நடந்த இராணுவ தின நிகழ்ச்சியின் போது, ஆளில்லா விமானங்கள் மூலம் மதுரோவைக்கொல்லமுயற்சிநடந்தமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

அமெரிக்காவுக்குச்சிம்மசொப்பனமாகவிளங்கியவர்வெனிசுவேலாவின் மறைந்த அதிபர் ஹியூகோ சாவேஸ். இவரது தலைமையில் வெனிசுவேலாவில்அமைந்தபுரட்சியைபொலிவரியன்புரட்சிஎன்று குறிப்பிடுவர். முதலாளித்துவத்தையும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அயலுறவுக் கொள்கையையும் கடுமையாகஎதிர்த்தவர். போரற்ற உலகம், பசி, நோய், கல்லாமை அற்ற சமத்துவ ஜனநாயக சமூகத்துக்காகப் போராடியவர். அவரது மறைவுக்குப் பிறகு அதிபரான நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சியில்அரசியல்சர்ச்சைகள்அடிக்கடி தோன்றுகின்றன. நிலையற்ற தன்மையும், ஜனநாயகச்சிக்கல்களும் அவ்வப்போது எழுகின்றன. அங்கு எழுகின்ற அரசியல் நெருக்கடிகளில் அமெரிக்காவின் தலையீடு இருந்து வருகிறது.

# முறைப்பாடுகளுக்கு முகம் கொடுத்தாலும் முகநூலின் பயனாளர்கள் குறையவில்லை



> மாதம் ஒன்றில் முகநூலுக்குள் நுழைகின்ற பயனாளர்களின் எண்ணிக்கை 2.32 பில்லியன். கடந்தாண்டு அது 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.


கலிபோர்ணியா.பெப்.1

தரவுகள் திருடப்பட்ட குற்றச்சாட்டு உள்ளிட்ட பல விமர்சனங்கள் சமூக வலைத்தளமான முகநூல் மீது இருந்தாலும், அதைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை குறையவில்லை என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாறாக முகநூலின் பயனாளர்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகின்றது என்றும் அவை தகவல் தருகின்றன.

மாதம் ஒன்றில் முகநூலுக்குள் நுழைகின்ற பயனாளர்களின் எண்ணிக்கை 2.32 பில்லியன். கடந்தாண்டு அது 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

முகநூல்மீதான குற்றச்சாட்டுகள் அதன்பயன்பாடு, வருமானம் மீது எந்த எதிர்மறைத் தாக்கத்தையும் செலுத்தவில்லை என்பதையே இது காட்டுகின்றது. அத்துடன் முகநூலின்வருமானம்30சதவீதம்உயர்ந்திருக்கிறது.



# உணவுக் கூப்பன் பெறுவதில் நெரிசல் மலேசியாவில் பெண்கள் இருவர் சாவு

கோலாலம்பூர்.பெப்.1

மலேசியாவில்வழங்கப்பட்ட இலவச உணவுக்கூப்பன்களைப் பெறுவதற்கு முண்டியடித்த கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி இரண்டு பெண்கள் சாவடைந்தனர். மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் புது மாவட்டத்தில் உட்புறச் சந்தை ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்தது. 200 இலவசக்கூப்பன்கள்வரையறுக்கப்பட்டிருக்க ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அதைப் பெறுவதற்காகக் குழுமிருந்தனர்.

இதனால், ஒருவரையொருவர் முண்டியடித்து தள்ளுப்பட்டு நெருக்குதலுக்கு உள்ளாகினர். இதன்போது 78 வயதான லா லொன் நாங் மற்றும் 85 வயதான அக் போக் இருவரும் மூச்சுத்திணறி இறந்தனர். அடுத்த வாரம் வரவிருக்கும் சந்திர நாள்காட்டியின் படியான புத்தாண்டை முன்னிட்டு இந்தக் கூப்பன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த இலவசக் கூப்பன்கள் முதியோருக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன.

இந்தக் கூப்பன்களைப் பெறுவதற்குப் பதிவு செய்ய நான்கு, நான்கு பேராக மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நெறிமுறையை வரிசையில் நின்றவர்கள்மீறியதால், ஒருவரையொருவர்முண்டியடித்துச் செல்லதொடங்கினர். இதனாலேயேஇந்தஅசம்பாவிதம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ணைக்கட்டு உடைந்ததால்
# தந்து சாவுகள் அதிகரிப்பு


ன்ஹோ
யொ ழக்கி
தொகை
சென்றது.
ம்ஆகவே
ஞ்சப்பட்டி
க உயர்ந்
ருக்குச்
உள்ளது.
கப்பட்டது.

அந்தத் தொழிற்சாலையும், அதில் பணியாற்றியவர்களுமே. அணையில் இருந்த தண்ணீரும், சேறும் சகதியுமாக பெருக்கெடுத்து வெளியேறியது.

இதில் ஏராளமான தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

அணை வளாகத்தில் இருந்த உணவகம் சகதியில் புதைந்தது. தொழிலாளர்கள் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இதுதவிர அணையை ஒட்டியுள்ள பகுதியில் இருந்த நிறுவனங்கள், தொழிலாளர்கள்வசிக்கும்பகுதிகளில் பெருமளவிலான சகதி நிரம்பியதால், அவர்களின் வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்தன. மீட்புப்பணிகள் நடந்து வருகின்றன.



# வேசங்கள் நிலைப்பதில்லை



ஒரு ஏரியில் நிறைய மீன்களும் பாம்புகளும் வாழ்ந்து வந்தன. முதலில் நட்பு பாரட்டி இந்த இரண்டு இனங்களும் வாழ்ந்து வந்தன. பருவமழை பொய்த்து ஏரி வற்ற ஆரம்பித்ததும் இடத்துக்குச் சண்டை போட்டு ஏரியைப் பிரித்துக் கொண்டு வாழ்ந்தன. ஒரு இனம் வாழும் இடத்துக்கு மற்றொரு இனம் போக்க் கூடாது. மீறினால் எதிரியின் கையில் சரியான உதை கிடைக்கும்.
இதில் ஒரு விலாங்கு மட்டும் தந்திரமாக வேஷம் போட்டு ஏரி முழுவதும் சுற்றி வந்து கொண்டிருந்தது.
பாம்புகள் இடத்துக்குப் போகும் போது விலாங்கு தன் நீண்ட உடலையும் பாம்பு போன்ற தலையையும் வைத்து தான் ஒரு பாம்பு என்று காட்டிக் கொள்ளும்.
மீன்களின் இடத்துக்குப் போகும் போது உடலைச் சுருட்டி மீன் போன்ற துடுப்புகளையும் வாலையும் காட்டி தான் ஒரு மீன் என்று காட்டிக் கொள்ளும். இப்படி ஏமாற்றியே பொழுதை ஓட்டிக் கொண்டு இரண்டு இடங்களிலும் உணவு பெற்று ஏரி முழுவதும் சுற்றித் திரிந்து வந்தது விலாங்கு.
வெயில் காலம் அதிகமானது. ஏரி மேலும் வற்றியது. பாம்புக் கூட்டமும் மீன் கூட்டமும் தங்கள் இடங்களை நெருக்கியும் குறுக்கியும் அமைத்துக் கொண்டே வந்தன.
ஒரு நாள் இரண்டு கூட்டங்களும் ஒன்றன் இருப்பிடத்தை இன்னொன்று பார்த்துக் கொள்ளும் தூரத்தில் அமைக்கும் நிலை வந்தது.
அப்போது மீனாக விலாங்கு வேசம் போட்டதால் பாம்புகள் பார்த்து தாக்கின. பாம்பாக வேசம் போட்டதால் மீன்கள் கடித்துக் குதறின.
"நான் பாம்பும் அல்ல மீனும் அல்ல" விலாங்கு கதறியது. நம்புவாரில்லை. விலாங்கு "முதலிலேயே உண்மையைச் சொல்லியிருக்கலாமோ" என்று நினைத்துக் கொண்டு செத்தே போனது.




# எமது நாடு இலங்கை

எமது நாடு இலங்கை. இலங்கை கடலால் சூழப்பட்டது. அதனால் எமது நாடு தீவாகும். எமது நாடு மிகவும் அழகானது. இலங்கை 'இந்து சமுத்திரத்தின் முத்து' என சிறப்பிக்கப்படுகிறது. இலங்கை ஒன்பது மாகாணங்களாகவும் 25 மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.
எமது நாட்டு காலநிலை சரீரத்திற்கு மிகவும் நல்லது. மலைநாட்டு பிரதேசத்தில் குளிர்மையாகவும் வேறு பிரதேசங்களில் சாதாரண குளிரும் வெப்பமும் காணக்கூடும். மழையும் குறிப்பிட்டகாலங்களில் வரும்.
எமது நாட்டில் தூய்மையான கங்கைகளும் அழகான நீர்வீழ்ச்சிகள் உண்டு. எமது நாட்டுக்கு பெருமளவு உல்லாசப் பயணிகள் வருவார்கள். இலங்கையில் பல்வகையான இனத்தவர்கள் உண்டு. சிங்கள, முஸ்லிம், தமிழ், பௌத்தர்கள் வாழ்கிறார்கள். சிங்களம் தமிழ், ஆங்கிலம் என்ற பலமொழிகள் பேசப்படுகிறது. நாம் எமது நாட்டை நேசிக்கிறோம்.

# சிகிரியா



இலங்கையின் இணையற்ற கலைப் பாரம்பரியத்தின் சின்னமாக சிகிரியா கருதப்படுகிறது. இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது.
ஆயிரத்து 144அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன. இவை 6ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.
எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இக்கோட்டையை முதலாம் காசியப்பன் (கி.பி. 477495) அமைத்தான். கோட்டையை சுற்றி அகழியும் கட்டப்பட்டுள்ளது.
சிகிரியா குன்றானது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) பாதுகாக்கப்படவேண்டிய உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குகையினுள் சுவரோவியங்கள் இயற்கை வர்ணங்கள் கொண்டு வரையப்பட்ட பல சித்திரங்கள் காணப்படுகின்றன. இவைகளில் பல இன்னும் அழியாமல் அழகாகக் காட்சி தருகின்றன. இந்த ஓவியங்களில் காணப்படும் பெண்களை தேவதைகள் எனச் சிலரும், காசியப்பனின் மனைவிகள் எனச் சிலரும் குறிப்பிடுகிறார்கள். சிலர் கையில் தட்டை ஏந்தியவாறும், சிலர் மலர்க்கொத்தை ஏந்தியவாறும், சிலர் மேலாடை இன்றியும், சிலர் மேலாடையுடனும், தனித்தும், கூட்டமாகவும் இருக்குமாறு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.



# சைக்கிளின் வரலாறு

மனிதனுக்கு போக்குவரத்துக்கு உதவும் பயன்படும் பொருட்களில் சைக்கிள் முக்கியமானது. பாரன் வான்டிரய்ஸ் என்ற ஜெர்மனியர்தான் 1816ஆம் ஆண்டில் சைக்கிளைக் கண்டுபிடித்தவர்.
முற்றிலும் மரத்தினாலான அதை அப்போது விளையாட்டுக் குதிரை என்றழைத்தார்கள். மூன்று வருடங்களுக்குப் பின் அமெரிக்காவிலும் இது தயாரானது.




ஆனால் மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஒருவன் இந்த வண்டியில் சில அபிவிருத்திகளைச் செய்து எழுபது மைல் தூரம் சவாரி செய்தும் காட்டினான்.
இதன் மூலம் மக்களிடம் பரபரப்பூட்டியதாகக் குற்றம் சாட்டி பொலிஸார் இவனைச் சிறையில் அடைத்தனர். அமெரிக்காவில் 1869 ஆம் ஆண்டில் மீண்டும் சைக்கிள் உற்பத்தியைத் தொடங்கினார்கள்.
இதற்கு "எலும்பு குலுக்கி" என்று பெயர். இவ்வண்டியில் பின் சக்கரத்தைவிட முன்சக்கரம் பெரிதாக இருக்கும். பெடலும், கிராங்கும் முன் சக்கரத்துடன் பொருத்தப்பட்டிருக்கும். 1886ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சைக்கிளில் முன் சக்கரத்தின் உயரம் ஐந்து அடி இருந்தது. பின் சக்கரத்தின் உயரம் 16 அங்குலம்தான். பின்னர்தான் இரு சக்கரங்களும் சம அளவுள்ள சைக்கிள்கள் தோன்றின.





# நான் பார்த்த புத்தகக் கண்காட்சி

ஆண்டு தோறும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் பன்னாட்டு புத்தகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. கடந்த செப்டம்பரிலும் சர்வதேச புத்தகக் கண்காட்சி அங்கு நடைபெற்றது.
கண்காட்சியைப் பார்க்க நானும் அப்பாவுடன் சென்றேன். முந்நூறுக்கு மேற்பட்ட விற்பனைக் கூடங்கள் அங்கே இருந்தன. அவற்றை சுற்றிப்பார்ப்பதிலேயே அதிக நேரத்தைக் கழித்தேன். என் போன்ற மாணவர்கள் ஏராளமானவர்கள் வந்திருந்தனர். தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளிலான பல்லாயிரக்கணக்கான நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பாடசாலைக்குரிய நூல்களும் பெருமளவில் இருந்தன. எனக்குத் தேவையான நூல்களை வாங்கிக் கொண்டேன். இப்புத்தகக் காட்சியைப் பார்ப்பதன் மூலம் பல புதிய தகவல்களை தெரிந்து கொள்ள முடிந்தது





## கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி
## பழைய காளி கோயில் என விளங்கும்
## திருவருள்மிகு ஸ்ரீ சிவமஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்
## மகோற்சவ விஞ்ஞாபனம் - 2019

### மஹோற்சவ விவரம்

| | | | |
|---|---|---|---|
| 05.02.2019 | செவ்வாய்க்கிழமை | - காலை 10.00 மணிக்கு | - கொடியேற்றம். |
| 11.02.2019 | திங்கட்கிழமை | - | - பக்தர் முக்தி பாவன உற்சவம் |
| 13.02.2019 | புதன்கிழமை | - | - வசந்தோற்சவம் |
| 14.02.2019 | வியாழக்கிழமை | | - திருமஞ்சம் |
| 16.02.2019 | சனிக்கிழமை | | - வேட்டைத்திருவிழா |
| 17.02.2019 | ஞாயிற்றுக்கிழமை | | - சப்பறம் |
| 18.02.2019 | திங்கட்கிழமை | - காலை 10.00 மணிக்கு | - பஞ்சரதபவனி |
| 19.02.2019 | செவ்வாய்க்கிழமை | - காலை 10.00 மணிக்கு | - தீர்த்தோற்சவம் |
| | | | - கொடியிறக்கம் |
| 21.02.2019 | வியாழக்கிழமை | | - சிவன், அம்பாள் திருக்கல்யாணம், பூங்காவனம், ஊஞ்சல் பூந்தண்டிகை |
| 23.02.2019 | சனிக்கிழமை | - பகல் | - காத்தவராயர், ஆஞ்சநேயர் அபிஷேகம், காத்தவராயர் மடையும் (சுளகு மடையும்) |

**குறிப்பு:-** சிவராத்திரி அன்று (04.03.2019) திங்கட்கிழமை இரவு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்திலிருந்து அடியார்கள் நான்கு சாமமும் தீர்த்தக்காவடி எடுத்து வந்து இங்கு வீற்றிருக்கும் காசி ஈஸ்வரலிங்கத்துக்கு தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்யலாம் (பால் காவடியும் எடுக்கலாம்).

காத்தவராயர் மடை (23-02-2019) சனிக்கிழமை அன்று பழைய மரபு முறைப்படி அடியார்கள் பங்குபற்றும் விதத்தில் சுளகுமடை நடைபெறும்.

பங்குனி மாதம் நான்கு திங்கட்கிழமையும் திருக்குளிர்த்தி நடைபெறும்.

**அனைவரும் வருக அன்னையின் திருவருள் பெறுக**

**அம்பாளின் தொண்டில் அறங்காவலர்**

(IN/9130)(11,17)

---

## மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா - 17.02.2019

**கடைகளுக்கான இடங்கள் வழங்குதல்**

21.01.2019 ஆம் திகதியில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாக தூய லூர்து அன்னை திருத்தல திருவிழாவின் போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் கடைகளுக்கான இடங்கள் 04.02.2019 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வழங்கப் படவுள்ளது.

கடைகளுக்கான இடங்களை பெற்றுக் கொள்ள விரும்புவோர் மாதகல் தூய லூர்து அன்னை திருத்தலத்திற்கு சமூகம் தந்து கடைகளுக்கான இடங்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மேலதிக தொடர்புகளுக்கு :**

**077 304 3339 இலக்க தொலைபேசி** இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளலாம்.

**பங்குத்தந்தை,**
**மாதகல்**

(CS 22953)(14.17)

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111
உதயன்

---

# NORTH LANKA IIT

## இலங்கையின் தலைசிறந்த முதன்மை உயர்கல்வி நிறுவனம்

**UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்**

**BA in English (Top Up)**
Entry Qualification: 2 Years Diploma / HND in English
Duration: 1 Year

**BA in English**
Entry Qualification: A/L 3 Passes and O/L Credit in English
Duration: 3 Years

**B.Sc in Agriculture Science (Top Up)**
Entry Qualification: 2 Years Diploma / HND in Agriculture
Duration: 1 Year


**B.Sc in Agriculture Science**
Entry Qualification: O/L
Duration: 3 Years

**Register Now**

THE REGISTRAR,
North Lanka IIT, Top Floor, People's Bank Building,
Stanley Road, Jaffna.
Tel : 0214927088 | 0214930189 | 0767504535

---


## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவில்...



நீர்வேலியூர் -
## அமரர் செல்லையா சுப்பிரமணியம்
(ராஜ்மணி - ஆச்சாரியார்)

மலர்வு 15.05.1944 உதிர்வு 12.02.2018

**திதி: திரயோதசி**



கண்ணில் ஈரம் காயவில்லை - கால
ஆண்டு மட்டும் ஒன்றாகிவிட்டது
விண்ணகம் சென்றுவிட்ட எம் குலவிளக்கே - முதல்
ஆண்டுத் திவச ஆராதனையில்
மண்ணில் உன் மைந்தர் மருகர் பேரருடன்
வேண்டி உன்னை அழைத்து வேதனையில்
- விம்முகிறோம்

நீர்வையம் பதியினிலே நீளநடந்து
பார்போற்ற ராஜ்மணி பந்தலை அமைத்து
சீர்மிகு செல்வனாய் சிந்தை தனில் அமர்ந்து
ஊர்மெச்சும் உன்னத விளக்காய் இருந்து
வேர் ஊன்றி விழுதெறிந்து நிழல்தந்த விருட்சம்
பேர் பெற்ற சுப்பிரமணியம் எங்கள் பிதாமகன்

C.T.P. மணியம் என்றும் ராஜ்மணியம் என்றும்
சிறப்பான இடம்பிடித்து மேதினியில் வாழ்ந்தவரே - உம்
நினைவுகள் சுமந்தபடி பிள்ளைகள், மருகர்கள்
பேரர்கள் கூடி நின்று கனேடிய மண்ணிலே
ஆண்டுத் திவசத்தில் அழுது ஆராதித்து வணங்கின்றோம்
அடைந்திடுக சாந்தி!....

அன்னாரின் முதலாம் வருட ஆத்ம சாந்திப்பிரார்த்தனை கனடா நாட்டினிலே 01.02.2019 அன்று 50 Seal stone terrace, Scar borough, M1E 4J7, Canada எனும் முகவரியிலும், மதியபோசன விருந்துபாசரம் 02.02.2019 அன்று Sri Ayyappan temple, 635 Middlefield Rd. Scar borough, ON MIV 5B8, Canada எனும் முகவரியிலும் இடம்பெற இருப்பதால் இந் நிகழ்வுகளில் கலந்துகொள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர் (கனடா)**

**சிந்து - 0044 794 932 3606 , சீனு - 0016 476 074 451**
**வினோ - 0016 478 855 474, கோபி - 0033 362 988 2080**

(cs 21652) 13.17)

---

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி ருக்மணி நடராசா

மலர்வு 01.05.1946 உதிர்வு 10.02.2010

**திதி: 01.02.2019**



அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எமைவிட்டு சென்றதேனோ
கருணை நிறைந்த உங்கள் முகம் காண கவலையுடன் தேடுகின்றோம்

இறையடி தொண்டு செய்தால் தானோ
இறைவன் தங்களை தன்னோடு கொண்டு சென்றான்
துயர் உற்ற வேளையில் எம் துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர் பகிரவோ எம்மோடு
தாயே நீங்கள் இல்லை

ஆண்டொன்பது ஆனதம்மா உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
அம்மா உங்கள் நீங்காத நினைவலைகளுடன்
இறைவனைக் கேட்கின்றோம்

கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒரு கருவறை
தந்தால் எம் அன்னையின் வயிற்றில் உதிக்கும் வரத்தைத் தந்திடுவாய்.

138A, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

நடராசா (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எங்கே போகிறது வடக்கு?

போதைக்பொருள்கடத்தல்மற்றும்விற்பனையில் ஈடுபடுபவர்களை அடையாளம் காட்டிய மாணவன் ஒருவன் தாக்கப்பட்டிருக்கின்றான், அவன் கற்கும்பாடசாலையில்போதைப்பொருள்விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்த ஆசிரியர் ஒருவரை இலக்குவைத்துபாடசாலைக்குள்நுழைந்தகும்பல்ஒன்று அங்கிருந்தவர்களைஅடித்து, உதைத்து, வதைத்துள்ளது.

சினிமாப்பாணியிலானஇந்தச்சம்பவங்கள்வேறெங்கும் அல்ல, வடக்கிலேயே நடைபெற்றுள்ளன. அதுவும் அரச தலைவரால் அறிவிக்கப்பட்ட போதைப்பொருள்தடுப்பு வாரத்தையொட்டியே நடந்திருக்கிறது.

சிறுவன் மீதும் பாடசாலை மீதும் தாக்குதல் நடத்தியவர்கள் போதைப் பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகத்தோடு தொடர்புபட்டவர்கள்என்றகுற்றச்சாட்டுப்பலமாகஇருக்கின்றது.சிறுவனைத்தாக்கினார்கள்என்கிறகுற்றச்சாட்டில் மூவரைப் பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். ஆனால், இந்தக் கைது இடம்பெற்ற பின்னர்தான் பாடசாலைக்குள் புகுந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியிருக்கிறது. என்றால்,

வடக்குஎங்கே போகிறது? இப்படி வெளிப்படையாகவே சவால்விடும்துணிவு குற்றவாளிகளுக்கு எப்படி வந்தது? நாடுமுழுவதும் விழிப்புணர்வோடு இருக்கும்போதே இத்தகைய தாக்குதல்களையும் மிரட்டல்களையும் குற்றவாளிகளால்விடுக்கமுடிகிறதுஎன்றால், வடக்கில்சட்டம் ஒழுங்கின் நிலை என்ன?

அச்சத்தையும்அசூசையையும்ஏற்படுத்துகின்றனஇந்தச் சம்பவங்களும் அவை எழுப்பும் கேள்விகளும். இத்தகைய செயல்களைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால், குற்றவாளிகளுக்கு எதிராகப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கோஅனைத்துநடவடிக்கைகளும்மிகமெதுவாகவும் வழக்கமானதாகவுமே இருக்கின்றன.

எதிர்நடவடிக்கைகளும்விளைவுகளும்குற்றவாளிகளை அச்சுறுத்தும் வகையில் இருப்பதாகப்படவில்லை. அப்படியிருந்திருந்தால்சிறுவன்மீதானதாக்குதல்தொடர்பில் மூன்றுபேர்கைது செய்யப்பட்ட பின்னரும் பாடசாலைக்குள்புகுந்துதாக்குதல்நடத்தும்துணிவைக்குற்றவாளிகள் பெற்றிருக்கமாட்டார்கள்.

20வருடங்களுக்குமுன்னரும்ஒருகாலத்தில்இதுபோன்றதொருநிலமை இருந்தது. போராளிக்குழுக்களின்வளர்ச்சி மற்றும் சமூகக் குற்றங்களுக்கு எதிராக போராளிக் குழுக்கள் எடுத்த தீவிரமான நடவடிக்கைகள் என்பனவே இத்தகைய குற்றங்களை அடியோடு இல்லாமலாக்கியது. குற்றவாளிகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அடக்க ஒடுக்கமாக இருக்க வழி வகுத்தது.

இன்று அத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாத நிலையில் முன்னிலும்பார்க்கத்துணிபு பெற்றுவிட்ட இந்தச்சமூகக் குற்றவாளிகள்சமூகத்தைப்பாதுகாக்கமுற்படுபவர்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டார்கள் என்பது கவலையளிக்கின்றது. இந்த நிலமை தொடர்வதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்பட முடியாது.

அப்படித் தொடர்ந்தால் வடக்கில் மக்கள் வாழ முடியாத நிலையே ஏற்படும். இந்த மண் கடத்தல்காரர்களினதும் குற்றவாளிகளினதும் கூடாரமாகிவிடும். எனவே இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது மிகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் போதைக் கடத்தல்காரர்கள் குறித்து தகவல் தருவதற்கும் எவரும் அச்சப்படும் நிலையே ஏற்படும்.

போதைப் பொருள் தடுப்பு வாரத்தை அறிவிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் கடுமையாக இருப்பதை அரசதலைவர் உறுதிப்படுத்தவேண்டும். அதுபோன்றேசிறுவன்தாக்கப்பட்டமைமற்றும்அவனது பாடசாலையின் ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுப்பதை வடக்கின் ஆளுநரும் இறுக்கமாக உறுதிப்படுத்த வேண்டும். போர் தின்ற பூமி குற்றவாளிகளின் கூடாரமாகிவிடுவதற்கு அனுமதித்துவிடக்கூடாது.



# மன்னிப்போம் மறந்துவிடோம்

சாவகச்சேரியூரான்

மன்னிப்பது சத்வம். மறப்பது பாவம். எதிரி ஒருவனை மன்னித்து அவனைத் தண்டிக்காது திருந்தி வாழச் செய்வதே சிறந்த குணமாகும்.
எவனாவது ஒருவன் எமக்கு வேண்டுமென்றே செய்த குற்றங்களை மறந்து அவனைத் தனது மனம்போனபடி நடக்க விட்டு விட்டால் அவன் எம்மையும் அழித்து எமது இனசனங்களுக்கும் தொல்லை கொடுப்பான். இதை நான் இக்கால கட்டத்தில் வெளிப்படுத்துவதற்குத் தகுந்த காரணம் உண்டு. எமது உயிருக்கு உயிராய் இருப்பது தாய்மொழி. உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் தமிழ்மொழிபேசும் மக்கள் இருக்கிறார்கள். இந்தியத் துணை க்கண்டத்தின் தெற்கே தமிழகத்திலே பத்துக்கோடி தமிழர்கள் வாழும் மாநிலம் அமைந்துள்ளது. அங்கு தமிழ் ஆட்சிமொழியாக உள்ளது.
"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் பாடிவைத்தார். இலக்கண, இலக்கிய ரீதியாக ஆராய்ச்சி செய்தவர்கள் தமிழ்மொழியை வியந்து போற்றுகிறார்கள். தமிழகத்துக்கு அருகே இலங்கைத் தீவிலே ஐம்பது லட்சம் பேர் வரை தமிழ்மொழிபேசும் மக்கள் உள்ளனர்.

### இலங்கை ஒரு சிங்களத் தீவா?

இலங்கையைச் சிங்களத்தீவு என யாரும் அழைக்கலாம். அதுபற்றி நாம் கவலைப்பட முடியாது. ஏனெனில் சிங்கள மொழி பேசும் மக்கள் இலங்கைத் தீவில் மட்டுமே வாழ்கின்றனர். ஆதலால் இலங்கையை சிங்களத் தீவு என்று சிலர் குறிப்பிடு கின்றனர். இங்குள்ள தமிழ் மக்களும் தமது உரிமையை விட்டுக்கொடுக்காமல் தொடர்ந்து போராடுகின்றனர். குரல் கொடுக்கின்றனர். இவர்கள் இலங்கையின் அரசமைப்பை ஏற்றுக்கொண்டு தம்மை அதற்கு இசைவாக மாற்றிக்கொண்டு தமது மத கலை கலாசார கொள்கைகளை விட்டுக்கொடா மல் வாழ்ந்து வருகின்றனர். துரதிஷ்டவசமாக சிங்கள தமிழ் முஸ்லிம் பேதங்கள் தலைதூக்கி, கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு முன்வரையில் போரொன்று இங்கு இடம்பெற்றது. வடக்கு- கிழக்கு தமிழ்மக்கள் உலகமெங்கும் சிதறியோடிச்சென்று நிம்மதியற்ற வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும் தற்போது அமைதி ஓரளவு திரும்பியுள்ளது. மக்கள் பலரும் ஓரளவு சுபீட்சமாக வாழ்வுக்கு உட்பட்டு வருகின்றனர்.

### மன்னிக்கத் தயாரா?

இந்தநிலை தொடரவேண்டுமானால் தமிழ் மக்கள் தமக்கு நிரந்தரமாகவே தீங்குசெய்த மக்களை மன்னிக்க வேண்டும். தலைவர்களின் பிதற்றல்களைக் கேட்டுக்கொண்டு சிந்திக்காமல் இருந்துவிடாது, அவர்களைத் தட்டிக்கேட்க வேண்டும். உரிமைப் போராட்டங்கள் எங்கு போய் முடிந்தன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மன்னிக்க வேண்டுமே தவிர, காலம் காலமாக சிங்களத் தலைமைகள் என்னென்ன செய்தன என்பதை அவர்கள் துளியும் மறந்துவிடக்கூடாது. இன்று எமக்கு மதிப்புத் தருபவர்கள் அன்று என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.
இனியும் நாம் சிங்களத் தலைமைகளிடம் ஏமாந்து விட்டால், பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்றும் பழமொழிக்கமைய ஒவ்வொருவரும் துன்பப்பட வேண்டியேற்படும். 1975ஆம் ஆண்டு இருந்த பன்னாட்டு நிலை வேறு. தற்போது இருக்கும் நிலை வேறு. இதனை மகுட வாசகமாகக்கொண்டு அரசியல் பாடத்தை அனைவரும் படிப்பதன் மூலமே உண்மையான தீர்வு எட்டும்.



இலங்கையைச் சிங்களத்தீவு என யாரும் அழைக்கலாம். அதுபற்றி நாம் கவலைப்பட முடியாது. ஏனெனில் சிங்களமொழி பேசும் மக்கள் இலங்கைத் தீவில் மட்டுமே வாழ்கின்றனர். ஆதலால் இலங்கையை சிங்களத் தீவு என்று சிலர் குறிப்பிடுகின்ற னர். எனினும் இங்குள்ள தமிழ் மக்களும் தமது உரிமையை விட்டுக்கொடுக்காமல் தொடர்ந்து போராடுகின்றனர். குரல் கொடுக்கின்றனர். இவர்கள் இலங்கையின் அரசமைப்பை ஏற்றுக்கொண்டு தம்மை அதற்கு இசைவாக மாற்றிக்கொண்டு தமது மத கலை கலாசார கொள்கைகளை விட்டுக்கொடாமல் வாழ்ந்து வருகின்றனர்.



# தமிழருக்கு அந்நியமாகும் தென்னிலங்கை அரசியல்

இந்துமதி

தென்னிலங்கை அரசியலுடன் தமிழர்கள் அந்நியப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர். அவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற தகுதி படிப்படியாக இல்லாமல் செய்யப்படுவதால் இந்த நிலை தோன்றியுள்ளது.
பெரும்பான்மையின அரசியல்வாதிகள் தமது இனமக்களின் ஆதரவு தமக்குக் கிடைத்தாலே போதும் என்ற மனநிலையில் உள்ளதால் ஏனைய இனமக்களை அவ்வளவாக கருத்தில் கொள்ளவில்லை. அந்த மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளிலும் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை. இதற்கு மாறாக மக்களுக்குத் தீர்வு கிடைக்கும் முயற்சிகளுக்கு இடையூறு செய்வதிலேயே கண்ணும் கருத்துமாகவுள்ளனர். தற்போதுகூட புதிய அரசமைப்பின் உருவாக்கத்துக்கு தெற்கிலிருந்து பலத்த எதிர்ப்புக்கிளம்பியுள்ளது. இதை எதிர்ப்பதில் அரசியல்வாதிகளே முன்னிற்கின்ற னர். தமது அரசியல் நலன்சார்ந்தே இவர்கள் செயற்படுவதைக் காண முடிகின்றது.

### அரச தலைவர் தொடர்பான அதிக கருத்துப் பகிர்வுகள்

தற்போது அரச தலைவர் தேர்தல் தொடர்பான தகவல்கள் முக்கிய இடத்தைப் பிடித்து வருகின்றன. கோத்தபாயவை வேட்பாளராக நிறுத்துவதற்கு மகிந்த ராஜபக்ச சம்மதம் தெரிவித்து விட்டார் என்றும் கோத்தபாயவும் அதற்கு விருப்பம் தெரிவித்து விட்டார் என்றும் தெரிய வருகின்றது. அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய போட்டியிடுவது ஓரளவு உறுதியாகிவிட்டது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி யின் தரப்பிலிருந்து எதுவித அறிவித்தலையும் காணமுடியவில்லை.
இதேவேளை சந்திரிகா அம்மையார் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளார் என்றும் இதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மகிந்தவின் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் சந்திரிகாவுடன் இணையவுள்ளார்கள் என்றும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதையறிந்த மகிந்த அதிர்ச்சியடைந்துள்ளார் என்றும் தெரிய வருகின்றது. மைத்திரிபால சிறிசேனவும் அதிர்ச்சியடைந்திருப்பாரென்பதில் ஐயமில்லை. அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அந்தக் கட்சியிலிருந்து சந்திரிகாவை ஓரம் கட்டுவதற்கான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதுவே அவருக்குப் பாதகமாக அமைந்துவிட்டது. சந்திரிகாவின் தந்தையாரே சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கியவர் என்ற வகையில் மைத்திரியைவிட சந்திரிகாவுக்கு அந்தக் கட்சியின்மீது அதிக உரிமை உள்ளது. ஏராளமான ஆதரவாளர்களையும் அவர் கொண்டுள்ளார். இதைவிட தனிப்பட்ட செல்வாக்கையும் அவர் கொண்டுள்ளார். முன்னாள் அரச தலைவர் என்ற வகையில் மதிப்பானதொரு நிலையில் வைத்து மக்களால் அவர் கணிக்கப்படுகிறார். இந்த நிலையில் அரசியலில் காத்திரமான பங்களிப்பொன்றை அவரால் வழங்க முடியும்.

### தமிழர்கள் மீது கொதி நிலையில் உள்ள மகிந்த

கடந்த அரச தலைவர் தேர்தலில் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு தமிழர்கள் மகிந்தவுக்கு எதிராக வாக்களித்து மைத்திரியை வெற்றிபெறச் செய்தனர். மகிந்த தமிழர்கள் மீது தீராத கொதிப்புக் கொள்வதற்கு ஆரம்பத்தில் இதுவே காரணமாக அமைந்துவிட்டது. பின்னாள் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து அரச தலைவர் நீக்கியபோது அதற்கு எதிராகக் கூட்டமைப்பு செயற்பட்டு ரணில் அந்தப் பதவியில் நீடிப்பதற்கு உதவி புரிந்தது. பதவி பறிக்கப்பட்ட மகிந்த கூட்டமைப்பின் மீதும் அதைச் சார்ந்துள்ள தமிழர்கள் மீதும் கடுமையான கடுப்பில் உள்ளார். சம்பந்தன் மேற்



கொண்ட இரண்டு வெவ்வேறு விதமான தீர்மானங்களால் பாதிக்கப்படுவது தமிழர்கள் என்பதுதான் உண்மையாகும். சம்பந்தனின் தீர்மானங்கள் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பயன்களையும் அளிக்கவில்லை.
இந்த நிலையில் தென்னிலங்கை அரசியலில் தமிழர்கள் அக்கறைகாட்ட வேண்டிய தேவையே இல்லையென்றுதான் கூறவேண்டும். தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமது அரசியல் தேவைகளுக்காகத் தமிழர்களை நாடுவதும் தமது தேவை முடிந்தவுடன் அவர்களைக் கைவிடுவதும் வழக்கமாகிவிட்டது. சந்திரிகா அம்மையார்கூட இதற்கு விதிவிலக்கானவரல்ல.

### அரசமைப்புக்கு எதிராக இனவாதக் கருத்துக்கள்

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த உறுதிமொழியை சம்பந்தன் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறார். ஆனால் தென்னிலங்கையில் அரசமைப்புக்கு எதிரான சக்திகள் ஒன்றுதிரண்டு செயற்படுவதைக் காணமுடிகின்றது. இவற்றையெல்லாம் ரணில் தலைமையிலான அரசு சமாளிக்குமா? என்பது மிகப்பெரிய கேள்வியாக உருவெடுத்துவிட்டது. இனவெறிகளுக்கும் காவியுடை தரித்தவர்களுக்கும் ரணில் அஞ்சுவாரானால் புதிய அரசமைப்பு பெயரளவுடனேயே வீசப்ப டக்கூடியதொரு நிலைதான் உருவாகும். ஏமாந்து நிற்கப்போவது தமிழர்கள் என்பதைக் கூறத்தேவையில்லை.
தமிழர்களுக்குப் புதிய தலைமை என்ற மகுடத்தின் கீழ் விக்னேஸ்வரன் தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருக்கிறார். வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக ஐந்து வருடங்கள் பதவி வகித்த அவரால் எதையுமே சாதிக்க முடியவில்லை. மாகாண சபையில் இடம்பெற்ற குழப்பங்களுக்கு எல்லாம் அவரே மூலகாரணமாக இருந்திருக்கிறார். தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதற்குப் பதிலாக பிளவு படுத்துவதிலேயே காலத்தைக் கழித்திருக்கிறார். தற்போது புதிய கட்சியொன்றை ஆரம்பித்து தமிழர்களைக் குழப்பி விடுவதில் முனைப்புக் காட்டுகின்றார். இவர் தம்மைப் பதவியில் அமர்த்திய சம்பந்தனுக்குப் பெரும் துரோகத்தையும் புரிந்துள்ளார். அதுமட்டுமல்லாது வயோதிபத்தின் எல்லையையும் தொட்டு நிற்கின்றார். இத்தகைய ஒருவர் தமிழர்களுக்குத் தலைமை தாங்குவதை எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. எது என்னவாக இருந்தபோதிலும் இவரது தலைமையை ஏற்றுக்கொள்வதும் நிராகரித்து விடுவதும் மக்களின் உரிமையாகும்.
மக்கள் தமது அரசியல் உரிமையைப் பெறுவதற்கு புதிய மார்க்கங்களைத் தேடுவதைத் தவிர வேறு வழியே தென்படவில்லை.

ஆசிரியருக்கான கடிதம்

# பயந்து வாழின் பரந்து கெடுக


பெண்களின்பால் இழைக்கப்படும் வன்கொடுமை தற்போது நாட்டில் அதிகரித்திருப்பது பெருங்கவலையை ஏற்படுத்தியுள்ளது. வலிகாமம் வடக்கில் அண்மையில் நடைபெற்ற சம்பவம் ஒவ்வொரு குடும்பத்தையும் அதிர வைத்துள்ளது. நிம்மதியை ஆக்கிரமித்துள்ளது. ஒவ்வொரு குடும்பமும் வீதியிலிறங்கிப் போராடவேண்டிய தேவையை அடையாளப்படுத்தியுள்ளது.
சட்டமும் சமூகமும் ஒரு சிலரைக் கைது செய்தபோதும் போதை வெறியும், காம வெறியும் எல்லாவற்றையும் புண்படச் செய்துள்ளன. போதையோடு சேர்ந்த காமம் வடபகுதியில் கோலோச்சுகின்றதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.
சமூக மேம்பாடுகளிலும், சமூக அந்தஸ்திலும், கல்வி கேள்விகளிலும், ஆன்மிக விழுமியங்களிலும் தோற்கடிக்கப்பட்டவர்களாலேயேவன்மங்கள்பிரயோகிக்கப்படுகின்றன.
நோகாமல் கொள்ளாமல் பணத்தைக் கொள்ளையிடவும் அள்ளிக்கொள்ளவும் சூறையாடவும் ஒரு குழுவினர் ஒன்று சேர்ந்துள்ளனர்.
இன்னுமொரு சாரார் பயமுறுத்திக் கொலை செய்து நகைகளையும் சொத்துக்களையும் அபகரித்து அற்ப வாழ்வை அகப்பட்டு முடித்துக்கொள்கிறார்கள்.
மேலுமொரு சாராரோ சினிமாப் பாணியில் அடாவடியாக உள்நுழைந்து பயமுறுத்திக் கொள்ளையுமடித்துப் பலாத்காரம் புரிந்து அடித்து நொருக்கிவிட்டுத் தப்பி விடுகிறார்கள். இதன் பின்னணியில் இறக்குமதி செய்யப்படும் போதையாளர்களேயுள்ளனர்.
வெளிவேஷத்தை வைத்து நாம் ஒருவரை எடைபோடுவது என்பது இயலாத காரியமாயிற்று. சகல வேஷங்களிலும் களவுகளும் பலாத்காரங்களும் நடைபெற்றுள்ளதை ஊடகங்கள் பறைசாற்றுகின்றன.
இந்த நிலையில், வள்ளுவம் இப்படி முழங்குகிறது.
"இரந்தும் உயிர் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்" அதாவது, ஒரு சமூகமோ அல்லது மனிதனோ தாம் நின்மதியான வாழ்வதற்காக இரந்து கேட்டு வாழ்கின்ற கையேந்து நிலை ஏற்படுமாயின் அவர்களைப் படைத்த இறைவனும் அவ்வாறு உழன்று துன்புறுவானாக என்று கோபமாக அனலெழுப்புகிறார். அதன் பிரகாரம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பொறுப்பானவர்கள் இந்த வன்மங்கள்போல தாமும் துன்பமுறாதபடி சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தித் தாம் பொறுப்பாளிகளாக வன்மங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். பயந்து வாழும் ஒரு சமூகத்தை இறைவனும் பலவீனமாகக் கருதினால் எமக்கு எதற்கு ஆலயம்?

*கே.எஸ்.சிவஞானராஜா*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## இருபத்தேழாவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இ.ச.பேரம்பலம் E.S.P

(வாரிவளவு - காரைநகர்)

திதி : அமாவாசை (01.02.2019)

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழிகாட்டிய அன்புத் தெய்வமே !

வணிகத்துறையில் உயர்ந்து நிற்க
ஆன்மீகப் பணி, கல்விப்பணி சிறக்க
தெய்வமாய் நின்று வழிகாட்டி வரும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எம் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்

உங்கள் ஆத்மா சாந்திபெற
வாரிவளவு கற்பக விநாயகர்பாதம்
தொழுது நிற்கின்றோம்.



383, மணிஓசை,
கோவில் வீதி, நல்லூர்.

லயன்
E.S.P நாகரத்தினம் (PMJF)
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **பஞ்சலிங்கம் சந்திரமலர் (ராணி)**

அன்னை மடியில்
12.07.1955

ஆண்டவன் அடியில்
12.02.2018

உயிருக்கு உயிராக இருந்து
எமைக் காத்த அன்புத் தாயே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள்
துயரம் அம்மா!

என்றும் உங்கள் நினைவில்

காளியானை,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

பிள்ளைகள்: கோபிகா (கோபி)
உமாசங்கர் (சங்கர்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### சின்னையா நல்லம்மா

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிகு நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறாது எம் துயரம்

இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தோற்றம்
01.01.1941

மறைவு
12.02.2018

தேவாலய வீதி, மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### திருமதி பரிபூரணம் இரத்தினசிங்கம் (பேபி)

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டி, வைமன் வீதி நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிபூரணம் இரத்தினசிங்கம் நேற்று (31.01.2019) வியாழக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திசைநாயகம் - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இளைய பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான V.T.நடராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும், தேசிங்கராஜன் (யாழ். கச்சேரி), ஜெயசிங்கராஜன் (Singh), சித்திரலேகா ஆகியோரின்பாசமிகுதாயும், பத்மநிதி, தயாளினிமற்றும்காலஞ்சென்ற பத்மசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியும், சாய்கித்தியன், ஷாஜினி, அபிஷாஜினி, பார்மிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2019) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்குதகனக்கிரியைக்காககோம்பயன்மணல்இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



தோற்றம்
18.12.1932

மறைவு
31.01.2019

"கோபாலன் குடிசை"
இல.03, வைமன் வீதி,
நல்லூர், யாழப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

**021 222 3554**

(in 7349) (13.17)




**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விஷயம் குறித்து அதிகம்பேசவேண்டாம். எதிர்பார்த்தநல்லதகவல்கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

**இடபம்:**சாதனை நிகழ்த்த உரிய வாய்ப்பு தேடி வரும். கூடுதல் தைரியத்துடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி நிறைவேறும்.

**மிதுனம்:** மதிப்பவரிடம் சொந்த விஷயம் பேசுவீர்கள். இஷ்ட தெய்வ அருளால், வாழ்வியல் நடைமுறை சீராகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பலன் ஏற்படும்.

**கடகம்:** அதிக வேலைப்பளு காரணமாக மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். நண்பரின் ஆலோசனை நம்பிக்கைத் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிநிலை சீராக இருக்கும்.

**சிங்கம்:** வேண்டாத நபரை முக்கிய இடத்தில் சந்திப்பீர்கள். மனதில் பழைய நினைவுகள் தொந்தரவு தரும். தொழில், வியாபாரம் செழிக்க அதிகம் பணிபுரிவது அவசியம்.

**கன்னி:** எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். உறவினர், நண்பர் மனதார பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**துலாம்:** சொந்த நலனில் அதிக அக்கறை கொள்வீர்கள். வாக்குறுதி நிறைவேற தாமதமாகும். தொழில், வியாபார நடைமுறை சிறக்க புதிய யுக்தி பின்பற்ற வேண்டும்.


**விருச்சிகம்:** நண்பர் உறவினர்களிடம் புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில்,வளர்ச்சியும் அபரிமிதமான அளவில் பணவரவும் கிடைக்கும்.

**தனுசு:** சிலர் அவமதித்து பேச முயற்சி செய்வர். பொது விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு அவசியம்.

**மகரம்:** நற்செயலால் பலரையும் வசீகரிப்பீர்கள். சமூகத்தில் கிடைக்கிற அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும்.

**கும்பம்:**உற்சாகம் மனதுடன் கூடுதலாக பணி செய்து திருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபார நடைமுறையில் இருந்த சிரமம் குறையும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** எவருடனும் விவாதம் பேசக் கூடாது. தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.




# வெளியாகிறது தேசிய விருது பெற்ற 'டூ லெட்' திரைப்படம்

பிரபல ஒளிப்பதிவாளர் செழியன் இயக்கத்தில் உருவாகி தேசிய விருது வென்ற டுலெட் திரைப்படம் வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வெளியாகும் என்று அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் வீடு தேடி அலையும் நடுத்தர குடும்பத்தை பற்றிய கதைக்களத்துடன் உருவான திரைப்படம் டுலெட். இதனை கல்லூரி, பரதேசி, தாரதப்பட்டை, ஜோக்கர் உள்ளிட்ட படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த செழியன் இயக்கி உள்ளார்.

இந்த படத்தில் செழியனின் உதவியாளர் சந்தோஷ் நாயகனாக நடிக்க, ஷீலா நாயகியாக நடித்துள்ளார். இவர்களது மகனாக தருண் என்ற சிறுவன் நடித்துள்ளார். இந்த படம் கடந்த ஆண்டுக்கான சிறந்த தமிழ்ப் படம் என்ற தேசிய விருது பெற்றது.


மேலும் பல்வேறு திரைப்பட விழாக்களில் கலந்துகொண்டு 32 விருதுகளை பெற்றுள்ளது.

மிகுந்த எதிர்பார்ப்புக்குள்ளான இந்த படத்தின் வெளியீட்டுத் திகதி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த படம் வரும் பெப்ரவரி 21ஆம் திகதி முதல் வெளியாகவுள்ளது.














*அமெரிக்க விஞ்ஞானி கூட இதை எதிர்பார்திருக்க மாட்டான்...*






mohanram.ko@mohanramko

'துன்பம் வரும் வேளையில் சிரிங்க' னு சொன்னது..... அடுத்தவங்க துன்பப்படும் போது இல்லை..

ச ப் பா ணி @manipmp

மிகவும் பழையது கழிதலும் பழையது புகுதலும்
**#குளிர்சாதனப்பெட்டி**

நாம் கூறுவது சரியாகக்கூட இருக்கலாம் அதற்காக பிறர் கூறுவது தவறு என்று கூறிடக்கூடாது..... அவர்களின் பக்கம் உள்ள கருத்தையும் சிந்தித்தல் வேண்டும்.....

## தேவை

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் உள்ள காட்வெயர் கடைக்கு பெண் காசாளர் தேவை. கணினி அறிவும் இருத்தல் வேண்டும்.

**021 433 4464 / 075 333 4464**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 85 ஆண்டு, விசாகம் நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம் - **077 236 7508**

## உதவியாளர் தேவை

திருநெல்வேலி சிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

**T.P - 021 222 0976**

## வேலையாள்கள் தேவை

மணிக்கூட்டு வீதி சிற்றி பேக் கவுஸ்க்கு பேக்கரி வேலைக்கு வேலையாள்கள் தேவை

**021 222 1326, 021 222 1327**

## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற நோய்களை முற்றாக குணப்படுத்த

பிரபல ஹோமியோபதி நிபுணரின் சேவை மக்களுக்காக

**யாழ்ப்பாணத்தில்** - 02.02.2019 (நாளை)

**பரந்தனில்** - 09.02.2019

தொடர்பு - 077 444 1082

## வேலையாள் தேவை

Sports Shop ஒன்றிற்கு வேலைக்கு ஆள் தேவை

**077 360 4830**

## போட்டிப் பரீட்சை இறுதிக்கருத்தரங்குகள்

**அதிபர் சேவை தரம் -3**

Feb 10 பரீட்சைக்கு

சனி(2/2) 9.00 → 4.00

விடய ஆய்வு ப.ஆறுமுகம்

ஞாயிறு(3/2) 9.00 → 4.00)

IQ and GK தவசேகர், பாலச்சந்திரமூர்த்தி

திங்கள்(4/2) 9.00 → 4.00

கிரகித்தல் - மகாலிங்கசிவம், விடய ஆய்வு - கணேசன்

சனி (9/2)

மூன்று வினாத்தாள்களுக்குமான எதிர்பார்க்கைகள்

சுபாகரன், தவசேகர், தமிழிந்திரன்

**சுகாதார முகாமைத்துவ உதவியாளர்**

சனி, ஞாயிறு 9.00 → 3.00

**076 688 3394**

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

# நாவாந்துறையில் 42 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் விற்பனைக்காக வைத்திருந்த 42 கிலோ கஞ்சாவை கொழும்பில் இருந்து வருகை தந்த சிறப்புப் பொலிஸார் மீட்டுள்ளதுடன், இருவரை கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் வீட்டினை சுற்றிவளைத்தபோது இவர்கள் இவரும் கைதுசெய்யப்பட்டனர்.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் மற்றும் சந்தேக நபர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-106)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. வணிகத்தில் மூன்றாம் தேர்வு - 2016 (புதிய பாடத்திட்டம்) **இறுதிச் சந்தர்ப்பம்**
2. வணிகத்தில் நான்காம் தேர்வு - 2016 (புதிய பாடத்திட்டம்)
3. வணிகமாணி பகுதி - II - 2016 (பழைய பாடத்திட்டம்) **இறுதிச் சந்தர்ப்பம்**
4. வணிகமாணி பகுதி - III - 2016 (பழைய பாடத்திட்டம்)

வணிகமாணி புதிய மற்றும் பழைய பாடத்திட்டம் அடிப்படையிலான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. மேற்படி கற்கைநெறிக்கான மீள் பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பங்குனி (March) மாதமளவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்த வேண்டிய மீள்பரீட்சைக் கட்டணம் ரூபா 500/= மற்றும் விண்ணப்பப்படிவக்கட்டணம் ரூபா 300/= இனை யாழ்ப்பாண பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் பற்றுச் சீட்டினை WWW.codl.jfn.ac.lk என்ற இணைத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளமுடியும். மற்றும் தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினை அனுப்ப விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களினை **பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக் கல்விநிலையம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்பி தங்களுடைய பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி **18.02.2019** (திங்கட்கிழமை) ஆகும். இப் பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் இது தொடர்பான விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளப்பரப்படுத்தப்படும்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் **021 222 3612** என்ற தொலைபேசி எண்ணினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்**
**31.01.2019**

(C 9271/15/18)

## வேலைவாய்ப்பு

## Medical Sales Representative



எமது ஸ்தாபனத்தின் சத்திர சிகிச்சை உபகரணங்கள், உடல் ஆரோக்கிய உபகரணங்கள், பாடசாலை மற்றும் வைத்திய ஆய்வுகூட உபகரணங்களும், இரசாயனங்களும் சந்தைப்படுத்துவதற்கு அடிப்படை பௌதீக அறிவுடன் ஆளுமை, தன்னம்பிக்கை, தொழில் அர்ப்பணிப்பு ஆகிய தகைமைகளுடன் விண்ணப்பதாரிகளைத் தேடுகின்றோம்.

உங்களுக்கு இத்தகைமைகள் யாவும் இருப்பின் நீங்கள் நாங்கள் தேடுபவராக இருக்கலாம்.

**மாத வருமானம்**

ரூபா 25000.00 உம் பிற கொடுப்பனவுகளும்.

இன்றிலிருந்து 10 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

**Vanikaa Surgicals**
203. Hospital Road, Jaffna.
Off..Mob: 077 442 2367, 077 510 6910
Tel.No: 021 222 0077

## கேள்வி அறிவித்தல் சபைநிதி - 2019
### புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வடமாகாணம்.

1. சபைநிதி - 2019 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்டங்களுக்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேச சபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C 7/C6 தரத்தில் கட்டடம் அமைப்பிற்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் கேள்வி ஆவண ம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Sched ule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேச சபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி 021 229 1023 E - mail - **pkipsmullai@gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை 14.02.2019 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேச சபை, பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 05.02.2019 ஆம் திகதியிலிருந்து 14.02.2019 ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2 000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 15.02.2019 ஆம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு - 03.05.2019) நாள்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./Dev/W-01/2019 | ஒட்டுசுட்டான் சந்தைக் கட்டடத்தின் மேல்தளத்தில் மாநாட்டு மண்டபம் அமைத்தல் | 9.860 | 90 நாட்கள் | C7/C6 | 99,000.00 | 31.05.2019 |
| NP/14/44(04)/Coun./Dev/W-02/2019 | விசுவமடு சந்தையில் மீன்சந்தைக் கட்டடம் அமைத்தல் | 5.002 | 90 நாட்கள் | C7/C6 | 51,000.00 | 31.05.2019 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 2019.02.08 அன்று மாலை 2.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுதலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேச சபை பெறுகைக்குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேச சபை,**
**புதுக்குடியிருப்பு. 2019.01.31**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி **பவளமலர் பிரபாஸ்கரன்**



(Tamil (Trd), BA, Dip in Edu)

அவர்கள் கடந்த 17.12.2018 அன்று யா/ இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற மாகாண மட்ட விருது வழங்கும் விழாவில் மாகாண மட்டத்திலான நல்லாசிரியருக்கான

**"குரு பிரதீபா விருது"**

பெற்று பெருமை சேர்த்தமையை பாராட்டுவதுடன் மேலும் பல விருதுகள், பதவியுயர்வுகள் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**சேவையாளர் சங்கம், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி


எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி ரவீந்திரன் நளினி
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி அன்ரனற் ரோஸ்மலர் வேதநாயகம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரிக்குடும்பம்.**

## Graphic Designer (ஆண்/பெண்)



லண்டனில் உள்ள Media IT கம்பனிக்கு Graphic Designer தேவை. அவர் பின்வரும் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும்.

- Expertise in Adobe Photoshop Lightroom
- சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
- முழுநேர வேலை
- யாழ்ப்பாணம், உரும்பிராய்.

தரப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்தவர்கள் எமது மின் அஞ்சல் முகவரிக்கு **info@it-biz.co.uk** சுயவிவர கோவையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## யாழ். வண்ணை கன்னாதிட்டி
## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் சகஸ்ர சங்க சங்காபிஷேகம் (1008)

விளம்பி வருஷம் தைத் திங்கள் 7ஆம் நாள் 21.01.2019 இல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேக பூர்த்தி தினமான 01.02.2019 வெள்ளிக்கிழமை (1008) சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கிடைக்க பெற்றுள்ளது. எனவே அடியார்கள் அபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர், நெய், பூ, இளநீர் போன்ற பொருள்களை ஆலயத்தில் முன்னதாகவே சேர்த்து அகிலாண்ட நாயகியாகிய காளிகா பரமேஸ்வரியின் பெருங்கருணையை பெற்று இன்புறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தேவஸ்தான**
**ஆதீன கர்த்தாக்கள்**

## தேவை

**விடுதி பராமரிப்பதற்கு**
சாதாரணமாக ஆங்கிலம் பேசக்கூடிய ஆண்கள் தேவை.
(ex.22980) (13)
**077 366 1681**

## வேலையாள்கள் தேவை

194, யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

**மேலதிக தொடர்புக்கு - 076 640 3388**

## காணி விற்பனைக்கு உண்டு

சுன்னாகம் புத்தூர் வீதியில் அச்செழு வீட்டுடன் கூடிய நில.பர. 10 1/2 விஸ்தீரண ஆதனம் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு T.P.No:0763102935**

## யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கௌரவிப்பு நிகழ்வும் - 2019

காலம் : 03.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
இடம் : சங்கத் தலைமைக் காரியாலயம்
தலைமை : திரு.செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்

க. செல்வச்சந்திரன்
செயலாளர்
(In 9268) (13)

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

## LOLC FINANCE PLC

LOLC FINANCE

# Gigantic Motor Vehicle Auction Sale

**On Wednesday 06th February 2019**

To Be Held At
Station Road, Vairavapuliyankulam, Vavuniya.

**FOUR WHEEL TRACTOR**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| FARMTRAC FT60N | 3147CC | 2011 | NP | RD | XXXX |
| JOHN DEER 5045D | 2900CC | 2013 | NC | RD | XXXX |
| MAHINDRA 575DI | 2523CC | 2010 | NP | RC | XXXX |
| MAHINDRA 595DI | 2523CC | 2016 | NC | RE | XXXX |
| SONALIKA DI 50RX | 2893CC | 2016 | NC | RE | XXXX |
| TAFE 45 DI | 2500CC | 2017 | NP | RF | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2010 | NP | RC | XXXX |
| YANMAR F20D | 1394CC | 2008 | NC | RE | XXXX |

**MOTOR BIKE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ CT | 100CC | 2017 | NC | BGH | XXXX |
| BAJAJ CT | 100CC | 2017 | NP | BFM | XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2014 | NP | BBB | XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2014 | NP | BAW | XXXX |
| BAJAJ PLATINA | 100CC | 2016 | NC | BEG | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2015 | NC | BCY | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2018 | NP | BGN | XXXX |
| BAJAJ PULSAR | 149CC | 2018 | NP | BGF | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | NP | BAG | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | NP | BAF | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NP | BEC | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | NP | BFD | XXXX |
| BAJAJ PULSAR | 160CC | 2017 | NE | BFA | XXXX |
| BAJAJ PULSAR | 180CC | 2017 | NP | BFC | XXXX |
| BAJAJ PULSAR | 200CC | 2017 | NP | BFX | XXXX |
| DEMAK DZR | 120CC | 2016 | NP | BFP | XXXX |
| DEMAK DZR | 120CC | 2017 | NP | BFN | XXXX |
| DEMAK DZR | 120CC | 2017 | NC | BFH | XXXX |
| DEMAK WARRIOR | 150CC | 2017 | NP | BFY | XXXX |
| HONDA ACTIVA | 109CC | 2016 | NP | BDP | XXXX |
| HERO DASH LX | 110CC | 2015 | NP | BDK | XXXX |
| HERO DASH LX | 110CC | 2016 | NP | BDI | XXXX |
| HERO DASH VX | 110CC | 2016 | NP | BEN | XXXX |
| HERO DELUXE | 100CC | 2017 | NP | BFV | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2012 | NP | BAH | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2015 | NP | BDJ | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2016 | NP | BDT | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2016 | NP | BEY | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2017 | NP | BGB | XXXX |
| HERO HONDA KARIZMA | 225CC | 2015 | NP | BCL | XXXX |
| HERO HUNK | 149CC | 2015 | NP | BCS | XXXX |
| HERO HUNK | 150CC | 2013 | NP | BAG | XXXX |
| HERO HUNK | 150CC | 2014 | NP | BBE | XXXX |
| HERO HUNK | 150CC | 2015 | NP | BCI | XXXX |
| HERO HUNK | 150CC | 2016 | NP | BEO | XXXX |
| HERO HUNK | 150CC | 2018 | NP | BGH | XXXX |
| HERO PASSION PRO | 98CC | 2014 | NP | BBV | XXXX |
| HERO PASSION PRO | 98CC | 2015 | NP | BDO | XXXX |

**MOTOR BIKE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| HERO PLEASURE | 197CC | 2016 | NP | BEP | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2014 | NC | BBW | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP | BCS | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2016 | NP | BER | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2017 | NC | BFF | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2017 | NP | BFV | XXXX |
| HERO SPLENDOR | 100CC | 2014 | NP | BBT | XXXX |
| HERO SPLENDOR | 98CC | 2016 | NP | BEU | XXXX |
| HONDA ACTIVA | 109CC | 2013 | NP | BAP | XXXX |
| HONDA ACTIVA | 110CC | 2016 | NP | BEV | XXXX |
| HONDA DIO | 109CC | 2013 | NP | BAU | XXXX |
| HONDA DIO | 110CC | 2016 | NC | BER | XXXX |
| SUZUKI GSX150 | 150CC | 2016 | NP | BEW | XXXX |
| SUZUKI | 125CC | 2015 | NP | BCK | XXXX |
| TVS APACHE | 200CC | 2017 | NC | BGC | XXXX |
| TVS APACHE | 200CC | 2017 | NP | BET | XXXX |
| TVS SCOOTY PEP | 90CC | 2017 | NP | BFL | XXXX |
| TVS WEGO | 110CC | 2016 | NP | BEO | XXXX |
| TVS WEGO | 110CC | 2016 | NP | BEQ | XXXX |
| TVS WEGO | 110CC | 2017 | NP | BGB | XXXX |
| TVS WEGO | 110CC | 2017 | NC | BGF | XXXX |
| TVS WEGO | 110CC | 2017 | NP | BFV | XXXX |
| TVS XL SUPER | 100CC | 2016 | NP | BFQ | XXXX |
| YAMAHA FAZER | 150CC | 2016 | NP | BEP | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2013 | NP | BAS | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2014 | NP | BBU | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2015 | NP | BDJ | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2017 | NP | BGF | XXXX |
| YAMAHA FZ-S | 150CC | 2017 | NP | BFJ | XXXX |
| YAMAHA FZ-S | 153CC | 2015 | NP | BEM | XXXX |
| YAMAHA FZ-S | 153CC | 2015 | NP | BCE | XXXX |

**THREE WHEELER**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2002 | NP | GY | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | NP | QA | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | NP | JZ | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | NC | QO | XXXX |
| BAJAJ | 173CC | 2008 | NP | QR | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | NC | QX | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP | YQ | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NP | AAA | XXXX |
| BAJAJ | 198CC | 2013 | NP | AAG | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | NP | AAV | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | NC | AAQ | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | NC | AAX | XXXX |
| BAJAJ | 200CC | 2010 | NP | YF | XXXX |
| PIAAGGIO | 395CC | 2010 | NC | QY | XXXX |

**TRUCK**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| MAHINDRA MAXXIMO | 909CC | 2011 | NP | PT | XXXX |
| TATA ACE | 702CC | 2010 | NP | PP | XXXX |
| TATA XENON | 2956CC | 2015 | NP | DAC | XXXX |

**VAN**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SUZUKI EVERY | 650CC | 1998 | NP | GY | XXXX |

**On View – 03rd, 04th & 05th February 2019**
**Between 9.00 a.m – 5.00 p.m**

**Conditions of Sale**

- ✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per person on the day of Auction.
- ✓Payment: Non – refundable initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% & Removal latest by 3:00 pm on Wednesday 13th February 2019 to be paid to LOLC Finance PLC No.27, 2nd Cross Street, Vavuniya.
- ✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
- ✓The decision of the Auctioneer will be final.

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
6A, Fairfield Gardens, Colombo 08.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## வேலையாள்கள் தேவை

U.S.Hotel நிறுவனத்திற்கு பின்வரும் பணி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✶ உணவு பரிமாறுபவர்கள் (Waiters)
  - முழுநேரவேலை (ஆண்)
  - பகுதிநேரவேலை (ஆண்)
  - வயதெல்லை 18-25
- ✶ மின் இணைப்பாளர் (ஆண்)

விண்ணப்பிக்க விரும்புவோர் இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை மேற்படி நிறுவனத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

**தொடர்பு - 077 008 3000**



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு

**பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்**
**தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது - 09.02.2019**


மேற்படி ஆலயத்தில் பின்வரும் பொருள்கள் எதிர்வரும் 09.02.2019 சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் நேரில் வருகை தந்து ஏலத்தில் பங்குபற்றிப் பெற்றுக் கொள்ளலாம். பெற்றுக் கொள்ளும் பொருள்களுக்கான பெறுமதியை அன்றைய தினமே நிருவாகப் பணிமனையில் செலுத்தி உரிய பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

01. பட்டுப் புடைவைகள்
02. சில்வர் குத்துவிளக்குகள் (பெரிதும், சிறிதும்)
03. ஹன்ரர் வாகனம் (திருத்தப்பட வேண்டியது)
04. இரும்பு, செம்பு, பித்தளை மற்றும் அலுமினியப் பொருள்கள்.
05. மின்சாதனப் பொருள்கள்
06. லாண்ட் மாஸ்டர்
07. மின்பிறப்பாக்கி
08. மற்றும் ஏனைய சில பொருள்கள்.

**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**
**நயினாதீவு.**

## மரண அறிவித்தல்

## கந்தர் ஆறுமுகம்



வரணி மாசேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் ஆறுமுகம்நேற்று (31.01.2019) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் ராசம்மாவின் அன்பு கணவரும் ராசையாவின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கப்பத்தைஇந்துமயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மைத்துனர் வீரசிங்கம்**

# மகோதய புண்ணிய காலம்

விளம்பி தைமீ 21ஆம் திகதி (4.02.2019) திங்கட்கிழமை அமாவாசை தினத்தில் திருவோண நட்சத்திரம் வியாதிபாத யோகமும் கூடிய அதிகாலை சூரியயோதயத்தை மகோதய புண்ணியகாலமாக வழங்கப்பட்டுவருகின்றது.

மகர ராசியில் சூரியபகவான் சஞ்சரிக்கும் மாதம் தைமாதம். திருவோண நட்சத்திரத்துக்கும் ராசி சனிபகவானின் ஆட்சி வீடான மகரம் ஆகும். அதுவும் திங்கட்கிழமைகளில் வரும்போது வியாதிபாத யோகமும் கூடினால் அன்றைய தினம் பஞ்சாங்க வாயிலாக 'மகோதய புண்ணிய காலம்' எனப்படுகிறது. மாதபக்ச, திதி வார, யோக கரணங்கள் பொருந்துவனவாக அமையும் நாளில் மகோதயம் வருகிறது.

இம்முறை வருவது 4 ஆண்டுகளுக்கொரு முறை வருகின்ற கிஞ்சித் மகோதயம் ஆகும். கிஞ்சித் என்பது சிறியது எனப் பொருள்படுகிறது.

கடைசியாக தைமாத அமாவாசையில் திங்கள் வாரத்தில் நிகழ்ந்துள்ளது. 8.2.2016 நாளில் தைமாத அமாவாசை மிகவும் புனிதம் வாய்ந்த நன்னாளாகும். அபிராமிப்பட்டர் தினமும் இன்றாகும். இந்த ஆண்டு 'அரச விடுமுறை தினமும் அமைகின்றது.


அனேகமான இந்து ஆலயங்களில் அன்றைய தினத்தில் சூரியோதயத்தில் தீர்த்தமாடுவது வழக்கமாகும். அமரத்துவமான முன்னோர்களை நினைத்து நீராடி பிதிர்க்காரியங்கள் செய்யலாம். இன்றைய புனிதமான புண்ணிய தினத்தில் பாவங்கள் அனைத்தும் தீர வேண்டி நீராடி இறைவழிபாடுகள் செய்து புனிதம் அடைவீர்கள். நலம் பெருகும் புண்ணியம் தேடி நலமோங்க வாழ்வோமாக.

**பிரம்ம சிறி ச.க.சுதர்சனக்குரு,**
**பிரதமகுரு சிறிவல்லிபுர ஆழ்வார்**
**சுவாமி கோவில் புலோலி.**

## மரண அறிவித்தல்கள்

### வைத்தியர் கந்தாதே ஒபிசரகே இராஜரட்ணம்
### க.ஓ.இராஜரட்ணம் RIMP

*(24ஆவது பரம்பரை வைத்தியர் - சுஜீவா வைத்தியசாலை, பாலிநகர், வவுனிக்குளம்)*



மகாகளத்தாவ அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுஜீவா வைத்தியசாலை பாலிநகர், வவுனிக்குளம் எனும் முகவரியையும் சுஜீவா வைத்தியசாலை (நாச்சிமார் கோவில் அருகில்) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தாதே ஒபிசரகே இராஜரட்ணம் நேற்று (31.01.2019) வியாழக்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாரம் பரிய வைத்தியர் கந்தாதே ஒபிசரகே தங்கமுத்து (அநுராதபுரம்) தம்பதிகளின் அன்பு மகனும் ரஞ்சனியின் அன்புச் சகோதரனும் பாரம்பரிய வைத்தியர் சுசிலாவின் அன்புக் கணவரும் Dr. சந்திரமாலா (சுஜீவா வைத்தியசாலை), காந்திமாலா, காலஞ்சென்ற பிரதீப்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. ஜெயலன் (சுஜீவா வைத்திய சாலை பிறப்பு இறப்பு மருத்துவ பதிவாளர்), விஜயசூரியா (பசும் பொன் நகையகம்) ஆகியோரின் மாமனாரும் யுகன்யா (ஆண்டு 7, வேம்படி மகளிர் கல்லூரி), தல்கிஜன் (ஆண்டு 03, சென். ஜோன்ஸ் கல்லூரி), சிந்துஜன் (A/L 2018 சென். ஜோன்ஸ் கல்லூரி), திருஷாந்த் (A/L 2021, சென். ஜோன்ஸ் கல்லூரி), தனுப்பிரியா (O/L, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஜீவரட்ணம் (வவுனியா), பவா, ரோகினி ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நாச்சிமார் கோவில் அருகில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் 01.02.2019 முற்பகல் 9.00 மணிக்கு இடம்பெற்றுபூதவுடல்பிற்பகல்2.00மணிக்குசுஜீவாவைத்தியசாலைபாலிநகர், வவுனிக்குளம் எனும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு வவுனிக்குளம், பாலிநகர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்,**
**Dr. ஜெ. ஜெயலன் 077 559 4147**
**Dr. சந்திரமாலா.ஜெ 077 343 7003,**
**இ. விஜயசூரியா 078 948 6923**

**சுஜீவா வைத்தியசாலை,**
**நாச்சிமார் கோவில் அருகில்,**
**காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

### திருமதி ஞானேஸ்வரி (தங்கா) இராஜேந்திரன்



யாழ். 331, நாவலர் வீதியை நிரந்தர வசிப்பிடமாகவும் பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி இராஜேந்திரன் நேற்று (31.01.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் (மணி - நாயன்மார்கட்டு) மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்புப் பெறாமகளும் காலஞ்சென்ற அளவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் அளவெட்டியைச் சேர்ந்த க.இராஜேந்திரனின் பாசமிகு மனைவியும் குமரேஷின் (பொறியியலாளர் SLT, கொழும்பு), பாசமிகு தாயாரும் சிந்துஜாவின் பாசமிகு மாமியாரும் கோபிசாந், கிரிசாந் (மாணவர்கள், பரியோவான் கல்லூரி, கல்கிசை) ஆகியோரின் பேர்த்தியும் சண்கீரன், விபூஷன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற ஐஸ்வரியா ஆகியோரின் பெரியதாயாரும் பாலசிங்கம் (வயரிங், அளவெட்டி), காலஞ்சென்ற ஶ்ரீராணி மற்றும் சாந்தினி (லண்டன்), ஶ்ரீதரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும் கமலாதேவி, காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் சண்முகநாதன், சசிகலா, காலஞ்சென்ற மயில்வாகனம், சுப்பிரமணியம் மற்றும் விஜயகுமாரு ஆகியோரின் அன்பு மைத்துனியும் கனகாம்பிகை, ருக்மணிதேவி, புவனேஸ்வரி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை 12.30 மணியளவில் யாழ்ப்பாணம் 331, நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 736 6457**

(CS 23684/15/18)




## மரண அறிவித்தல்கள்

### திருமதி காசியம்மா பரிபூரணம்



வற்றாப்பளை முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் நிரந்தரவதிவிடமாகவும் கொண்ட திருமதி காசியம்மா பரிபூரணம் (31.01.2019) வியாழக்கிழமை காமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - கனகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தர் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரிபூரணத்தின் பாசமிகு மனைவியும் இராச செல்வக்குமார், சற்குணசீலன், விமலா, திலகம், தேவிகா, ஜேசீலன், சத்தியசீலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசமலர், மேரிறெஜினா, அந்தோனிப்பிள்ளை, கிறிஸ்தியானந்தசிவம், வாஸ்கரன், குணபதி, கனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் வற்றாப்பளை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பேரப்பிள்ளை பிரதீபன் அன்சலா**
**ஆஸ்திரேலியா -0061478659152**

### கிருஸ்ணபிள்ளை சிவசேகரம்



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் வடக்கம்பரை தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சிவசேகரம் (31.01.2019)வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை-மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கமலாதேவியின்(நீலியம்பனை-மல்லாகம்) பாசமிகு கணவரும் சிவலோஜினி (சுகி) யின் பாசமிகு தந்தையாரும் சந்திரதேவர் (ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற ஜெயம் ஆகியேரின் அன்பு அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் வடக்கம்பரை தொல்புரத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 626 5036, 077 154 7434**

## மண்டைதீவு கடற்பரப்பில் நேற்று ஒருவர் கைதானார்!

*சட்டவிரோதமாக இந்தியாவுக்குச் செல்ல முற்பட்டாராம்*

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ்ப்பாணம் - மண்டைதீவுக் கடற்பரப்பில் அதே பகுதியைச் சேர்ந்த நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். சட்டவிரோதமாக இந்தியாவுக்குச் செல்ல முற்பட்டமைக்காகவே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: யாழ்ப்பாணம் மண்டைதீவு கடற்பரப்பில் வடக்கு கட்டளைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் இரவு வேளையில் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது படகொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவருக்கு வயது 49. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று மண்டைதீவு பொலிஸார் தெரிவித்தனர். (ம-71)

# பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள்

மருதங்கேணி,பெப்.1
வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டிகள்பாடசாலைமைதானத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அதிபர் வே.புவனேந்திரராசா தலைமையில் இடம்பெற்றன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் அ.ச.அரியகுமாரர், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி கோட்ட கல்வி அதிகாரி திரவியராசா,ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அமைப்பாளர் ஐ.ரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-160)





★ ★ ★

கொடிகாமம், பெப்.1
யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் கே.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய நிர்வாக அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிகல்விவலயதமிழ்ப்பாடசேவைக்காலஆசிரிய ஆலோசகர்வே.உதயகுமார்,மதிப்புறுவிருந்தினராக வலய ஆரம்பக்கல்வி ஓய்வு நிலை சேவைக்கால ஆசிரியஆலோசகர்திருமதிஇ.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.
போதை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் அழிந்து செல்லும் கற்பகதருவான பனையின் பயன்களை எடுத்துக் கூறும் வகையிலானவினோத உடைப்போட்டிகளும்60, 80, 100, 200 மீற்றர் ஓட்டங்களும், பந்து பரிமாறல் சக்கர அஞ்சல், கலப்பு அஞ்சல் பழைய மாணவர்களின் 1500மீற்றர்ஓட்டமும்எழுமட்டுவாழ்வடக்குவிநாயகர்முன்பள்ளிசிறுவர்களின்இடைவேளைநிகழ்வும் இடம்பெற்றன. (ஐ-159)

தென்மராட்சி, பெப்.1
யாழ்ப்பாணம்மிருசுவில்விடத்தற்பளைகமலாசனி வித்தியாலயத்தின்இல்லமெய்வன்மைப்போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை அதிபர்இ.நாகேந்திரன்தலைமையில்நடைபெற்றன.
நிகழ்வில்முதன்மைவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர்த.சித்தார்த்தன்,சிறப்புவிருந்தினர்களாக சாவகச்சேரிபிரதேசசபைஉபதவிசாளர்செ.மயூரன், தென்மராட்சிகல்விவலயஉடற்கல்விசேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீகாந்தா,மதிப்புறு விருந்தினராக முன்னாள் ஆசிரியை திருமதி க.சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.1
யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள்பாடசாலைமைதானத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமைஅதிபர்திருமதி. ச.சிவகுமார் தலைமையில் நடைபெற்றன.
நிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன். சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொருளாளர் விக்ரோறியன் வி.உமாபதி. மதிப்புறு விருந்தினராக கல்லூரியின் ஓய்வு நிலைப் பகுதித்தலைவர் விக்ரோறியன் க.சிவதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)






★ ★ ★

கொடிகாமம், பெப்.1
யாழ்ப்பாணம்கொடிகாமம்திருநாவுக்கரசுமத்தியகல்லூரியின்இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய திட்டமிடல் அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் தலைவர் ம.சிறிதாசன் ஆகியோர்கலந்துகொண்டனர். கம்பர் இல்லம்851புள்ளிகளைப்பெற்றுமுதலாம்இடத்தையும், பாரதிஇல்லம்822புள்ளிகளைப் பெற்றுஇரண்டாம்இடத்தையும், வள்ளுவர்இல்லம்704புள்ளிகளைப் பெற்றுமூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ஐ-159)

கொடிகாமம், பெப்.1
யாழ்ப்பாணம் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்கலவன்பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அதிபர் அ.பவாநந்தன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில்முதன்மைவிருந்தினராகவடமராட்சிதெற்கு மேற்கு பிரதேசசபை உறுப்பினர் சதாசிவம் இராமநாதன், மதிப்புறு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்குபிரதேசசபையின் உறுப்பினர்களான நடராசசுந்தரம் சுதாகரன். சின்னத்துரை கிருபாகரன், செல்வராசா ஜெயராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-159)




★ ★ ★

கொடிகாமம், பெப்.1
யாழ்ப்பாணம் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டிகள்பாடசாலைமைதானத்தில்நேற்றுமுன்தினம்பிற்பகல்ஒரு மணியளவில் அதிபர் கா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெற்றன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக சட்டத்தரணியும் ஓய்வு நிலை கோட்டக் கல்வி பணிப்பாளருமான நா.சத்தியநாதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் செல்வி பிரதீபா கிருஷ்ணபிள்ளை.மதிப்புறு விருந்தினராகஆரம்பபிரிவுஓய்வுபெற்றபகுதித்தலைவர்திருமதிதயாபரிசூரியகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
விளையாட்டுப் போட்டிகள் பல இடம்பெற்றதுடன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ், வெற்றிக் கேடயங்கள் என்பனவும் வழங்கப்பட்டன. (ஐ-159)

★ ★ ★



கரணவாய், பெப்.1
யாழ்ப்பாணம் இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் அதிபர் இ.சிவசங்கர் தலைமையில் இடம்பெற்றன.
நிகழ்வில்முதன்மைவிருந்தினராகயாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களை வழங்கி வைத்தார். (ஐ-108)




# சுழிபுரம் விக்ரோறியன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 1

சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டியில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மூளாய் விக்ரோறியா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வழக்கம்பறை அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் 25:19, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)





## கபடித் தொடர்
## பூமலர்ந்தான் பீனீக்ஸ் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 1

மடுப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் கபடித் தொடரில் பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் பூமலர்ந்தான் பீனீக்ஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டையடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இறுதியாட்டம் இடம் பெற்றது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பூமலர்ந்தான் பீனீக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கட்டையடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 32:18 என்ற புள்ளி அடிப்படையில் பூமலர்ந்தான் பீனீக்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

## கபடித் தொடர்
## பன்னவெட்டுவான் சன்பிளவர் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 1

மடுப் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கபடித் தொடரில் ஆண்களுக்கான போட்டியில் பன்னவெட்டுவான் சன்பிளவர் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டையடம்பன் சென். மரியன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பன்னவெட்டுவான் சன்பிளவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சோதி நகர் செஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 44:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் பன்னவெட்டுவான் சன்பிளவர் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. (ஒ.23)

## ஐக்கியம், சென்.மரியன்ஸ் இறுதியாட்டத்துக்குத் தகுதி



சென். மரியன்ஸ் விளையாட்டுக்கழகம்



ஐக்கியம் விளையாட்டுக்கழகம்

மன்னார், பெப்.1

மடுப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் தட்சனாமருதமடு ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியும், கட்டையடம்பன் சென். மரியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

தம்பன்னைக்குளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் தட்சனமருதமடு ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூமலர்ந்தான் பீனிக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் தட்சனமருதமடு ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கட்டையடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து, பன்னவெட்டுவான் சன்பிளவர் விளையாட்டுக்கழக அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் கட்டையடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. (ஒ.23)

## கால்பந்தாட்டத் தொடர்
## இலுப்பைக்கடவை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி

கிளிநொச்சி, பெப். 1

முழங்காவில் செபஸ்ரியார் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக்கழக அணியை சமநிலை தகர்ப்பு உதைமூலம் வீழ்த்தி வெற்றி பெற்றது, இலுப்பைக்கடவை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி.

செபஸ்ரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இறுதியாட்டம் இடம்பெற்றது. இலுப்பைக்கடவை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி மோதியது.


ஆட்டத்தின் முதலாவது பாதியில் 16ஆவது நிமிடத்தில் மெசியா விளையாட்டுக்கழக அணியின் சார்பில் கோல் பதிவானது. முதல்பாதி ஆட்ட முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் அந்த அணி முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் பதிலடி 14ஆவது நிமிடத்தில் கொடுத்தது சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி. அந்த அணி தண்டனை உதைமூலமாகவே கோலாக்கியது. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 2:1 என்ற கோல் கணக்கில் இலுப்பைக் கடவை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

## கால்பந்துகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், பெப். 1

கடந்த ஆண்டு எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்துத் தொடரில் பங்குபற்றிய யாழ்ப்பாண லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட அணிகளுக்கான பந்துகள் வழங்கும் நிகழ்வு, அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண லீக்கின் அலுவலகத்தில் அதன் தலைவர் இ.ஆனோல்ட் தலைமையில் இடம்பெற்றது. போட்டியில் பங்குபற்றிய 33 கழகங்களுக்கு பந்துகள் வழங்கப்பட்டன. (ஒ.23)



## ஆஸியை விட நியூசி. சிறந்த அணி

### கூறுகிறார் ஹர்பஜன்

இந்தியக் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 2:1 எனக்கைப்பற்றியது. தற்போது நடைபெற்று வரும் நியூசிலாந்துக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

கடந்த 10 ஆண்டுகளின் பின்னர் இந்திய அணி நியூசிலாந்து மண்ணில் ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் தொடரைக் கைப்பற்றிய இந்திய அணிக்கு சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்; "தற்போதுள்ள நியூசிலாந்து அணி உண்மையிலேயே ஆஸ்திரேலியாவை விட சிறந்த அணி. ஆனால், இந்தியா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதை மறந்து விடக்கூடாது. சில நேரங்களில் மற்ற அணிகள் எப்படி சிறப்பாக விளையாடுகிறது என்பதை பார்க்கிறோம். ஆனால், சொந்த அணியின் சிறப்பான ஆட்டத்தை மறந்து விடுகிறோம். நம்முடைய அணிக்கு இணையாக எந்த அணியும் இல்லை.

இந்திய அணி விளையாடுவதை பார்க்கையில் மிகவும் சிறப்பாக உள்ளது. ஒவ்வொருவரும் நல்ல திறனில் உள்ளனர். முகமது ஷமி பற்றிப் பேச நான் விரும்புகிறேன். அபாரமாக பந்து வீசும் அவரைப் போன்ற ஒருவர் உலகக் கிண்ண அணிக்கு கட்டாயம் தேவை. நியூசிலாந்து அணி சிறந்த அணி. ஆனால் இந்தியா மிகவும் சிறப்பான அணி" -என்றார்.



# இந்திய அணியை சுருட்டி நியூசி. ஆறுதல் வெற்றி




இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. நான்காவது ஒருநாள் போட்டி நேற்று ஹமில்ரனில் இடம்பெற்றது. இதில் நியூசிலாந்து அணி 8 இலக்குகளால் இந்திய அணியை வீழ்த்தி இலகு வெற்றி பெற்றது.

இந்திய அணி 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியிருந்த நிலையில் நான்காவது போட்டி நேற்று இடம்பெற்றது. இந்தப் போட்டியில் முன்னணி வீரர்களான கோக்லி, டோனிக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரோகித், தவான் களமிறங்கினர். அணி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தவான் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்திய அணி 40 ஓட்டங்களுக்குள் 7 இலக்குகளை இழந்து பரிதவித்தது. அந்த அணியின் வீரர்கள் எவரும் 20 ஓட்டங்களைத் தாண்டவில்லை. சாஹல் மட்டும் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருக்க அணி 30.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களில் சுருண்டது.

பந்து வீச்சில் போல்ட் 5 இலக்குகளையும், கிரான்ட் ஹோம் 3 இலக்குகளையும், அஸ்ரல், நேசம் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 93 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலகு இலக்குக்காக களமிறங்கியது நியூசிலாந்து அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக குப்தில், நிக்கோலஸ் களமிறங்கினர். 40 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளை இழந்தது நியூசிலாந்து அணி. நிக்கோலஸ் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களுடனும், ரெயிலர் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களுடனும் களத்திலிருக்க நியூசிலாந்து அணி 14.4 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து இலகு வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் புவனேஸ்குமார் 2 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணி வீரர் போல்ட் தெரிவுசெய்யப்பட்டார்.

## மே.கிந்திய அணியில் அறிமுக வீரர் சேர்ப்பு

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் டெஸ்ட் போட்டியில் முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்து அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி நேற்று ஆரம்பமாகியது. இந்தப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் வேகப் பந்து வீச்சாளர் ஒஷானே தாமஸ் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

முதல் போட்டியின்போது ஜோசப் முதுகு வலியால் அவதிப்பட்டார். இதனால் பின்வரிசை வீரராக தாமஸ் அணியில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 21 வயதான தாமஸ் இதுவரை டெஸ்ட் போட்டியில் விளையாடியது இல்லை. ஆனால் நான்கு ஒருநாள் மற்றும் ஆறு ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.



## தொடரை இழந்தது பாகிஸ்தான் தென்னாபிரிக்கா இலகு வெற்றி

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா அணி. இதனால் ஒருநாள் போட்டித் தொடரை3:2 என்ற கணக்கில் கைப்பற்றியது தென்னாபிரிக்கா அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் பாகிஸ்தானைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக இம்மாம் உல் ஹக், சமான் களமிறங்கினர். அணி 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இம்மாம் உல் ஹக் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய பாபர் அசாம், சமானுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். அணி 150 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்தது. அதிகபட்சமாக சமான் 70ஓட்டங்களுடனும், சொய்ப் மலிக் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். வாசிம் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருக்க பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் பிறிரஸ், பிளுக்கவையோ தலா இரண்டு இலக்குகளையும், ஸ்ராய்ன், ரபாடா, மல்டர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 241 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிங்கிய் தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக டி குக், அம்லா களமிறங்கினர். தென்னாபிரிக்க அணி 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அப்ரிடியின் பந்து வீச்சில் அம்லா 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் ஹென்றிக்ஸ். அதிகபட்சமாக டி குக் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 83 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டூ பிளசிஸ், வன் டீர் டுசன் இருவரும் 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருக்க தென்னாபிரிக்கா அணி 40 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளால் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் அப்ரிடி, மொகமட் அமீர், சின்வாரி ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக தென்னாபிரிக்கா வீரர் குயின்டர் டீ குக் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையில் மூன்று ரி-20 ஆட்டங்கள் இடம்பெறவுள்ள நிலையில் முதலாவது ரி-20 ஆட்டம் இன்று கேப்ரவுனில் ஆரம்பமாகின்றது.

## 10 பந்துப்பரிமாற்றங்கள் தாக்குப்பிடித்தால் வெற்றி

### நியூசி. வீரர் சான்ட்னெர் தெரிவித்தார்

நியூசிலாந்து - இந்தியா அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் மூன்று போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்று 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இந்த நிலையில் கடந்த போட்டியில் நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். ஆனால், இந்திய துடுப்பாட்ட வீரர்கள் எங்களை வெளியேற்றிவிட்டார்கள் என்று நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளரான மிட்செல் சான்ட்னெர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; "நாங்கள் சிறந்த அணியுடன் நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறோம். ஆனால் போதுமான அளவுக்கு திறமையை வெளிப்படுத்தவில்லை. எங்களுடைய திட்டம் சரியாகத்தான் இருந்தது. ஆனால் அதை வெளிப்படுத்துவதில் தவறு நிகழ்ந்துள்ளது. மத்திய வரிசையில் இந்தியாவின் முன்னணி இலக்குகளை வீழ்த்தி ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்துவது அவசியம். இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் எங்களை வெறுக்கும் அளவுக்கு வெளியேற்றி விட்டனர். அவர்களின் இலக்குகளை விரைவில் வீழ்த்தும் வழியைத்தேட வேண்டும். துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் போட்டி முழுவதும் சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்போம். முதல் 10 பந்துப்பரிமாற்றங்களில் இந்திய பந்து வீச்சாளர்கள் அற்புதமாக பந்து வீசுகிறார்கள். முதல் 10 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் இழக்கப்படாமல் பார்த்துக் கொண்டால் பின்னர் எங்களிடம் திறமையான அதிரடித் துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். இதனால் சிறந்த இலக்கை அடைய முடியும் - என்றார்.

# மலிங்கவின் மனைவி திசார பெரேரா மோதல்



இலங்கை அணியின் முன்னணி பந்து வீச்சாளரும் இலங்கை அணியின் தலைவருமாக லசித் மலிங்க விளங்குகின்றார். அவரது மனைவிக்கும் இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரரான திசாரா பெரேராவுக்கும் சமூக வலைத் தளத்தில் ஏற்பட்ட கருத்துக்களால் மோதல் ஏற்பட்டுள்ளது.

மலிங்க நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கடந்த செப்ரெம்பர் மாதம் அணிக்குத் திரும்பினார். அத்துடன் அவருக்கு ஒருநாள், ரி-20 போட்டிகளின் அணித் தலைவராக பதவியும் வழங்கப்பட்டது. முன்னர் ஒருநாள் அணிக்கு சந்திமல்லும், ரி-20 அணிக்கு திசார பெரேராவும் அணித் தலைவர்களாக விளங்கினர்.

பெரேரா, சமீபத்தில் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 74 பந்துகளில் 140 ஓட்டங்கள் விளாசி அனைவரது கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் திசரா பெரேராவுக்கும், மலிங்காவின் மனைவிக்கும் திடீரென மோதல் வெடித்துள்ளது. முகப் புத்தகத்தில் மலிங்கவின் மனைவி வெளியிட்ட ஒரு பதிவில், 'நாட்டின் புதிய விளையாட்டுத்துறை அமைச்சரை திசரா பெரேரா சந்தித்து, உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான அணியில் தனது இடத்தை உறுதி செய்ய முயற்சிக்கிறார்' என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார். அவரது குற்றச்சாட்டு இலங்கை கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து திசரா பெரேரா, இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி ஆஷ்லே டி சில்வாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் பெரேரா தெரிவித்ததாவது; மலிங்கவின் மனைவி இது போன்று சமூக வலைத்தளத்தில் குற்றம் சாட்டுவது மக்களிடம் என்னைப் பற்றி தவறான எண்ணத்தை உருவாக்கும். அவரது 'முகப்புத்தக' பதிவுக்கு பின்னர் வீரர்களின் ஓய்வறையில் அசௌகரியமான சூழல் நிலவுகிறது. அணியில் இளம் வீரர்களுக்கிடையில் இரு மூத்த வீரர்கள் கருத்து வேறுபாடுகளை கொண்டிருப்பது நல்லதல்ல. தலைமைப் பண்பு என்பது, அணிக்குள் நிலைத்தன்மை மற்றும் ஒற்றுமையை உருவாக்குவது ஆகும்.

இது போன்ற தேவையற்ற சமூக வலைதள சர்ச்சைகளை தவிர்த்து, ஆரம்பமாகவிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கவனம் செலுத்துதல் அவசியம். ஒருங்கிணைந்து வலுவான அணித் தலைவரின் கீழ் அணி பயணிக்க வேண்டியது அவசியம். அணித் தலைவரும், மூத்த வீரர்களும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும்.

தனிப்பட்ட நபரின் பழிவாங்கும் செயற்பாட்டால் ஒட்டுமொத்த தேசமும் கேலிக்கூத்தாகியுள்ளது. தற்போதைய சூழலில் இதை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இதனை இலங்கை கிரிக்கெட் சபை தலையிட்டு இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்' - என்றார்.


Feb 10 இல் நடைபெறவுள்ள SLPS - 3
(இலங்கை அதிபர்சேவை)
P.கமல்தாசன் மற்றும் வளவாளர்குழுவினர்
விசேட இறுதிக்கருத்தரங்குகள்
02.02.2019 சனி 9AM → 3PM
09.02.2019 சனி 9AM → 4PM
விசேட வகுப்புக்கள்
05/02, 07/02, 08/02 ஆகிய தினங்களில் 3PM→6PM வரை
வளவாளர்கள்
P.கமல்தாசன்(SLPS)
A.சுபாகரன்(SLEAS)
K.குமணன்(SLPS)
S.மகாலிங்க சிவம்(MA)
K.கீர்த்திராஜன்(MA)
நாவலர் கல்வி நிறுவனம் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
077 111 6739

இறுதிக் கருத்தரங்குகள்
P.உமாசங்கர் & வளவாளர் குழு
பெப்ரவரியில் நடைபெறவுள்ள அதிபர் சேவை SLPS 3
03/02 ஞாயிறு, 04/02 திங்கள் 9.00am - 4.00pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
சுகாதார முகாமை உதவியாளர்
03/02 ஞாயிறு, 04/02 திங்கள் 9.00am - 2.00pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 469 6695, 071 813 0390, 077 741 7143, 077 394 2964

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
A/L கணக்கீடு
MR.BALAKAJAN M.Com
A/L 2021, A/L 2020, A/L 2019

| கந்தர்மடம் | கொழும்புத்துறை |
|---|---|
| Tue, Friday 5-7 pm | Sat, Sun 2-8 pm |

யாழ் நகரில் A/L 2018 இன் முன்னணி பெறுபேறுகள்
Rank 01 செல்வி சாம்பவி ஜெயதிலக
Rank 06 செல்வி மகிழரசி புவியழகன் A30, B25
075 077 5660

வீடு வாடகைக்கு தேவை
யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.
- 077 959 2628



வீடு வாடகைக்கு தேவை
யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.
- 077 959 2628



தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) தேவை
யாழ்நகரில் நிர்மாணிக்கப்பட்டு கொண்டிருக்கும் நான்கு மாடிக் கட்டட Finishing வேலைகளை மேற்பார்வை செய்ய நன்கு அனுபவும் வாய்ந்த முழுநேர தொழில் நுட்ப உத்தியோகத்தர் தேவை.
071 847 5531/ 076 175 5934

வேலைவாய்ப்பு
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை நிறுவனத்தில் "வாடிக்கையாளர் சேவை" உத்தியோகத்தராக கடமையாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை 02.02.2019 சனிக்கிழமை காலை 9.00 மணி - 11 மணிவரை நேரில் சமூகம் தரவும்
அருள் பிறைவேற் லிமிடட், 10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 076 443 1576

NEC
01. மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
02. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
வர்த்தகப்பிரிவு
கணக்கீடு K. பாலகஜன்
வணிகக்கல்வி S.K. பாலசுபேஷ்
பொருளியல் S.ஜெயக்குமார்/ K.பிரதீபன்
A/L 2021, A/L 2020, A/L 2019
Day Class
புதிய பிரிவுகள் ஆரம்பம்
02.02.2019 சனி காலை 8.00 மணி
T.P - 077469 6695, 070 339 6696

ஆசிரியர் தேவை
யாழ் நகரில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு தரம் 3,4,5 வகுப்புக்களுக்கு தமிழ், கணிதம், கற்பிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் உடன்தேவை
077 459 8440


ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 03 - 1936



மறைவு 20 - 01 - 2012

மீசாலை

திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்)

திதி: அபரபக்க ஏகாதசி (01.02.2019)

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே !
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே !
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப்பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ ?
ஆண்டுகள் ஏழாகித் தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில் ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம். | சிவகிரி, மீசாலை வடக்கு, மீசாலை. | 71/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(CS 22859)(04.17)


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1540 சீட்டிழுப்பு திகதி 31.01.2019
வெற்றி இலக்கங்கள் 14 22 50 61 0
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ 25, 624, 388/=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 31.01.2019 வெற்றி வாரம் 2447 வர்ணம் கபிலம்
கன்னி
வெற்றி இலக்கங்கள் 11 21 25 27
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 9, 015, 894 /=
01.02.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 512
ரூ. 58,706,980/-
சீட்டிழுப்பு திகதி 2019.01.31
வெற்றி இலக்கங்கள் 02 44 55 61 U


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.